Government of Madras

THE

TAMIL TEXT-BOOK

(FOR DETAILED STUDY)

FOR

THE T.S.L.C. EXAMINATION

(LOWER ELEMENTARY GRADE)

1934

MADRAS
PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS

1932

TB.
031(11)
N34
221692

Government of Madras

THE TAMIL TEXT-BOOK

(FOR DETAILED STUDY)

FOR

THE T.S.L.C. EXAMINATION

(LOWER ELEMENTARY GRADE)

1934

MADRAS
PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS

1932

[SELECTIONS IN POETRY AND PROSE TO BE STUDIED FOR THE TRAINING-SCHOOL LEAVING CERTIFICATE EXAMINATION (ELEMENTARY LOWER GRADE), 1934.]

சூசி பத்திரம்.

செய்யுள்.

பக்கம்.

கடவுள் வாழ்த்து 1
நாரை விடு தூது 1
நளவெண்பா 1
நல்வழி 5
நன்னெறி 5
கபிலர் அகவல் 6

வசனம்.

I. திருவிளையாடற் புராணம் (ஆறுமுக நாவலர்) :

1. திருவாதவூர் அடிகளுக்கு உபதேசித்த படலம் 7
2. நரி பரி ஆக்கிய படலம் 12
3. பரி நரி ஆக்கிய படலம் 16
4. மண் சுமந்த படலம் 18

II. ஜநவிநோதினி :

1. சிருஷ்டியின் அதிசயங்கள் 23
2. சிருஷ்டியைக் கொண்டு சிருஷ்டி கர்த்தாவைக் கண்டுகொள் 25
3. சணல் 28
4. காலமே கருந்தனம் 31
5. உப்பும் உப்புக்கனியும் 34
6. யோக்கியதை 39
7. பூமியிற் புதையுண்ட பட்டணம் 42
8. ஞானத்தை ஏற்றபடி உபயோகித்தல் 45
9. அகல்யாபாய் 48

கடவுள் வாழ்த்து.

தேவாரம்.

* பொன்னார் மேனியனே, புலித்தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர் கொன்றை அணிந்தவனே,
மன்னே, மாமணியே, மழபாடியுள் மாணிக்கமே,
அன்னே, உன்னை அல்லால் இனியாரை நினைக்கேனே ? (1)

* வெய்ய விரிசுடரோன் மிகுதேவர் கணங்களெல்லாம்
செய்ய மலர்களிட மிகுசெம்மையுள் நின்றவனே,
மையார் பூம்பொழில் சூழ் மழபாடியுள் மாணிக்கமே,
ஐயா, நின்னை அல்லால் இனியாரை நினைக்கேனே ? (2)

நாரை விடு தூது.

நாராய்! நாராய் ! செங்கால் நாராய் !
பழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன
பவளக் கூர்வாய்ச் செங்கால் நாராய் !
நீயும் நின் பெடையும்
தென்திசைக் குமரி ஆடி, வடதிசைக்
காவிரி ஆட ஏகுவி ராயின்,
சத்தி முத்த வாவியில் தங்கி,
நனைசுவர்க் கூரைக் கனைகுரற் பல்லிப்
பாடுபார்த் திருக்குமென் மனைவியைக் கண்டு, ' எம்
கோமான் வழுதி கூடல் மன்றத்து
ஆடை இன்றி வாடையின் மெலிந்து,
கையது கொண்டு மெய்யது பொத்தி,
காலது கொண்டு மேலது தழீஇ,
பேழையு ளிருக்கும் பாம்பென உயிர்க்கும்
ஏழை யாளனைக் கண்டனம்' எனுமே !

நளவெண்பா.

கலி தொடர் காண்டம்.

மென்காற் சிறைஅன்னம் வீற்றிருந்த மென்மலரைப்
புன்காகம் கொள்ளத் தான் போனாற்போல்,—தன்கால்
பொடியாடத் தேவியோடும் போயினான் அன்றே
கொடியானுக் கப்பார் கொடுத்து. (1)

' ஆருயிரின் தாயே ! அறத்தின் பெருந்தவமே !
பேர்அருளின் கண்ணே ! பெருமானே !—பாரிடத்தை
யார்காக்கப் போவதுநீ யாங்'கென்றார் தம்கண்ணின்
நீர்வார்த்துக் கால்கழுவா நின்று. (2)

' வடியேறு கூர்இலைவேல் மன்னாவோ ! உன்றன்
அடியேங்கட் காதரவு தீரக்—கொடிநகரில்
இன்றிருந்து நாளை எழுந்தருள்க!' என்றுரைத்தார்
வென்றிருந்த தோளான்தாள் வீழ்ந்து. (3)

மன்றலிளங் கோதை முகம்நோக்கி, மாநகர்வாய்
நின்றுருகு வார்கண்ணின் நீர்நோக்கி,—' இன்றிங்
கிருத்துமோ ?' என்றான் இளங்குதலை வாயாள்
வருத்தமோ தன்மனத்தில் வைத்து. (4)

---

* இக்குறிப்பிட்ட பாட்டுகள் மனப்பாடமாகத் தெரியவேண்டும்.

“ வண்டாடுந் தார்நளனை மாநகரில் யாரேனும்
கொண்டாடினார்தம்மைக் கொல்என்று—தண்டா
முரசறைவாய் ஆங்கெ” ன்றான் முன்னே முனிந்தாங்
கரசறியா வேந்தன் அழன்று. (5)

அறையும் பறைஅரவங் கேட்டழிந்து நையும்
பிறைநுதலாள் பேதைமையை நோக்கி—முறுவலியா,
‘ இந்நகர்க்கீ தென்பொருட்டா வந்ததெ’ ன உரைத்தான்
மன்னகற்றுங் கூரிலைவேல் மன். (6)

சந்தக் கழற்றா மரையும், சதங்கையணி
பைந்தளிரும் நோவப் பதைத்துருகி,—‘ எந்தாய் !
வடந்தோய் களிற்றாய் ! வழியான தெல்லாங்
கடந்தோமோ ?’ என்றாள் கலுழ்ந்து. (7)

‘ காதல் இருவரையும் கொண்டு கடுஞ்சுரம்போக்
கேத முடைத்திவரைக் கொண்டுநீ,—மாதராய் !
வீமன் திருநகர்க்கே மீள்’ என்றான் விண்ணவர்முன்
தாமம் புனைவாளைத் தான். (8)

‘ குற்றமில் காட்சிக் குதலைவாய் மைந்தரையும்
பெற்றுக் கொளலாம், பெறலாமோ,—கொற்றவனே !
கோக்கா தலனைக் குலமகளுக் கென்றுரைத்தாள்
நோக்கால் மழைபொழியா நொந்து. (9)

* ‘ பொன்னுடைய ரேனும் புகழுடைய ரேனும்மற்
றென்னுடைய ரேனும் உடையரோ,—இன்னடிசில்
புக்களையுந் தாமரைக்கைப் பூநாறுஞ் செய்யவாய்
மக்களைஇங் கில்லா தவர் ? (10)

* ‘ சொன்ன கலையின் துறைஅனைத்தும் தோய்ந்தாலும்
என்ன பயனுடைத்தாம், இன்முகத்து—முன்னம்
குறுகுதலைக் கிண்கிணிக்காற் கோமக்கள் பால்வாய்ச்
சிறுகுதலை கேளாச் செவி ? (11)

‘ போற்றரிய செல்வம் புனல்நாட் டொடும்போகத்
தோற்றமையும் யாவர்க்கும் தோற்றாதே,—ஆற்றலாய் !
எம்பதிக்கே போந்தருளு கெ’ ன்றாள் எழிற்கமலச்
செம்பதிக்கே வீற்றிருந்த தேன். (12)

* “ சினக்கதிர்வேற் கண்மடவாய் ! செல்வர்பாற் சென்‘றீ
எனக்கெ’ ன்னும் இம்மாற்றங் கண்டாய்—தனக்குரிய
தானம் துடைத்துத் தருமத்தை வேர்பறித்து
மானந் துடைப்பதோர் வாள். (13)

* “ மன்னராய் மன்னர் தமைஅடைந்து வாழ்வெய்தி
இன்னமுதம் தேக்கி இருப்பாரேல்,—சொன்ன
பெரும்பே டிகள்அலரேற் பித்தரே அன்றோ,
அரும்பேடை மானே அவர் ? ” (14)

‘ செங்கோலாய் ! உன்றன் திருஉள்ளம் ஈதாயின்
எங்கோன் விதர்ப்பன் எழில்நகர்க்கே—நங்கோலக்
காதலரைப் போக்கி யருள்’ என்றாள் காதலருக்
கேதிலரைப் போல எடுத்து. (15)

தந்தை திருமுகத்தை நோக்கித் தமைப்பயந்தாள்
இந்து முகத்தை எதிர்நோக்கி,—‘ எந்தம்மை
வேறாகப் போக்குதிரோ ?’ என்றார் விழிவழியே
ஆறாகக் கண்ணீர் அழுது. (16)

---

* இக்குறிப்பிட்ட பாட்டுகள் மனப்பாடமாகத் தெரியவேண்டும்.

இருவர் உயிரும் இருகையால் வாங்கி
ஒருவன்கொண் டேகுவான் ஒத்து—வரும்மறையோன்
கோமைந்த ரோடிளைய கோதையைக்கொண் டேகினான்
வீமன் நகர்க்கே விரைந்து. (17)

சேலுற்ற வாவித் திருநாடு பின்ஒழியக்
காவிற்போய்த் தேவியோடுங் கண்ணுற்றான்—ஞாலஞ்சேர்
கள்ளிவே கத்தரவின் கண்மணிகள் தாம்பொடியாத்
துள்ளிவே கின்ற சுரம். (18)

கன்னிறத்த சிந்தைக் கலியுமவன் முன்பாகப்
பொன்னிறத்த புள்வடிவாய்ப் போந்திருந்தான்—நன்னெறிக்கே
அஞ்சிப்பார் ஈந்த அரசனையுந் தேவியையும்
வஞ்சிப்பான் வேண்டி வனத்து. (19)

தேன்பிடிக்கும் தண்துழாய்ச் செங்கட் கருமுகிலை
மான்பிடிக்கச் சொன்ன மயிலேபோல்,—தான்பிடிக்கப்
'பொற்புள்ளைப் பற்றித்தா!' என்றாள் புதுமழலைச்
சொற்கிள்ளை வாயாள் தொழுது. (20)

பொற்புள் ளதனைப் பிடிப்பான் நளன்புகுதக்
கைக்குள்வரு மாபோற் கழன்றோடி—எய்க்கும்
இளைக்குமா போல இருந்ததுகண் டன்றே
வளைக்குமா றெண்ணினான் மன். (21)

'கொற்றக் கயற்கட் கொடியே! இருவோரும்
ஒற்றைத் துகிலால் உடைபுனைந்து,—மற்றிந்தப்
பொற்றுகிலாற் புள்வளைக்கப் போதுவோம்' என்றுரைத்தான்
பற்றகலா உள்ளம் பரிந்து. (22)

கூந்தல் இளங்குயிலும் கோமானும் கொண்டணைத்த
பூந்துகில்கொண் டந்தரத்தே போய்நின்று,—'வேந்தனே!
நன்னாடு தோற்பித்தோன் நானேகாண்!' என்றதே
பொன்னாடு மாநிறத்த புள். (23)

காவிபோற் கண்ணிக்குங் கண்ணியந்தோட் காளைக்கும்
ஆவிபோல் ஆடையும்ஒன் றானதே!—பூவிரியக்
கள்வேட்டு வண்டுழலுங் கானத் திடைக்கனகப்
புள்வேட்டை ஆதரித்த போது. (24)

பானு நெடுந்தேர் படுகடலிற் பாய்ந்ததன்பின்
கான அடம்பின் கவட்டிலைகள்—மானின்
குளம்பேய்க்கும் நன்னாடன் கோதையொடுஞ் சென்றான்
இளம்பேய்க்கும் தோன்றா இருள். (25)

எங்காம் புகல்இடமென் றெண்ணி இருள்வழிபோய்
வெங்கா னகம்திரியும் வேலைதனில்—அங்கேஓர்
பாழ்மண் டபம்கண்டான் பால்வெண் குடைநிழற்கீழ்
வாழ்மண் டபம்கண்டான் வந்து. (26)

'மூரி இரவும்போய் முற்றிருளாய் மூண்டதால்,
சாரும் இடம்மற்றுத் தான்இல்லை,—சோர்கூந்தல்
மாதராய்! நாம்இந்த மண்டபத்தே கண்துயிலப்
போதராய்' என்றான் புலர்ந்து. (27)

'வையம் உடையான் மகரயாழ் கேட்டருளும்
தெய்வச் செவிகொதுகின் சில்பாடல்—இவ்விரவில்
கேட்டவா!' என்றழுதாள் கெண்டைஅங்கண் நீர்சோரத்
தோட்டவார் கோதையாள் சோர்ந்து. (28)

‘புன்கண்கூர் யாமத்துப் பூமிமேற் றுன்படுத்துத்
தன்கண் துயில்வாளைத் தான்கண்டும்,—என்கண்
பொடியாதால்! உள்ளாவி போகாதால்! நெஞ்சம்
வெடியாதால்!’ என்றான் விழுந்து. (29)

காரிகைதன் வெந்துயரம் காணமல் நீத்தந்தக்
கூரிருளிற் போவான் குறித்தெழுந்து,—நேரே
இருவர்க்கும் ஒருயிர்போல் எய்தியதோர் ஆடை
அரிதற் கவன்நினைந்தான் ஆங்கு. (30)

ஒற்றைத் துகிலும் உயிரும் இரண்டாக
முற்றும்தன் அன்பை முதலோடும்—பற்றி
அரிந்தான், அரிந்திட் டவள்நிலைமை நெஞ்சில்
தெரிந்தான் இருந்தான் திகைத்து. (31)

போய்ஒருகால் மீளும், புகுந்தொருகால் மீண்டேகும்;
ஆயர் கொணர்ந்த அடுபாலின்—தோயல்
கடைவார்தம் கைபோலும் ஆயிற்றே காலன்
வடிவாய வேலான் மனம். (32)

‘தீக்கா னகத்துறையும் தெய்வங்காள்! வீமன்தன்
கோக்கா தலியைக் குறிக்கொண்மின்!—நீக்காத
காதலன்பு மிக்காளைக் காரிருளிற் கைவிட்டின்
றேதிலன்போற் போகின்றேன் யான்!’ (33)

தாருளனப் பார்மேற் றருசந் திரன்சுவர்க்கி
மேருவரைத் தோளான் விரவார்போல்,—கூரிருளில்
செங்கால் நகம்சிதையத் தேவியைவிட் டேகினான்
வெங்கா னகந்தனிலே வேந்து. (34)

வெய்ய தரைஎன்னும் மெல்அமளி யைத்தடவிக்
கையரிக்கொண் டெவ்விடத்தும் காணமல்,—‘ஐயகோ!’
என்னப்போய் வீழ்ந்தாள், இனமேதி மென்கரும்பைத்
தின்னப்போம் நாடன் திரு. (35)

* தையல் துயர்க்குத் தரியாது தம்சிறகாம்
கையால் வயிறலைத்துக் காரிருள்வாய்—வெய்யோனை
‘வாவுபரித் தேரேறி வா!’ என் றழைப்பனபோல்
கூவினவே கோழிக் குலம். (36)

வான நெடுவீதி செல்லும் மணித்தேரோன்
தான் அம்மடந்தைக்குத் தார்வேந்தன்—போனநெறி
காட்டுவான் போல்இருள்போய்க் கைவாங்கக் கானூடே
நீட்டுவான் செங்கரத்தை நின்று. (37)

‘செய்தபிழை ஏதெ’ன்னும், ‘தேர்வேந்தே!’ என்றழைக்கும்,
‘எய்துதுய ரக்கரைகா ணேன்!’ என்னும்,—பையவே
‘என்னென்ன தென்?’ என்னும், ‘இக்கானில் விட்டேகும்
மன்!’ என்ன வாடும் அயர்ந்து. (38)

‘வெறித்த இளமான்காள்! மென்மயில்காள்! இந்த
நெறிக்கண் நெடிதூழி வாழ்வீர்!—பிறித்தெம்மைப்
போனரைக் காட்டுதிரோ!’ என்னப் புலம்பினாள்
வான்நாடர் பெற்றிலா மான். (39)

வேட்ட கரியை விழுங்கிப் பெரும்பசியால்
மோட்டு வயிற்றரவு முன்தோன்ற—மீட்டதனை
ஓரா தருகணைந்தாள் உண்தேன் அறற்கூந்தற்
போர்ஆர் விழியாள் புலர்ந்து. (40)

* இக்குறிப்பிட்ட பாட்டுகள் மனப்பாடமாகத் தெரியவேண்டும்.

*'வாள்அரவின் வாய்ப்பட்டு மாயாமுன், மன்னவ! நின்
தாள்அடைந்து வாழும் தமியேனைத்—தோளால்
விலக்காயோ!' என்றழுதாள் வெவ்வரவின் வாய்க்கிங்
கிலக்காகி நின்றாள் எடுத்து. (41)

*'வென்றிச் சினஅரவின் வெவ்வா யிடைப்பட்டு
வன்றுயரால் போய்ஆவி மாள்கின்றேன்—இன்றுன்
திருமுகம்நான் காண்கிலேன், தேர்வேந்தே!' என்றாள்
பொருமுகவேற் கண்ணாள் புலர்ந்து. (42)

*'மற்றெடுத்த தோள்பிரிந்தும் மாயாத வல்வினையேன்
பெற்றெடுத்த மக்காள்! பிரிந்தேகும்—கொற்றவனை
நீரேனுங் காண்குதிரோ!' என்றழுதாள் நீள்குழற்குக்
காரேனும் ஒவ்வாள் கலுழ்ந்து. (43)

'அடையும் கடுங்கானில் ஆடரவின் வாய்ப்பட்
டுடையுமுயிர், நாயகனே! ஓகோ!—விடைஎனக்குத்
தந்தருள்வாய்!' என்னாத்தன் தாமரைக்கை கூப்பினாள்
செந்துவர்வாய் மென்மொழியாள் தேர்ந்து. (44)

உண்டோர் அழுகுரலென் றெற்றி வருகின்ற
வெண்டோடன் செம்பங்கி வில்வேடன்—கண்டான்
கழுகுவாழ் கானகத்துக் கார்அரவின் வாயின்
முழுகுவாள் தெய்வ முகம். (45)

சங்க நிதிபோற் றருசந் திரன்சுவர்க்கி
வெங்கலிவாய் நின்றுலகம் மீட்டாற்போல்—மங்கையைவெம்
பாம்பின்வாய் நின்று பறித்தான் பகைகடிந்த
காம்பின்வாய் வில்வேடன் கண்டு. (46)

'ஆருயிரும் நானும் அழியாமல், ஐயா! இப்
பேர்அரவின் வாயிற் பிழைப்பித்தாய்!—தேரில்
இதற்குண்டோ கைம்மாறெ'னஉரைத்தாள் வென்றி
விதர்ப்பன்தான் பெற்ற விளக்கு. (47)

நல்வழி.

* ஆன முதலில் அதிகஞ் செலவானால்
மானம் அழிந்து மதிகெட்டுப்—போனதிசை
எல்லார்க்கும் கள்ளனாய் ஏழ்பிறப்பும் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனாம் நாடு. (1)

* வெட்டனவை மெத்தனவை வெல்லாவாம்; வேழத்தில்
பட்டுருவுங் கோல்பஞ்சிற் பாயாது—நெட்டிருப்புப்
பாரைக்கு நெக்குவிடாப் பாறை பசுமரத்தின்
வேருக்கு நெக்கு விடும். (2)

* பூவாதே காய்க்கும் மரமுமுள; மக்களுள்ளும்
ஏவாதே நின்றுணர்வார் தாம்உளரே—தூவா
விரைத்தாலும் நன்றாகா வித்தெனவே பேதைக்
குரைத்தாலும் தோன்றா துணர்வு. (3)

நன்னெறி.

* உள்ளம் கவர்ந்தெழுந் தோங்கு சினம்காத்துக்
கொள்ளும் குணமே குணம்என்க.—வெள்ளம்
தடுத்தல் அரிதோ? தடங்கரைதான் பேர்த்து
விடுத்தல் அரிதோ? விளம்பு. (1)

---

* இக்குறிப்பிட்ட பாட்டுகள் மனப்பாடமாகத் தெரியவேண்டும்.

* பொய்ப்புலன்கள் ஐந்தும்நோய் புல்லியர்பா லன்றியே
மெய்ப்புலவர் தம்பால் விளையாவாம்.—துப்பிற்
சுழற்றுங்கொல் கற்றூணைச் சூறு வளி ?போய்ச்
சுழற்றும் சிறுபுன் துரும்பு. (2)

* பெரியவர்தம் நோய்போற் பிறர்நோய்கண் டுள்ளம்
எரியின் இழுதாவர் என்க.—தெரிஇழாய் !
மண்டு பிணியால் வருந்து பிறஉறுப்பைக்
கண்டு கலுழுமே கண். (3)

* உண்டு குணம்இங் கொருவர்க் கெனினும்கீழ்
கொண்டு புகல்வதவர் குற்றமே.—வண்டுமலர்ச்
சேக்கை விரும்புஞ் செழும்பொழில்வாய் வேம்பன்றே
காக்கை விரும்புங் கனி. (4)

* அறிவுடையா ரன்றி அதுபெறுர் தம்பாற்
செறிபழியை அஞ்சார் சிறிதும்.—பிறைநுதலாய் !
வண்ணஞ்செய் வாள்விழியே யன்றி மறைகுருட்டுக்
கண்அஞ்சு மோஇருளைக் கண்டு ? (5)

கபிலர் அகவல்.

(ஒன்றே இன்னே செய்யவேண்டும்.)

*உலகத் தீரே ! உலகத் தீரே !
நாக்கடிப் பாக வாய்ப்பறை அறைந்து
சாற்றக் கேண்மின், சாற்றக் கேண்மின் :—
மனிதர்க்கு வயது நூறல்ல தில்லை ;
ஐம்ப திரவில் அகலும் துயிலினல் ;
ஒட்டிய இளமையால் ஒரைந்து நீங்கும் ;
ஆக்கை இளமையில் ஐம்மூன்று நீங்கும் ;
எழுபது போகநீக் கிருப்பன முப்பதே.
அவற்றுள்
இன்புறு நாளும் சிலவே, அதாஅன்று
துன்புறு நாளும் சிலவே ; ஆதலால்
பெருக்கா றெத்தது செல்வம், பெருக்காற்
றிடிகரை ஒத்த திளமை, இடிகரை
வாழ்மரம் ஒத்தது வாழ்நாள். ஆதலால்
ஒன்றே செய்யவும் வேண்டும், ஒன்றும்
நன்றே செய்யவும் வேண்டும், நன்றும்
இன்றே செய்யவும் வேண்டும், இன்றும்
இன்னே செய்யவும் வேண்டும். இன்னும்
நாளை நாளை என்பீ ராகில்,
நமனுடை முறைநாள் ஆவதும் அறியீர்,
நம்முடை முறைநாள் ஆவதும் அறியீர்.
எப்போ தாயினும் கூற்றுவன் வருவான் ;
அப்போ தந்தக் கூற்றுவன் தன்னைப்
போற்றவும் போகான், பொருளொடும் போகான்,
சாற்றவும் போகான், தமரொடும் போகான்,
நல்லார் என்னுன், நல்குர வறியான்,
தீயார் என்னுன், செல்வரென் றுன்னுன்,
தரியான் ஒருகணம், தறுக ணாளன்,
உயிர்கொடு போவான், உடல்கொடு போகான்.
ஏதுக் கழுவீர் ஏழை மாந்தர்காள் ?
உயிரினை இழந்தோ, உடலினை இழந்தோ ?
உயிரிழந் தழுதுமென் றேதுவீ ராகில்,
உயிரினை அன்றலா தின்றும் காண்கிலீர்.

* இந்தப்பாட்டுகளும் 1-29 அகவல் அடிகளும் மனப்பாடமாகத் தெரியவேண்டும்.

உயிரினை இழந்த உடலது தன்னைக்
களவு கொண்ட கள்வனைப் போலக்
காலும் ஆர்த்துக் கையும் ஆர்த்துக்
கூறை களைந்து கோவணம் கொளீஇ,
ஈமத் தீயை எரிஎழ மூட்டிப்
பொடிபடச் சுட்டுப் புனலிடை மூழ்கிப்
போய்த்தம ரோடும் புந்திநைந் தழுவது
சலமெனப் படுமோ சதுரெனப் படுமோ ?

(சிறப்பும் சீலமுமே நலம் தரும்.)

மாரிதான் சிலரை வரைந்து பெய்யுமோ ?
காற்றும் சிலரை நீக்கி வீசுமோ ?
மாநிலம் சுமக்க மாட்டேன் என்னுமோ ?
கதிரோன் சிலரைக் காயேன் என்னுமோ ?
மேல்நான்கு சாதிக் குணவு நாட்டிலும்
கீழ்நான்கு சாதிக் குணவு காட்டிலுமோ ?
திருவும் வறுமையும் செய்தவப் பேறும்
சாவதும் வேறிலை தரணி யோர்க்கே.
குலமும் ஒன்றே, குடியும் ஒன்றே,
இறப்பும் ஒன்றே, பிறப்பும் ஒன்றே,
வழிபடும் தெய்வமும் ஒன்றே, ஆதலால்
முன்னோர் உரைத்த மொழி தவறாமல்,
எந்நா ளாயினும் இரப்பவர்க் கிட்டுப்
புலையும் கொலையும் களவும் தவிர்ந்து,
நிலைபெற அறத்தில் நிற்பதை அறிந்து,
ஆணும் பெண்ணும் அல்லதை உணர்ந்து
பேணி உரைப்பது பிழையெனப் படாது.
சிறப்பும் சீலமும் அல்லது
பிறப்பு நலம்தருமோ, பேதை யீரே ?

I

திருவிளையாடற் புராணம்.

---

1. திருவாதவூர் அடிகளுக்கு உபதேசித்த படலம்.

பாண்டிவளநாட்டிலே, வைகையாற்றின் கரையிலுள்ள திருவாதவூரிலே அமாத்தியப் பிராமணகுலத்திலே, வைதிகமார்க்கமுஞ் சைவமார்க்கமும் விளங்கவும், பௌத்தமதமாகிய இருளுடைந்தோடவும், பாலசூரியன் போல ஒரு சற்புத்திரர், சிவபெருமானுடைய திருவருளினாலே, திருவவதாரஞ்செய்தார். அவருக்குத் திருவாதவூரர் என நாமகரணஞ் செய்தார்கள். அவர் கர்ணவேதன முதலிய மற்றைச் சடங்குகளும் வேதவிதிப்படி செய்யப்பெற்று, இளம் பிறைபோல் வளருவாராய், பதினாறுவயசினுள் வேத முதலிய அறுபத்துநான்கு கலைகளையும் கற்று வல்லவராயினார். இத் திருவாதவூரருடைய கல்வித்திறமை முதலியவற்றை அறிந்தவர் சொல்ல அரிமர்த்தனபாண்டியன் கேட்டு, அவரை வரவழைத்து, மனமகிழுமாறு பல வரிசைக ளளித்து, மந்திரி யுத்தியோகங் கொடுத்து மேம்படுத்தினான். திருவாதவூரர், படைக்கலப்பயிற்சி முதலியன உணர்த்தும் நூல்களையும், மனுசாத்திர முதலிய நீதிநூல்களையும் ஐயந்திரிபற முற்றக் கற்றோராதலினால், மற்றை மந்திரிமாரெல்லாரினுஞ் சிறந்து, முதன் மந்திரியாகி, அரிமர்த்தன பாண்டியனுக்குக் கண்ணுங் கவசமும் போலக் காரியஞ் செய்தொழுகி, உயிர்கள் களிக்க வெண்கொற்றக்குடை நீழலில் உலகத்தைக் காத்து, முறைசெய்திருந்தார்.

இப்படி யிருக்குநாளிலே, மெய்ப்பொருளிது பொய்ப்பொருளிது என்று உள்ளபடி பகுத்தறியும் விவேகம் இவர் மனத்திலுண்டாயது. உண்டாகவே, நிலையில்லாத இம்மை மறுமை யின்பங்களினுவர்ப்பு வரப்பெற்று, செம்மையாகிய மனத்தையுடையராய், மோக்ஷத்தையடையும் நெறியையே ஆராய்வாராயினர். "பௌத்தம் முதலாகிய புறச்சமய நூல்களும் நித்தமாகிய வேதத்தைத் தழுவிய அகச்சமயநூல்களும் மனத்தினுள்ள மாசை அறுத்து அரனருளை அறிவியா; அதனால் மித்தையாகிய ஆணவக்கட்டு அறுது; ஆகவே வீடடைதல் இல்லையாம். அன்பு செய்து அரனருள் பெற்ற அடியவர்க்கன்றி ஏனையோர்க்கு முக்தி அரிது என்று வேதம் கூறும். அவ் வேதத்தின் உண்மைப்பொருளை யெல்லாம் சத்திநிபாத மடைந்த பரிபக்குவர்க்குச் சிவாகமம் உய்த்துணர்த்தும் என்று மெய்யுணர்ந்தோர் கூறுவர். வேத முடிவினும் ஆகமத்தின் முடிவினும் எய்தும் பொருள்கட்குத் தம்முள் வேற்றுமை இல்லை; அவைகளை வேற்றுமையுள்ளனவாய்க் காட்டுகின்ற மாறுபாட்டினை நீக்கி, மலசம்பந்தத்தைப் போக்கி உடையானாகிய தன்னையும் உடைப்பொருளாகிய என்னையும் அறிவிக்கின்ற ஞானாசிரியன் வருவது எக்காலம்? உண்மை அன்பினுக்கு எளிவரும் கருணையினையுடைய ஆசாரியன் அருளாலன்றி, கல்வியினாலே இப் பாசத்தைக்கழிக்கக் கருதுவது, கடலைத் தெப்பத்தினாலன்றிக் கையினாலே கடக்கக் கருதுதல் போலாம்" என்று இவ்வாறு எண்ணி, திருவாதவூரர் மோக்ஷத்தை அடைதல் வேண்டும் என்னும் பேராசையாற் றொடக்குண்டு, வேதாகமாதி சாத்திரங்களிலே வல்ல பெரியோர்கள் தம்மிடத்து வருந்தோறும், தாம் அவரிடத்துச்சென்று காணுந்தோறும், அவர்களோடு மிகவும் அளவளாவி மெய்பொருள் ஆராய்ந்தார். இப்படிப் பலரிடத்தும் ஆராய்ந்தும், ஞானாசாரியரகப்படாமல், தாகத்துக்கு உவர்நீருண்டு விடாய் தணியாதாரைப்போல், அகத்தமை வுறாது, சிவபெருமானிடத்திலே மெய்யன்புவைத்து அரசனுடைய அமைச்சுரிமைத் தொழிலையும் கைவிடாதவரா யொழுகினார். இப்படியொழுகுந் திருவாதவூரர், ஒருநாள் பாண்டிய ராசனுடைய சபையிலே போய் நிற்கும்பொழுது, குதிரைப்பந்தி காப்பவர் அரசன்முன் சென்று வணங்கி நின்று, "மகாராஜாவே, நமது குதிரைவெள்ளத்தில் இறந்தனபோக ஒழிந்த குதிரைகள் நோயுடையனவும் மூப்புடையனவுமாயின. நல்ல குதிரை ஒன்றுமில்லை" என்றார்கள். அதுகேட்ட அரசன் திருவாதவூரரை நோக்கி, "நீர் நமது பண்டாரத்தைத் திறந்து வேண்டிய பொருளை எடுத்துக்கொண்டு சென்று, சமுத்திரக்கரையில் வந்திறங்குங் குதிரைகளைத் தெரிந்து, விலைக்கு வாங்கிக்கொண்டு வருதிர்" என்று சொல்லி விடுத்தான். மனம் வேறுபட்டு அமைச்சியல் பூண்டொழுகுந் திருவாதவூரர், பண்டாரத்தைத் திறந்து குதிரை வாங்குவதற்கு வேண்டிய திரவியமெடுத்துக்கொண்டு தாழிட்டிறுக்கி, அரசனிடத்து விடைபெற்றுப் புறப்பட்டு, பொற்சுமைகளை ஒட்டகங்களி லேற்றுவித்து முன்செல்லும்படி அனுப்பி, பொற்றாமரைவாவியிலே ஸ்நானஞ் செய்து, சித்திவிநாயகரையும் மீனாக்ஷியம்மையாரையும் வணங்கி, பின்னர்ச் சோமசுந்தரக்கடவுளுடைய திருவடிகளை வணங்கி, அவர் சந்நிதானத்தில் நின்று, "எம்பெருமானே! இப்பொருள்க ளெல்லாவற்றையும் தேவரீருக்கும் தேவரீருடைய அடியார்களுக்கும் உரியனவாகச் செய்தல்வேண்டும். அடியேனுடைய குறை இதுவே" என்று வேண்டுதல் செய்தார். அப்பொழுது, சோமசுந்தரக்கடவுளுடைய திருவருள்போல், அருச்சகராகிய ஆதிசைவரொருவர் எதிரேவந்து விபூதி கொடுத்தார். அதனைத் திருவாதவூரர், "நமக்கிதுபோலும் நன்னிமித்தமில்லை. இது நன்னெறிக்கேதுவே" என்று இருகரங்களினாலும் வாங்கித் தரித்து, சோமசுந்தரக் கடவுளிடத்தே விடைபெற்றுக்கொண்டு மீண்டு, வாத்தியங்கள் முழங்கவும், சாமரங்கள் இரட்டவும், சந்திரவட்டக்குடை நிழல் செய்யவும், சேனைகள் சூழவும், இரத்தினச் சிவிகை மேற்கொண்டு சென்றார்.

இப்படித் திருவாதவூரர் வழிக்கொண்டுசெல்லுமுன், சோமசுந்தரக்கடவுள் இவருடைய இருவினையொப்பையும் மலபரிபாகத்தையும் பார்த்து, மார்ச்சார சம்பந்தமாக இவரை வலியவந்தாண்டு தொண்டுகொண்டருளத் திருவுளங்கொண்டு, கருணையால் ஒரு பிராமண ஆசாரியராகி, திருப்பெருந்துறைக்கு வந்து, மாணக்கர் கூட்டஞ்சூழ ஒரு குருந்தமர நிழலில் வீற்றிருந்

தருளினர். பிறவியாகிய கடலைக் கடக்கவருந் திருவாதவூரர், சேனைகளோடு அளவிறந்த காட்டுவழிகளைக் கடந்து சென்று, பெருங்கருணைக் கடலாகிய ஞானசாரியர் வீற்றிருக்குந் திருப்பெருந்துறையை அடுத்து, அதை அணுக அணுக, மகிழ்ச்சி மிகவும், கூப்பிய கரங்கள் சிரமேலேறவும், கண்களினின்று ஆனந்தபாஷ்பம் சொரியவும், உள்ளத்திலே திருவருள் விளையவும் நடந்தார். இப்படி நடக்கின்ற திருவாதவூரர், கண்டோர் "இவர் உன்மத்தர்" என்று நகைக்கும்படியாகிய அதிதீவிரப்பக்குவம் எனப்படும் நான்காம் சத்திநிபாதம் உண்டாக, தமது உண்மை ஞானத்தை மறைத்த மலத்தினும் மிகவும் அஞ்சி, பெரும்பாரந் தாங்கினேனையும் பிணிப்புண்டோனையும் போன்று, "அழலிடைப்பட்ட வெண்ணெய்போல நெஞ்ச நெக்குநெக்குருக என்னையுருக்குதலால், என்மலத்தைச் சேதிக்கும் அருட்கடலாகிய ஞானசாரியார் எழுந்தருளியிருக்குமிடமே இது" என்று எண்ணிக்கொண்டு, நகரத்தினுட் புகுந்து, திருக்கோயிலையடைந்து, அங்குள்ள தீர்த்தத்திலே ஸ்நானம்பண்ணி, திருக்கோயில்வாயிலையடைந்து, சிவபெருமானை நமஸ்கரித்துத் தோத்திரஞ்செய்து, திருக்கோயிலை வலம் வந்தார். வரும்பொழுது ஞானசாரியார் எழுந்தருளியிருக்கின்ற குருந்தமரத்தை எதிரே கண்டார். வேதங்களும் சிவாகமங்களும் புராணங்களும் பலசமய சாத்திரங்களும் ஒவ்வொரு மருங்கிலே கோஷிக்க, சரியையாதி நான்கு பாதங்களும் வல்ல அடியார் குழாங்களுக்கிடையே, அக் குருந்த மரநிழலிலே, சிவஞான போத புத்தகந் திருக்கரத்திலேந்தி, யோகவாசனத்தின்மீது எழுந்தருளியிருக்கின்ற பெருங்கருணைக்கடலாகிய பரமாசாரியரைத் தரிசித்து, "கனக சபையிலே ஆனந்தத் தாண்டவஞ்செய்யுந் திருக்கோலமும், கல்லால மர நிழலிலே சனகர் முதலிய நான்கு முனிவர்களுக்கு ஞானோபதேசஞ்செய்தருளிய திருக்கோலமும் இன்றைக்கு நாயினேனுக்கு எளிவந்த இத் திருக்கோலமே" என்று சிவபெருமானுடைய திருக்குறிப்புணர்ந்த உணர்ந்து, வணங்கி, கைகளைச் சிரமேற் குவித்து, என்பு நெக்குருக மனமுருகி, ஞானசாரியராகிய சிவபெருமானுடைய திருவருளாகிய வலையில் அகப்பட்டுக் கொண்டார்.

பார்வைமிருகம்போல வந்தருளிய பரமாசாரியரானவர், செங்கழுநீர்மாலையையும் சந்தனத்தையும் அணிந்து, திருவடியில் வீரக்கழலைக்கட்டி, திருவாதவூரருடைய ஒழுக்கத்தையும் அன்பையுங்கண்டு, உடல்பொருளாவி மூன்றையும் நீரோடு அவர் தத்தஞ் செய்ய ஏற்று, ஞானக்கண்ணினாலே பாச க்ஷயஞ்செய்து, திருவடித்தாமரையைச் சூட்டி, திருக்கரத்தைச் சிரமேல் வைத்து, சூக்குமபஞ்சாக்ஷரத்தை உபதேசித்து, அவரைச் சிவசொரூபமாக்கினார். திருவாதவூரர், அருட்டிருநோக்கினாலே இரும்புண்ட நீர்போல் மலத்தைக்கெடுத்துத் தன்வசமாக்கிய பரமாசாரியரையும், அவர் உபதேசஞ் செய்தமையையும், தம்மை மறைத்த பாசத்தையும், தம்மையும் மறந்து, மெய்மையாகிய ஞானஸ்வரூபியாய், ஒன்றுமறிந்திலர். அவருடைய நாவில் ஞானக்கலைமகள் வந்து தங்கினாள். அப்பொழுது அவர், உள்ளத்திலே நிறைந்த பேரின்பவெள்ளந் தேங்கிப் புறத்தே வழிதல்போல, கைகள் அஞ்சலிக்க, சிரம் கம்பிக்க, கண்கள் ஆனந்தபாஷ்பஞ் சொரிய, திருமேனி உரோமாஞ்சங்கொண்டு அழலிடைப்பட்ட நெய்போலுருக, நாத்தழுதழுத்த அன்புரையினராய், தம்வசமிழந்து, பரமாசாரியரை வணங்கித் தோத்திரஞ் செய்வாராயினார். பழுதில்லாத சொற்களாகிய மணிகளை அன்பாகிய வடத்தாற் கோத்த பாமாலையை அமுது சாத்துகின்ற மெய்யன்பராகிய திருவாதவூரருக்கு "மாணிக்கவாசகன்" என்னுந் திருநாமத்தை ஞானசாரியராகிய சிவபெருமான் கொடுத்தருளினார். திருவாதவூரர், ஞானசாரியருடைய திருவடிகளை ஆனந்தபாஷ்பமாகிய திருமஞ்சனத்தா லபிஷேகஞ் செய்து, பாவாகிய மலரைச் சாத்தி, தற்போதமாகிய அமுதை நிவேதித்து, சிவஞானமாகிய ஓமாக்கினியை மூட்டி, ஞானபூசையைச் செய்வாராயினார். மாணிக்கவாசகசுவாமிகள், பவவாசனை கழிந்து, ஞானசாரியரது மாணக்கர்கள் அவ்விடத்தோதுகின்ற ஆகமப் பொருள்களையும் உபநிடதப்பொருள்களையும் கேட்டு, அதில் விருப்புடையராயிருந்தார். அதனைச் சிவபெருமான் பார்த்தருளி, அதிமதுரமாகிய அவருடைய பாடலை இன்னுஞ் சிலநாட் டிருச்செவி மடுக்கவும், அவருக்குப் பேரன்பளித்து அவர் கொடுவந்த பொரு

ளெல்லாவற்றையுங் கவர்ந்து வேண்டும் பணிகள் செய்வித்து அரிமர்த்தன பாண்டியனுக்கு அவருடைய பெருந்தகைமைகளை அறிவித்து அவனை முத்தியை அடைவிக்கவும், புத்தரை வாதிலே வெல்லுவிக்கவுந் திருவுளங்கொண்டு, மாணிக்கவாசகசுவாமிகளை ஏத்தி, "இங்கே நீ செய்ய வேண்டிய கருமஞ் சிறிதுண்டு. ஆதலாற் சிலகாலம் இங்கிருப்பாய்" என்று கட்டளையிட்டு அடியாரோடு மறைந்தருளினர்.

சிவபெருமானுனவர், கனுத்தோற்றம்போலத் தம்மைக்காட்டி மறைத்தலும், மாணிக்கவாசகசுவாமிகள், "நாய்க்குத் தவிசிட்டதுபோல நாயினேனுக்குந் தமது அருமைத் திருமேனியைக் காட்டி எம்பெருமான் மறைந்தது கனவோ" என்றையுற்று பின் ஒருவாறு தேறி, அவரைப் பிரியலாற்ருதவராய், "உம்முடைய அடியாரோடு கூட்டாது அடியேனையும் அடியேனுடைய வினையையும் இங்கிருத்தி மறைந்தீரோ! இருவினைக் கொள்கலமாகிய இவ்வுடலைத் தீயிலிடுகிலேன்; மலையினுருண்டு மாய்கின்றிலேன்; வாளாற் குறைக்கின்றிலேன்; அதுவும் தேவருடைமையாயிற்றே! ஆதலால் இவை செய்ய அஞ்சினேன்; இவ்வுயிர் தானேயாயினும் உடலைவிட்டுப் பிரிகின்றிலது. ஐயனே,! தேவரீரைப் பிரிந்தும் ஆற்றேன்! என் செய்வேன்! எந்தாயோ! எந்தாயோ!" என்றிரங்கிப் புரண்டழுது புலம்புவாராயினர் :—

வறியனு மொருபிறவிக் குருடன் கையில்
வந்தபெரு விலைமணிபோல் மழலை தேருச்
சிறியனு மொருமதலை கையிற் கொண்ட
செம்பொன்மணி வள்ளம்போற் றேவர் யார்க்கும்
அறிவரியாய் சிறியேனை எளிவந் தாண்ட
அருமையறி யேன்துன்பத் தழுவத் தாழப்
பிறிவறியா அன்பரொடு மகன்ருய் கல்லாப்
பேதையேன் குறையலதெம் பிரானு லென்னே.

மண்ணுதி யாருறு மனந்துழாவித் தடுமாறிப்
புண்ணுகி யெனைக்காணு துழல்கின்றேனைப் போதவருட்
கண்ணு லவைமுழுதுங் கரையநோக்கி யான்யானென்
றெண்ணு வெனைத்தந்தா யெங்குற்ருயோ வெந்தாயே.

வானுதி யைந்துமுதல் வகுத்தவோசை முதலைந்து
மானு தியங்குமன மாதிநான்கும் வழியடைப்பத்
தேனுதி யறுசுவையுங் கழியவூறுந் தெள்ளமுதம்
யானுர நல்கினையால் எங்குற்ருயோ எந்தாயே.

மாசாய் மறைக்குமல வலியும்நானும் வேறின்றி
ஆசா விகாரமல மாயினேனைப் பொருட்படுத்திப்
பேசாத இன்புருவி னின்னேடுடெனைப் பின்வைத்த
ஈசா வெனையிங்கிட் டெங்குற்ருயோ எந்தாயே.

இப்படி வாய்திறந்தாற்றி, இளங்கன்றை நீங்கிய தாய்ப்பசுவைப்போல மனம் கரைந்து, கோபுரவாயிலின் புறம்பே போந்து, அங்கே தம்மை எதிர்பார்த்து நின்ற படைஞர்களை நோக்கி, நீங்கள் முன்னேபோய், "குதிரைக் கூட்டங்கள் ஆடி மாசத்தில் வருமென்று பாண்டியராசனுக்குச் சொல்லுங்கள்" என அனுப்பினர். அவர்கள் சென்று பாண்டியனை வணங்கி நிகழ்ந்தவற்றைச் சொன்னர்கள். அதுகேட்ட அரசன் ஒன்றுஞ் சொல்லாது குதிரையின் வரவை எதிர்பார்த்திருந்தான்.

மாணிக்கவாசகசுவாமிகள் பாண்டியன் குதிரைவாங்கும்படி கொடுத்த திரவியங்களெல்லாவற்றையும் தம்மையாண்டருளிய பரமாசாரியராகிய சிவபெருமானுடைய பூசை திருவிழாக்களுக்கும் ஆலயத் திருப்பணிக்கும் அடியார்களுக்கும் உபயோகித்துவிட்டு, அத்திருப்பெருந்துறையிலே இருந்தார். இவர் வரையறுத்துக் கூறிய ஆடிமாசம் சமீபித்தலும், பாண்டியராசன், "இன்னும் குதிரைகள் வந்தில; இதுவென்ன!" என்று மாணிக்கவாசக

சுவாமிகளுக்குத் திருமுகம் எழுதியனுப்பினுன். மாணிக்கவாசகசுவாமிகள் அதனை வாங்கி வாசித்து, "இனிச் செய்யுமாறென்னை!" என்று யோசித் தயர்ந்து, தமது பரமாசாரியராகிய சிவபெருமான் வீற்றிருக்கின்ற கோயிலை யடைந்து, "என் தலைவரே, தேவரேறே, இடபத்தைக் கொடியினுயர்த்த அரசரே, சௌந்தரபாண்டியரே, திருப்பெருந்துறையில் வீற்றிருந்த என் அருமணியே, பாண்டியராசன் தந்த பொருளெல்லாவற்றையும் உம்முடைய் ஆலயத்துக்கும் அடியார்களுக்குமாகச் செலவழிக்கும்படி அருள்செய்தீர். இனி நான் அரசனுக்கு எதைக்கொண்டு குதிரை வாங்கிக் கொடுப்பது?" என்று விண்ணப்பஞ்செய்து வணங்கி இரந்தார். அவரெதிரே சிவபெரு மான் அசரீரிவாக்கால், "குதிரையெல்லாம் வருமென்று அரசனுக்கு ஓலை அனுப்புதி" என அருளிச்செய்தார். மாணிக்கவாசகசுவாமிகள் அது கேட்டு மிக மகிழ்ந்து அப்படியே அரசனுக்குத் திருமுகம் எழுதியனுப்பினுர். அந்தத் திருமுகத்தெழுதிய பாசுரத்தைப் பாண்டியராசன், வாசிக்கக் கேட்டு அடங்காமகிழ்ச்சியனுய்க் குதிரையின் வரவை நோக்கியிருந்தான்.

அன்றிரவு நித்திரைசெய்கின்ற மாணிக்கவாசகசுவாமிகளுடைய கனவிலே சிவபெருமானுர் குருந்தமர நீழலில் வந்தாண்டருளிய ஆசாரியவேடங் காட்டி எழுந்தருளிவந்து, "பாண்டியனுடைய மனசைக் கவரத்தக்க குதிரைகளை நாம் கொண்டுவருகின்றோம். நீ இன்றைக்கு முன்னே செல் லுதி" என்று அருளிச்செய்தார். உடனே மாணிக்கவாசகசுவாமிகள் நித் திரைவிட்டெழுந்து, "தேவர்களுக்குக் கனவிலும் காண்டற்கரிய எம்பெரு மானுடைய கருணை வடிவு நமக்குக் கனவிலும் நனவிலும் எளிதாயிற்றே!" என நினைத்துக்கொண்டிருந்தார். இருக்கச் சூரியோதயமாயிற்று. உட னே மாணிக்கவாசகசுவாமிகள், திருப்பெருந்துறையில் வீற்றிருக்கும் சிவ பெருமானுடைய பாதங்களை வணங்கி, அவ்விடத்தினின்றும் நீங்கி, மதுரை யை அடைந்து, பாண்டியராசனிடத்திற் சென்று, தாம் செய்யவேண்டிய் முறையாக அவனுக்கு வழிபாடுசெய்து முன்னே நின்றுர். பாண்டியராசன் அவர் முகத்தை நோக்கி, "எவ்வளவு பொன் கொண்டுபோய் எவ்வளவு குதிரை வாங்கினீர்?" என்று கேட்டான். மாணிக்கவாசகசுவாமிகள், "மகாராசாவே, நான் குதிரை வாங்கும்படி கொண்டுபோன பொன்னுமள வில்லை, வாங்கின குதிரைகளுமளவில்லை; அக்குதிரைகள் பின்னே வருகின் றன; கண்டருளுதி. இதனுலே 'துரங்கபதி' என்னும் பெயரைப் பெறுதி" என்றுர். பாண்டியன் பலவரிசைகள் செய்து அவரை மாளி கைக்கு அனுப்பினுன். மாணிக்கவாசகசுவாமிகள், பொற்றுமரைவாவியி லே ஸ்நானஞ்செய்து சித்திவிநாயகரைத் தொழுது, மீனுக்ஷியம்மையாரையும் சுந்தரேசரையும் வணங்கி, மனமொழிமெய்கள் அன்புமயமாய், "தலை வரே, அடியேனை ஆட்கொண்டருளிய அருமணியே, வெள்ளியம்பலத்திலே திருநிருத்தஞ் செய்யும் கடவுளே, முன்னே அரசன் தந்த பொருள்களை யெல்லாம் அடியேன் வேண்டிக்கொண்டபடி ஏற்றுக்கொண்டு, அடியேனை யும் தொண்டுகொண்டீரே. அரசன் முனிவுறுது மகிழும்படி குதிரைகள் வருதல் எங்ஙனம்?" என்று வேண்டிநின்றுர். அப்பொழுது பரமசிவ னுடைய திருவாக்கானது, "மெய்யன்புடையானே, அஞ்சற்க. நீ விரும் பியபடி சூரியனுடைய தேரிற் குதிரைபோலுங் குதிரைகளைக் கொண்டு வருகி ன்றோம்" என்று ஆகாயத்தில் அசரீரியாக எழுந்தது. மாணிக்கவாசக சுவாமிகள், அதுகேட்டுப் பரமசிவனுடைய கருணையைத் துதித்து, தமது திருமாளிகைக்குச் சென்றுர்.

திருவாதவூரரை அவர் சுற்றத்தார்களும் நட்பினரும் முதலாயினுர் வந்து நெருங்கி, இடிமுழக்கம்போலப் பல புத்திகளைச் சொல்வார்கள்: "மந்திரியுத்தியோகம் பூண்டு அரசர் கருமஞ் செய்வது பிராமணர்களுக்குத் தருமமன்று. அரசர்களுக்குரிய மந்திரியாக இருந்தாலும் அவர்களுக்கு இசைந்த காரியங்களைச் செய்வதே தகுதி என்று மநுநூலில் வல்லோர் சொல்லுவார்கள். அரசியலையும் அமைச்சியல்பையும் அறிந்த உம்போல் வார்கட்கு நாங்கள் சொல்வதென்ன! நீர் செய்வதொன்றும் நன்றுயிருக்க வில்லை. இன்றைக்குக் குதிரைகள் வரும் என்று பாண்டியராசனுக்கு வரையறுத்துச் சொன்னீர். ஐயரே, நாளைக்கு அவ்வரசனுக்கு என்ன

சொல்லவல்லீர். நீர் அரசனிடத்து நடந்துகொள்ளும் விதத்தினாலே உமது கிளைஞர், நட்பினர் முதலாகிய எங்களைக் காக்கவேண்டுமென்னுங் குறிப்பு உமக்கில்லைபோலும். உம்முடைய செய்கை உமக்கே மிக நன்றாயிருக்கின்றதுபோலும்!'' என்று கழறியுரைத்தார்கள். அவற்றை மாணிக்கவாசக சுவாமிகள் கேட்டு, ''சிவபெருமான் ஆசாரியவேடங் கொண்டுவந்து நம்மை அடிமைகொண்ட அன்றைக்கே சுற்றத்தையும் அதுபற்றிவருந் தொடர்பு களையும் நீங்கினோம்; துன்பமும் இன்பமுமற்றோம்; தேகாபிமானம் தீர்ந்தோம்; திரவியத்தை வெறுத்தோம்; கோபத்தையும் செருக்கையும் கெடுத்தோம்; இருவினையையும் நீங்கினோம். எமக்குத் தந்தையும், தாயும், குருவும், ஆசாரியரும், சிவபெருமான்; பெண்டிர் நிராசை; புதல்வர்கள் பல சீவராசிகள்; சுற்றம் சிவனடியார்; பகை ஏழு பிறவிகள்; ஊரிலெல்லாஞ் சமைத்த சோறு நம்முடையதே; பூவுலகமெல்லாம் நமக்குப் படுக்கை; தைத்த கோவணம் நாம் தரிக்கும் வஸ்திரம்; நமக்குச் சந்தனம் விபூதி; ஆபரணம் உருத்திராக்கம்; நாம் இன்றைக்கே இறக்கினும் இறக்குக; என்றும் இருக்கினும் இருக்குக; அரசன் நம்மைத் தண்டிக்கினும் தண்டிக்குக; அவன் உடனே நம்மை மகிழ்விக்கினும் மகிழ்விக்குக; நாம் சுவர்க்கத்திற் சிறப்படையினும் அடைக; கொடிய அக்கினிமயமாகிய நரகம் சேரினும் சேர்க; பரமசிவனை மறக்கமாட்டோம். பிராரத்த வினைப்பயன் அனுபவிக்கவேண்டி வந்தால் அதைத் தவிர்க்கவல்லவர் யாவர்!'' என்று சுற்றத்தார் முதலாயினர் சொல்லை மறுத்து, மாளிகையிலிருந்தார்.

2. நரிபரியாக்கிய படலம்.

மாணிக்கவாசகசுவாமிகளைப் பாண்டியராசன் மற்றைநாளழைத்து, ''இன்னுங் குதிரைகள் வந்திலபோலும்'' என்று விசாரித்தான். அவர், ''இன்று முதல் மூன்று நாளைக்குள் குதிரைகள் வந்துவிடும். அவைகள் நிற்றற்கு வேறு அகன்ற பந்திகளை அமைப்பிக்க; அவைகளுக்குத் தண்ணீரூட்ட வேறு தடாகங்களைத் தோண்டுவிக்க; நகரத்து மாடங்களெல்லாம் அலங்கரிப்பிக்க'' என்றார். அரசனுடைய ஏவலர்கள் அவ்வண்ணம் செய்தார்கள். இப்படியிருக்க, மாணிக்கவாசகசுவாமிகள் குதிரைவரும் என்று வரையறுத்துக்கூறிய மூன்றுநாளுங் கழிந்தன. பாண்டியன் மற்றை நாள், ''இன்னும் குதிரைகள் வரக்கண்டிலம்'' என்று மாணிக்கவசாகசுவாமிகளை அழைப்பித்துத் தண்டஞ் செய்பவனைத்துச் சீறி, ''இவன் குதிரை வாங்கினதென்னை! அவை வருவது என்றைக்கு!'' என்று கூறி, தன்னெதிர்நின்ற சில தறுகண்ணர்களை நோக்கி, ''இந்தக் கள்வனைக்கொண்டு போய்த் தண்டஞ் செய்து நமது பொன் முழுதையும் அறவிடுங்கள்'' எனக் கட்டளையிட்டான். பாண்டியனுடைய கோப மிகுதியைக் கண்ட தண்டலாளர்கள் அவனெதிர் நில்லாது அஞ்சி உடனே திருவாதவூரடிகளைப் பாசம் போலத் தொடர்ந்து பற்றிக்கொண்டுசென்று, ''இனிப்பொன்னுக்கு வகையேது! சொல்லும்'' என்று எதிர்த்துச் சீறி, அவர்மேற் கல்லேற்றினர்கள். தமது மெய்யன்பர்களுடைய பாரங்களையெல்லாந் தாங்குவாராகிய சிவபெருமான் அவர்மேலேற்றிய பாரம் முழுதையும் வாங்கியருளினார். கல்லின் பாரந்தெரியாது பரமசிவனுடைய திருவடி நிழலில் நின்ற திருவாதவூரடிகளுடைய நிலைமையைத் தண்டலாளர்கள் நோக்கி, ''இது மாயம் போலும்'' என்று மிகுந்த கோபங்கொண்டு, அவருடைய கரங்களிலும் பாதங்களிலும் கிட்டியை மாட்டி நெரித்தார்கள். அவர் இக்கொடுந்தொழிலுக்கும் அஞ்சாது பரமசிவனுடைய திருவடிகளைத் தியானித்துக் கொண்டிருந்தார். அப்பொழுது சூரியன் அஸ்தமனமாயிற்று.

அன்றிரவு, தண்டலாளர்கள் அவரை இருண்மயமாகிய சிறைச்சாலையிலே விடுத்து விலங்குமாட்டி, மிக்க துயரஞ்செய்தார்கள். அவர், பரமசிவனுடைய திருவடிப்புணையைத் துணையாகக் கொண்டு அத் துயர்க்கடலைக் கடந்து, வைகை கறையிலே அடியார்கள் சுந்தரேசரையும் மீனாக்ஷியம்மையாரையும் திருப்பள்ளியெழுச்சி செய்து வழிபடும் ஆர்ப்பையும் சங்கொலியையும் வேதகோஷத்தையும் கேட்டிருந்தார். இப்படியிருக்கச் சூரியோதயமாயிற்று.

திருவாதவூரர், சுந்தரேசர் வீற்றிருக்கும் ஆலயத்தின் சிகரத்தை நோக்கிக் கைகளைச் சிரசின்மேற் குவித்து அவரைத் தோத்திரஞ் செய்வாராயினர் :—

எந்தா யனைத்துலகு மீன்றுயெத் தேவர்க்குந்
தந்தாய் செழுங்குவளைத் தாராய் பெருந்துறையில்
வந்தாய் மதுரைத் திருவால வாயுறையுஞ்
சிந்தா மணியே சிறியேற் கிரங்காயோ.

மூவா முதலாய் முதுமறையா யம்மறையுந்
தாவாத சோதித் தனிஞான பூரணமாய்த்
தேவாதி தேவாய்த் திருவால வாயுறையும்
ஆவார் கொடியா யடியேற் கிரங்காயோ.

முன்ஞ முதுபொருட்கு முன்ஞ முதுபொருளாய்ப்
பின்னும் புதுமைக்கும் பின்னுகும் பேரொளியாய்த்
தென்ஞ மதுரைத் திருவால வாயுறையும்
என்ஞ யகனே வெளியேற் கிரங்காயோ.

மண்ணுய்ப் புலனுய்க் கனலாய் வளியாகி
விண்ஞ யிருசுடரா யித்தனையும் வேருகிப்
பண்ஞ யிசையாய்ப் பனுவலா யெங்கண்ணுங்
கண்ணுய் என்னுறுகண் காணுவா றெண்கொலோ.

பொங்குஞ் சினமடங்கல் போன்றுருத்து வெங்கூற்றம்
அங்கும் புரியா வருந்துன்பத் தாழ்ந்துநான்
மங்கும் படியறிந்தும் வந்தஞ்ச லென்கிலையால்
எங்குஞ் செவியுடையாய் கேளாயோ என்னுரையே.

பூட்டி யருட்பாச மிருபாதம் பொறித்துடலிற்
கூட்டி யடியாரு ளகப்படுத்தாட் கொண்டருமை
காட்டியவோ வின்றெண்னைக் கைவிட்டாய் வெய்யரெனை
ஆட்டி யொறுக்குமிடத் தாரேன்று கொள்வாரே.

ஊரா ருனைச்சிரிப்ப தோராயென் றுன்னடிமைக்
காரா யடியே னயர்வே னஃதறிந்தும்
வாரா யரசன் றமரிழைக்கும் வன்கண்ணேய்
பாரா யுன்றன்மை யிதுவோ பரமேட்டீ.

இவ்வாறு இரங்குகின்ற திருவாதவூரருடைய அழுகையொலி, குழந்தைகளுடைய அழுகையொலி தாயர் செவியிற் புகுந்ததுபோலத் தமது திருச்செவியில் நுழைதலும், சிவபெருமான், அவருடைய சிறையை நீக்கத் திருவுளங்கொண்டு, திருநந்திதேவர் முதலிய கணநாதர்களை அழைத்து, "ஆவணிமாசத்து மூல நக்ஷத்திரம் வந்துவிட்டது. நாம் முற்பட்டு இன்றைக்குப் பாண்டியன் கோபங் கொள்ளாமுன் குதிரைகள் கொண்டுபோய்க் கொடுத்தல்வேண்டும். காட்டிலிருக்கும் நரிகளைக் குதிரைகளாக்கி நீங்களெல்லீரும் குதிரைச் சேவகர்களாய் அவைகளின் மீது ஏறிக்கொண்டு முன் செல்லுங்கள். நாமும் அவ்வாறு குதிரைச் சேவகராய் வருகின்றோம்" என்று அருளிச்செய்தார். அக்கட்டளையின்படி கணநாதர்கள் நரிகளைக் குதிரைகளாக்கித் தாம் குதிரைப்பாகர்களாய் அவைகளில் ஏறி மேற்றிசையை நோக்கிச் சென்றார்கள். சோமச்சுந்தரக்கடவுளானவர், வீரக்கழலையணிந்து, வாட்படையை ஏந்தி, சாய்ந்த கொண்டையும், திருமுடிச்சாத்தும் கண்டிகையும் வாகுவலயமும் குண்டலமும் விபூதியைத் திரிபுண்டரமாக அணிந்த நெற்றியும் வெண்பட்டும் ஆகிய இவைகள் அடியார் நெஞ்சை அகலாமல் அழகெறிப்ப, தருமார்த்த காமமோக்ஷம் என்கின்ற நான்கு கால்களையும், ஞானகாண்டம் கருமகாண்டமென்கின்ற செவிகளையும், பரஞானம் அபரஞானமாகிய கண்களையும், விதியாகிய முகத்தையும், விலக்காகிய வாலையும், ஆகமங்களாகிய புறவணிகளையும், மந்திரங்களாகிய சதங்கை மணிமாலைகளையும், சந்திர சூரியர்களாகிய அங்கவடியையும், பிரணவமாகிய கடிவாளத்

தையும், உடறிடதமாகிய கலனையையுங் கொண்ட வேதமாகிய குதிரையின் மேற்கொண்டு, வெண்சாமரம் வீசவும் வெண்கொற்றக்குடை நிழற்றவும் வாத்தியங்கள் ஒலிக்கவும் அந்த வீரர்களுக்கு நடுவே சென்றருளினர். நினைத்த மாத்திரத்திலே வேண்டியவடிவங்கொள்பவராகிய பரமசிவனை வர் கண்ட ஆடவர்களும் பெண்களும பலவாறு வியந்துபேச, இந்திரசால வித்தை காட்டுவாரைப்போல, இங்ஙனம் குதிரைவீரராக வந்து, உலகை மயக்கி, வாத்திய வொலியும் குதிரைகளினொலியும் வீரர்களினரவாரமும் திசைகளைச் செவிடாக்க, மதுரை நகர்க்கு அரைக்காத தூரத்தில் வந்தார். குதிரைகளின் வரவைக் கண்டவர்கள் முகமலர்ந்து விரைந்து சிறைச்சாலையி லிருக்கின்ற திருவாதவூரரிடத்திற்சென்று, “ அரசநீதியிற்றவருத மந்திரித் தலைவரே, குதிரைவெள்ளங்களெல்லாம் எழுகடல்போல வருகின்றன. அ வைகள் இப்பொழுது கோபுரவாயிலில் வந்துவிடும். இதனை விரைந்து பாண்டியராசனுக்குச் சொல்லும் ” என்றார்கள். திருவாதவூரர் பாண்டி யனை அடைந்து, “ மகாராஜாவே, குதிரைகள் வருகின்றன ” என்றார். அதைக்கேட்ட பாண்டியன், உடம்பு பூரிக்க மகிழ்சிறந்து, மிகுந்த விலை பெற்ற முத்தாரங்களையும் பீதாம்பரங்களையும் கொடுத்துத் திருவாதவூரரை மகிழ்வித்து, அரியணையினின்றிழிந்து, அமைச்சர் முதலாயினர் சூழக் கோபுரவாயிலில் வந்து, குதிரையின் வரவை எதிர்கொள்வானாய், அங் குள்ள ஒரு மாடத்திலே சிங்காசனத்தில் வீற்றிருந்தான்.

சோமசுந்தரக்கடவுள் தமது திருவிளையாடலைக் காட்டும்படி திருவுளங் கொண்டு குதிரைகளின் வரவைச் சிறிது தாழ்த்தார். பாண்டியன் குதிரை களைக் காணமையால் மனம்வெள்கி, “ நமது மந்திரிசொல்லியது பொய் ” என்று எண்ணிக் கோபங்கொண்டு, “ திருவாதவூரரைத் தண்டியுங்கள் ” என்னுங் குறிப்போடு தண்டலாளர்களைப் பார்த்தான். அவர்கள் அரசன் குறிப்பின்படியே திருவாதவூரரைக் கொண்டுபோய் அஞ்சாது ஒறுத்தார்கள். மகா ஞானியாகிய திருவாதவூரர் சோமசுந்தரக்கடவுளைத் தியானித்துத் துதிப்பாராயினர் :

பூவார் முளரிப் புத்தே ளறியா நெறிதந்தாய்
பாவார் தென்சொற் பனுவன் மாலைப் பணிகொண்டாய்
தேவா தேவர்க் கரசே சிறியே னுறுதுன்பம்
ஆவா வென்னு வஞ்சே லென்னு யறனேயோ.

நெஞ்சே யுரையே செயலே யெல்லா நின்வென்றாய்
வஞ்சே போலு மஃதே லின்று வாராயோ
பஞ்சே ரடியாள் பாகா கூடற் பரமேட்டீ
அஞ்சே லென்னு விதுவோ வருளுக் கழகையா.

காவி நேருங் கண்டா நாயிற் கடையான
பாவி யேனைப் பொருளாகக் கொண்டென் பணிகொண்டாய்
ஆவி யோடிவ் வுடலு நினதே யன்றேவின்
றேவி வாளா திருந்தால் யாரென் னுடையானே.

இவ்வாறிரங்கும் திருவாதவூரர், தமது செவிகளில் நுழைந்த பலவகை வாத்தியங்களின் ஒலியினாலும், குளம்பினின்றெழுந்த துகட்படலத்தினாலும் குதிரைகளின் வரவை அறிந்தார். பாண்டியனும் குதிரைகளின் வரவை அறிந்து, வாதவூரரை அழைத்து, மிகுந்த அன்புவைத்து, “ நமது கருமங் களை உம்மைப்போல வகித்து நடத்தவல்லவர் யாவர் !” என்று கூறி, அடங் காத மகிழ்வினனாய், அவரோடு அளவளாவி யிருந்தான். அப்போது இளஞ்சூரியர் போன்ற சிறந்த தோற்றத்தையுடைய பாகர்களோடு குதிரை கள் வந்தன. தன் முன்னோர்களும் கண்டறியாத அழகும் வேகமுமுடைய குதிரைகளைப் பாண்டியன் பார்த்து, “ ஆயிரங்கண்களைப் பெற்றாலும் இவை களைப் பார்க்கமுடியாது ” என்னுங் குறிப்போடு சந்தோஷத்தால் விழுங்கப் பட்டு, அழகிய குதிரையின்மேல் இவர்ந்து வந்த குதிரை வீரரை வியந்து, திருவாதவூரரை நோக்கி, “ இவருள்ளே தலைவர் யாவர் ” என்று வினவி னன். அவர், “ அரசனே, நான் அதனை அறியேன் ” என்றார். அப்.

பொழுது சுந்தரேசராகிய குதிரைவீரர், அங்கவடியின்மீது வைத்த திருவடிகள் அசைய, கடிவாளத்தைப் பிடித்து, வேதமாகிய குதிரையைப் பாண்டியனெதிரே நடத்திக்கொண்டுவந்து, "அரசனே, எங்கள் குதிரையேற்றத்தைச் சிறிதுகாண்" என்றுசொல்லி அரசன் முதலாயினூர் காணும்படி ஐங்கதியும் பதினெண்வகைச் சாரியும் முதலாகிய விகற்பங்கள் தோன்றச் செலுத்திக் காட்டியருளினூர். கணதிபர்களாகிய குதிரை வீரர்களும் தாம் ஏறிவந்த குதிரைகளை நடத்திக்காட்டினூர்கள். பாண்டியன் அவர்களை நோக்கி, "உங்களுக்குள்ளே தலைமையானவர் யாவர்" என்றான். அவர்கள் சுந்தரேசராகிய குதிரைவீரரைச்சுட்டி "இவர்" என்றார்கள். அப்பொழுது, அக்குதிரைவீரராகிய கடவுள், வேதமாகிய குதிரையை நடத்திக்கொண்டு பாண்டியனெதிரே வருதலும், அவன் அக்கடவுளுடைய கிருபா நோக்கத்தைப்பெற்று, மனமயங்கி, தன்னை மறந்து, இருக்கைவிட்டெழுந்து, கைகளைச்சிரசின்மேற் குவித்துக்கொண்டு நின்றான். பின்பு சிவபெருமானுடைய ஆணையினாலே மறைப்புண்ட அறிவு தன் உள்ளத்திலே தோன்ற, "இன்றைக்கு ஒரு குதிரைவீரனை நாம் கண்டெழுந்து கைகுவித் தஞ்சலி செய்து நின்றது என்ன காரணம்!" என்று வெட்கித் திரும்ப ஆசனத்திலிருத்தற்கு நாணி நின்றான்.

நிற்கின்ற பாண்டியராசனுடைய முகத்தைக் குதிரை வீரராகிய கடவுள் பார்த்து, "அரசனே! உனது மந்திரியானவர் உன் பொருளெல்லாங் கொண்டுவந்து நமக்கும் நம்மவர்களுக்கும் மிகவும் கொடுத்தார். ஆதலாலே, மனிதர்களுக்குக் கிடைத்தற் கரியனவும், விலை மதித்தற் கரியனவும் இலக்கணக் குறைவுபாடில்லாதனவும் ஆகிய நல்ல குதிரைகள் உனக்கு வந்தன. இக்குதிரைகளை இன்றைக்கு நீ என்னிடத்திலிருந்து கயிறுமாறி, வாங்குந் தன்மையால் உன்னுடையனவாம். அவை நாளைக்கு என்னவாயிருந்தவேனும் எனக்கு முனக்கும் அதைக்குறித்து ஒரு கருமமுமில்லை. குதிரை வாணிகத்தின் வழக்கம் இது" என்றார். அப்பொழுது பாண்டியராசனும் மனமகிழ்ந்து அதற்குடன்பட்டு, "எமது முதன்மந்திரியாகிய திருவாதவூரர் ஒப்பில்லாதவராய் உம்மிடத்திற்கொண்ட நண்பினாலே மிகுந்த துப்பரவுடையரானார்" என்று மிகவும் புகழ்ந்துரைத்தான். குதிரை வீரராய் வந்த கடவுள், குதிரைகளைக் கயிறுமாறிக் கொடுத்தற்குமுன்னே, அவைகளின் சாதி பேதங்கள் இன்ன இன்ன என்றும், அவைகள் எட்டு வயசின என்றும், நல்லிலக்கணமெல்லாம் ஒருங்கமைந்த இந்தக் குதிரைகள் உனக்குத் தகுந்தன என்றும் சொல்லி, குதிரைவீரர்களுடைய முகத்தைப் பார்க்க, அக் குறிப்பினை அறிந்த வீரர்கள் தாம் ஏறிவந்த குதிரைகளெல்லாவற்றையும் அதிகவேகமாகச் செலுத்திக்காட்டினூர்கள். பாண்டியன் கண்டு வியந்து, ஆப்தர்களாய்த் தன் அருகிலிருந்த அமைச்சர்களைப் பார்த்துத் தலையை அசைத்து, நகை முகத்தனாய் மகிழ்ந்தான். கடவுள், பாண்டியராசனும் அந்நகரவாசிகள் முதலாயினூரும் கண்டு மகிழும்படி, தமது குதிரையைச் செலுத்திக்காட்டி, பாண்டியனெதிரேவந்து, குதிரையினின்றிழிந்து பிறப்பிடம், நிறம், சுழி முதலியவைகளை எடுத்துக் சொல்லி, "அரசனே! அரசர்கள் இக் குதிரைகளைப் பூசை செய்து வணங்கிக் கயிறு மாறுவர்" என்று அருளிச்செய்தார். அதுகேட்ட பாண்டியன், அக் குதிரைகளுக்கு மணிமாலை முதலியன அணிவித்து, சந்தனம் புஷ்பம் தூப தீபங்களால் அருச்சித்து வணங்கி எதிர்நிற்ப, குதிரைவீரராகிய கடவுள், திருவாலவாயுடையாரை நோக்கிக் கைகளைச் சிரமேற்குவித்து, "வாழ்க" என்று வாழ்த்தி, தாமேறிவந்த வேதமாகிய குதிரையைத் தவிர மற்றைக் குதிரைகளெல்லாவற்றையும் கயிறுமாறிப் பாண்டியன்கையிற் கொடுத்தார். அவன் பாகர்கள் கையிற்கொடுக்க, அவர்கள் அவைகளை வாயுவும் கடலும் போலக் கொண்டுபோய்ப் பந்தியிற் சேர்த்தார்கள்.

குதிரைவீரராகிய கடவுளுக்குப் பாண்டியராசன் வெண்பட்டை வரிசையாகக் கொடுத்தான். அவர் குதிரையினின்றிறங்கி, அதனை யேற்றுத் திருமுடியின்மீது தரித்தருளினூர். அதுகண்ட குதிரைவீரர்களாகிய கணநாதர்கள், "இந்த ஆடையை நமது கடவுள் குதிரையினின்றிழிந்து நின்றேற்றுத் திருமுடிமேலணிவதென்? இங்ஙனம் செய்யாதொழியில் இவர்

திருக்கரத்திலேந்திய ஓட்டையும் திகம்பரத்தையும் சர்ப்பாபரணத்தையும் பாண்டியராசன் கவர்ந்து கொள்வானோ ?'' என்று ஒருவரை யொருவர் தம்முள் வினவி வெகுண்டு பேசினார்கள். பாண்டியராசன், குதிரைவீரர் எல்லார்க்கும் பட்டாடைகள் கொடுத்தான். அவைகளைச் சிவபெருமானாகிய குதிரைவீரர் வாங்கிக்கொண்டு வேதமாகிய குதிரையோடு மறைந்தருளினார். நரிகளாகிய குதிரைகளில் வந்த கணநாதர்களாகிய குதிரைவீரர்களும் அவரோடுடன் மறைந்தார்கள். பாண்டியராசன், தனக்கிருமைக்குந் துணையாகிய திருவாதவூரடிகளுக்கு, அருமையாகிய வரிசைகளைச் செய்து, அவரைத் திருமாளிகைக்குச் செல்லவிடுத்து, உச்சிப்பொழுதில் அங்கு நின்றுமெழுந்து தன்கோயிலை அடைந்தான். மற்றை மந்திரிமார்களும் நகரவாசிகளும் தத்தம் மனை புகுந்தார்கள். குதிரைவீரராய் வந்த சுந்தரேசப் பெருமானும் கோயிலையடைந்து தம்முடைய திருவிளையாடல்களையெல்லாம் மீனாக்ஷியம்மையார்க்குச் சொல்லி வீற்றிருந்தருளினார்.

3 பரிநரியாக்கிய படலம்.

பாண்டியராசன் தந்த வரிசைகளோடு தமது திருமாளிகையிற் புகுந்த திருவாதவூரர், சுற்றத்தார் முதலாயினார் வந்து வினவ, அவரவர்க்கிசைய உபசார வார்த்தையும் மகிழ்ச்சியும் வழங்கி, அவர்களை விடுத்து, “ திருவாலவாயுடையார் நாம் அன் றிரந்தவண்ணமே குதிரை வாங்கும்படி நாம் கொண்டு சென்ற திரவியங்களையெல்லாம் தம்முடைய அடியார்களுக்குந் தாமுங் கைக்கொண்டு, எம்மையும் பணிகொண்டு, பிறவித்துன்பத்தையொழித்தருளினார். அதுவன்றி, பாண்டியராசனுடைய மனத்துக்கிசைய நல்ல குதிரைகளைச் செலுத்தி நமக்கினிக் கவலையில்லையாம்படி செய்தருளினார். இனிப் பிரபஞ்சத்தை வெல்லும் வண்ணம் தம்முடைய சிவானந்தானுபவத்தி லிடைவிடா திருக்கும்படி நம்மைச் செய்தருளவும் வேண்டும்'' என்று அப் பேராசை தலைக்கொள்ள இகபரவாசை சிறிதுமின்றிச் சோமசுந்தரக்கடவுளுடைய திருவடிகளின் தியானமறுவுணர்வோடு ஒரு தனியிடத்திலே வீற்றிருந்தருளினார். இப்படியிருக்கச் சூரியன் அஸ்தமனமாயிற்று.

அன்று அர்த்தராத்திரியில், சிவபெருமானுடைய திருவிளையாட்டால் குதிரைகளாய் வந்த நரிகள், தங்கள் சுயவடிவங்கொண்டு, “ சங்கினோசை, பிணப்பறையோசை, பெண்கள் அழுகுரல், அவர்கள் மார்பிலடிக்கும் ஓசை ஆகிய இவைகளை நாம் என்றும் மகிழ்வோடு கேட்போம். இன்று பகலெல்லாம் குதிரைகளாய் மனிதரைச் சுமந்து கட்டுண்டு சவுக்கடிபட்டு வருத்தமுற்றோம். இப்பொழுது நம்முடைய நல்ல விதிவசத்தாற் சுயவடிவைப் பெற்றுக்கொண்டோம். நாம் காட்டிற் சஞ்சரித்த நாள்முதல் இந்தக் கடுந்துன்பத்தை ஒருகாலத்தும் அறிந்ததில்லை. கட்டிய சங்கிலித் தழும்பும் சவுக்கடித் தழும்பும் நம்முடலைவிட்டு இன்னும் போகவில்லை. இன்றிரா விடியுமுன் நாம் ஓடிவிடுவதே கருமம். மனசார நாம் தின்பதற்கு நத்தை, நெண்டு முதலிய ஊன்கள் இங்கில்லை. இனிப் புதிதாகக் கொள்ளுப்பயறு புற்களைத் தின்னுதல் நமக்கடாது. அரசன் காவலாளரும் நகரிலுள்ளாரும் நம்மைக் காணில் அடித்து வருத்துவர், ஆதலால் இன்றிரவு விடியுமுன் கட்டை அறுத்துக்கொண்டோடிப் போவதே சூழ்ச்சி'' என்று ஒருங்கே கூடிப்பேசி, கொள்ளு முதலியவைகளை வெறுத்து, நத்தை முதலிய ஊன்களை விரும்பி, சங்கிலித்தொடர்களை முறித்து, காலிற் கட்டிய கயிற்றோடு முளைகளைப் பறித்து, ஊளையிட்டுத் தப்பியோடும் வழியைப் பார்த்து, பந்தியினின்ற குதிரைகளைத் தாவிக்கடித்து, அவைகளைப் பலவாறு ஊறு செய்வனவாயின. குதிரைப்பந்தி காக்கும் வீரர்கள் ஊளையோசைகேட்டு உறக்க நீங்கியெழுந்து, அந் நரிகள் அங்குநின்ற குதிரையின் குடர்களைப் பறித்துண்பது கண்டார்கள். காணுதலும் வலியுடைய சில நரி மதிலைத்தாண்டியோடின. சில சாளரவழியாயும் சுருங்கைவழியாயும் நூழில்வழியாயும் ஓடின. முடமும் மூப்பும் குருடும் நோயுமுடைய நரிகள் ஓடுமிடங் காணாமையாற் பந்தியில் ஏங்கிக் கிடந்தன. வேறு சில நரிகள் கிட்டி வெருட்டுவோரைக் கடித்துத் தட்டியோடுவனவும், காற்கீழ்ப் பதுங்கியோடுவனவும், குட்டியை யணைத்துக்கொண்டு மதிலால் குதித்தோடுவனவுமாயின.

இங்ஙனம் அரச மாளிகையைக் கடந்தப்புறப்பட்ட நரிகளெல்லாம் அந்நக கரையடுத்த சோலை முதலிய பல இடங்களினும் நெருங்கி ஊளையிட்டுத் திரிந் தன. நரியோசை எங்கும் மிகுதலால் அந் நகரவாசிகளும் கண்விழித்தார் கள். நாய் முதலிய விலங்குகளும் மயில்முதலிய பக்ஷிகளும் விழித்தன. அந் நரிகள், பசி மிகுதியால் அடுக்களைகளிற் புகுந்து, கருங்கலங்களை யுருட்டு வனவும், அங்குள்ள உணவுகளைத் தின்பனவும், குட்டிகளுண்ணக் கொடுப்ப னவும், கிளி முதலிய பக்ஷிகளையும் ஆடு முதலிய விலங்குகளையும் வதைப் பனவும், தம்மைத் தொடர்ந்த நாய்களைக் கொல்வனவும், வீரர்களைக் கடிப் பனவுமாய், அந் நகரியெங்குந் திரிந்து, புலரிக்காலத்தில் நகர்க்கதவங்கள் திறத்தலும், அவ்வாயில்களால் விரைந்து காட்டிலோடிப்போயின. விடியற் காலத்திலே குதிரைப் பந்தியாளர்கள், "இதனை என்னவென்று நம்மரச னுக்குச் சொல்வோம்!" என அச்சங் கொண்டு, விரைந்தெழுந்து போய், பாண்டியராசனுடைய அரசிருக்கையை யடைந்து, அவனை வணங்கி, உடல் நடுங்க ஒதுங்கி நின்று, "மகாராசாவே, மிகுந்த வேகமும் அழகுமுடையன வாய் நேற்று வந்த குதிரைகளெல்லாம் நரிகளாய்ப் பந்தியில் முன் நின்ற குதிரைகளை ஊறுபடுத்திக் காட்டிலோடின!" என்றார்கள். இச் சொல் அரசன் செவியிற் புகுதலும் அரசன் கண்கள் சிவந்து தீப்பொறி சிந்தக் கோபாவேசத்த னானான். அது கண்டு அங்கிருந்த மந்திரிமார்கள் பயந் தொதுங்கினர். முதனாட் குதிரைகளைக் கண்டு பெருமகிழ்வடைந்த பாண் டியன், அவைகளே மீள நரிகளாயோடின எனக் கேட்டு, அமுதுண்டவன் மீள நஞ்சுண்டாற்போலத் துயர்க்கடலி லாழ்ந்து, தன்னருகிலிருக்கு மந்திரிமார்களை நோக்கி, "மந்திரிமாரே, வாதவூரனென்னுங் கள்வன் நம் பொருள் முழுதையுங் கவர்ந்து கொண்டு நரிகளைக் குதிரைகளாக்கி நமக்கு வரவிடுத்தான். இவன் செய்த மாயத்தைக் கண்டீர்களா! இந்த மாயஞ் செய்தானை நாம் என்செய்வது?" என்று வினவ, அவர்கள், "நம்மவர்களுக்கெல்லாம் பழிபாவம் உண்டாக இத்தீங்கு செய்து செய்ந் நன்றி மறந்த இப் பாவிபொருட்டு இனி யாம் எது சொல்லக்கடவேம்" என்று தலை கவிழ்ந்து பதில் ஒன்றுஞ் சொல்லாது சும்மாவிருந்தார்கள்.

அப்பொழுது மாணிக்கவாசக சுவாமிகள், "அரசனுக்கு அவன் விருப்பத் தின்படி குதிரைகளைக் கொடுத்து அவன் கருமத்தை இனிது முடித்தேம்; இனி மனக்கவலையில்லேம்" என்று மகிழ்ச்சி பொருந்திய மனசோடு, அங்கு நிகழ்ந்த தொன்றையும் அறியாதவராய், அரசனிடத்தே வந்தார். அரசன் அவரைக் கோபித்துப் பார்த்து, "அளவில்லாத பொருள் கொண்டு போய் நல்ல குதிரைகளைக் கொண்டு வந்து தந்தாய். இராசகாரியம் பார்த்துப் புகழ்பெறத் தக்கவர் உன்னைப்போல எந்த வுலகத்திலுண்டு!" என்றான். மாணிக்கவாசக சுவாமிகள் ஒன்றுமறியாதவராதலினால், "அக் குதிரை களுக்கு என்ன குற்றம்?" என்றார். பாண்டியன், "குற்றமொன்றுமில்லை; அர்த்தராத்திரியில் நரிகளாகி, பக்கத்திலே நின்ற குதிரைகளையுங் கடித்துத் தின்று, மனிதருக்கும் இடர் விளைத்து, ஊரைக் கலங்கச் செய்து, காட்டில் ஓடிப்போயின. இவ்வளவுகாலமும் நீ கண்ணுங் கவசமும் போல ஒழுகியது சமயம் பார்த்து நம்முடைய பொருளைக் கவர்தற்கோ! உனது அமைச்சியல் நன்று நன்று! சுத்தமாகிய பிராமண குலத்திலே பிறந்தேமென்றொரு பெருமையுடையாய். நீ செய்தவைகளைப் பிறர் செய்வாராயின், உடனே தண்டிக்கப்படுவார். தண்டலாளர்களே! இவனைக் கொண்டுபோய் நம்முடை டைய பொருள் முழுதையுந் தடுத்தும் ஈர்த்தும் வாங்குமின். மிண்டினால் வலிசெய்தும் வாங்குமின்" என்று சொல்லியனுப்பினான். தண்டலாளர் கள் மாணிக்கவாசக சுவாமிகளைக் கொண்டு போய், உச்சிப்பொழுதிலே சூரியனைப் பார்க்கும்படி நிறுத்தி, நெற்றியிலுங் கைகளிலுங் கல்லு வைத்து வருத்தினார்கள். மாணிக்கவாசக சுவாமிகள் அதனைச் சகிக்கலாற்றாதவராய் வீழ்ந்து, சோம சூரியாக்கினியென்னும் முச்சுடராகிய கண்களையுடைய சோம சுந்தரக் கடவுளை அழைத்து அழுவாராயினார்;

நாதவோ நாத முடிவிறந்த நாடகஞ்செய்
பாதவோ பாதகனை மென்னைப் பணிகொண்ட
வேதவோ வேத முடிவின் விளைந்ததனிப்
போதவோ போத நெறிகடந்த பூரணவோ.

ஐயவோ என்னுடைய அன்பவோ அன்பர்க்கு
மெய்யவோ மெய்யில் வினையேன் தலைவைத்த
கையவோ செய்யகழற் காலவோ காலனைக்காய்
செய்யவோ வேதப் பரியேறுஞ் சேவகவோ.

அத்தவோ கல்லாக் கடையேனை ஆட்கொண்ட
பித்தவோ பொய்யுலகை மெய்யாகப் பேதிக்குஞ்
சித்தவோ சித்தந் தெளிவித் தெனைத்தந்த
முத்தவோ மோன மயமான மூர்த்தியவோ.

சோமசுந்தரக் கடவுளானவர், மாணிக்கவாசகசுவாமிகளுடைய அழுகையைக் கேட்டு, அவருடைய செய்கைகளையெல்லாம் அரிமர்த்தனபாண்டியனுக்கு உணர்த்தவும், தாம் திருமுடியிலே மண் சுமக்கவும், வந்தியென்கின்ற முதியாளைச் சிவலோகத்திற் சேர்க்கவுந் திருவுளங்கொண்டு, வைகைநதியை நோக்கி, ஊழிக் காலத்திற் பெருகாநின்ற சமுத்திரம்போலப் பெருகக்கடவாயென்று ஆஞ்ஞாபித்தருளினர். வைகையானது, முன்னாளிலே காமாக்ஷியம்மையாருடைய தவத்தைக் குலைக்க வந்த கம்பை நதிபோலக் கடும் பெருக்கெடுத்து, மதுராபுரியின் மதிற்புறத்திற்போய், வீடுகளை அழித்து மதிலையும் வீழ்த்தி, உள்ளே புகுந்து, நகரத்தை அழித்தது. அது கண்ட சனங்களெல்லாரும், மைந்தரை எடுப்பாரும், மைந்தரைக்காணாது அலமந்து அழுவாரும், மனைவியரைக் கைப்பற்றிக் கொண்டு பிழைப்பாரும், எங்கே போவோமென்று எண்ணுவாரும், திகைப்பாரும், ஆபரணங்களை எடுத்துப் பேணுவாரும், அவைகளை எடுக்க மறப்பாரும், உயர்ந்த மாளிகைகளிலே ஏறுவாரும், இதற்குக் காரணம் என்னவென்பாரும், நேற்று குதிரைகள் நரிகளாய் ஊறு செய்தனவென்பாரும், ஒரு காலத்திலும் இந்த ஆறு இவ்வாறு பெருகவில்லை யென்பாரும், அரசனுடைய செங்கோல் பிழைத்ததோ வென்பாரும், சோமசுந்தரக் கடவுளுடைய திருவிளையாட்டோ இது வென்பாரும், அந்தச் சோமசுந்தரக் கடவுளல்லாது வேறு யார் இதனை தணிப்பாரென்பாரும், ஆயிரங் குண்டோதரர் வந்து இந் நீரை வாய்மடுத்தாலும் அடங்காதென்பாரும், பரமசிவன் எடுத்துத் தமது சடையில் வைத்தாலல்லது அடங்காதென்பாரும் ஆனார்கள்.

அப்பொழுது, மாணிக்கவாசக சுவாமிகளை ஒறுத்த தண்டலாளரும் தம்முடைய பொருள்களைப் பேணுதற்காகத் தம் வீட்டுக்குப் போனார்கள். போகவே, மாணிக்கவாசக சுவாமிகள் ஆலயத்திற் சென்று சோமசுந்தரக்கடவுளுடைய பாதங்களைத் துதித்து வணங்கிக் கொண்டு ஆனந்தத்தின் மூழ்கிச் சித்திரம்போல அசைவற்றிருந்தார்.

4. மண்சுமந்த படலம்.

மதுராபுரியிலுள்ள சனங்களெல்லாம் வைகைநீர்ப்பெருக்கினாலே வருந்துதலைப் பாண்டியராசன் அறிந்து, மந்திரிமாரை அழைத்து, வைகைநதிக் கரையைக் கட்டி அதன் வேகத்தைத் தணித்து வாருங்களென்று சொல்லியனுப்பினான். மந்திரிமார்கள் போய்க் குடிகளுடைய பெயர்களை யெழுதி, அவரவர்க்கு ஒவ்வொரு கூறு அளந்து எல்லை கீறி, பட்டணமெங்கும் பறையறைவித்து, கூலியாளரை யழைத்து, அவரவர்க்கு அளந்தபடி செய்யுங்களென்று ஆஞ்ஞாபித்தார்கள். அவ்வாறே ஒவ்வொருவருக்கும் அளந்துவிட்ட பங்கைக் கூலியாளர்கள் அடைப்பாராயினர்கள்.

இந் நகரிலே, தவத்தால் நிறைந்தவளும், பிட்டுவிற்றுண்பவளும், தான் நாடோறும் விற்கும் பிட்டினை முதற் சோமசுந்தரக் கடவுளை அன்பினாலே அருத்துவிப்பவளுமாகிய வந்தி யென்கின்ற ஒரு தனித்த முதியாளிருந்தாள். அவள் தனக்கு அளந்து விடப்பட்ட பங்கை அடைத்தற்குக் கூலியாளில்லாமல் வருந்தி, அரசன் ஒறுப்பானென்று பயந்து, சோமசுந்தரக் கடவுளை நினைத்து, "பிட்டு விற்றுண்டு வாழ்கின்ற பேதையேனாகிய யான் இதுவரையுந் துன்பமென்பதை அறியேன். கூலியாளில்லாமையால் அரசன் தண்டிக்கப் போகின்றான். எனக்கோ நாயகனில்லை, மக்களில்லை, சுற்ற

மில்லை, துணையாவார் ஒருவருமில்லை. அவ்வாறாய் அடியேனுக்கு இத் துன்பம் வருவதோ! தேவர்க்கும் தேவரே! அன்பர்க்கு எளியவரே! அரசன் கோபிக்குமுன் கூலியாளாய் வருவாரொருவரையுங் காணேனே! இனி என் செய்வேன்!" என்று மழைபோலக் கண்ணீர் சொரிய அழுதாள். அப்பொழுது அருட்கடலாகிய சோமசுந்தரக் கடவுள், வந்தியென்பாள் இடுகின்ற பிட்டை உலகத்திலுள்ளவர் காண உண்ணவும், அவளுடைய துன்பத்தை யொழிக்கவும், திருவுளங்கொண்டு, அழுக்குப் பொருந்திய பழைய வஸ்திரமொன்றை அரையிற் சுற்றி, திருமுடியின்மேல் வைத்த சும்மாட்டிற் கூடையைக் கவிழ்த்து, திருத்தோளில் மண் வெட்டியை வைத்துக் கொண்டு, மிக்க பசியுடையார்போல, வந்தியுடைய வீதியிலே வந்து, "கூலி கொடுத்து என் வேலை கொள்வாருண்டோ?" என்று கூவினார். வறுமையினால் வருந்திய ஒருவன் பெரிய செல்வத்தைக் கண்டாற் போல, வந்தியென்பாள், அக்குரலைக் கேட்டு மகிழ்ந்து, வெளியே வந்து, தாயை நோக்கி வருங் குழந்தையைப் போலத் தன்னை நோக்கிவரும் அக் கூலியாளரையழைத்து, "எனக்கு அளந்துவிடப்பட்ட கரையை அடைத்துத் தருவாயா?" என்று வினாவினாள். "தாயே, அடைத்துத் தருகின்றேன், எனக்கு என்ன கூலி தருவாய்?" என்றார். "நான் விற்கும் பிட்டையே உனக்குக் கூலியாகத் தருவேன்" என்று வந்தி சொல்ல, சோமசுந்தரக் கடவுள் அதற்கு உடன்பட்டு, "அன்னே! பெரும்பசியால் இப்போது வருந்துகின்றேன். உதிர்ந்த பிட்டையெல்லாம் இடுவாயாயின், அவற்றை நான் முதலில்உண்டு இளைப்பாறி, உனக்கு அளந்து விடப்பட்ட கரையைக் கட்டுவேன்" என்றார். வந்தியார் பிட்டையள்ளி, "அப்பா, இதனை உண்பாயாக" என்று கொடுக்க, கூலியாளர் வஸ்திரத்தை நீட்டி அதனை யேற்று உண்டு, "தாயினுடைய முலைப் பாலிலும் இப் பிட்டு மிகுசுவை யுடைத்து. இது பாண்டியனாயிருந்து இவ்வுலகத்தையாண்ட சோமசுந்தரக் கடவுளுக்கே ஆகும். தந்தைதாயில்லாமற் கூலியாளாய் வந்த எனக்கு இதனைத் தந்து இளைப்பாற்றினாய். இனி வேலைத்தலத்திலே போய் உன் மனமகிழும்படி வேலை செய்வேன்" என்று சொல்லிக் கொண்டு போனார்.

சோமசுந்தரக் கடவுளாகிய கூலியாளர், யாற்றங்கரையை யடைந்து, வந்தியுடைய கூலியாளென்று தம்மை எழுதுவித்துக் கொண்டு, கரையை அடையாது நித்திரை செய்தும், ஆடியும், இனியவிசைகளைப் பாடியும், குதித்தும், வந்தியிடம் அடிக்கடி போய்ப் பிட்டு வாங்கியுண்டும், யாற்றிலே நீந்தியும், நகைத்தும் விளையாடிக்கொண்டு நின்றார். அப்பொழுது, அடைக்கப்பட்ட கரைகளையெல்லாம் பார்த்துக்கொண்டு வந்த ஏவலாளர்கள் வந்தியாருக்கு விட்ட பங்குமாத்திரம் அடைபடாமையைக் கண்டு வெகுண்டு, வந்திக்குக் கூலியாளாய் வந்தவன் யாரென்று ஆராய்ந்து, சோமசுந்தரக் கடவுளாகிய கூலியாளரைக் கண்டு, "மற்றைய பங்குகளை யெல்லாம் எல்லாரும் அடைத்திருக்கவும், இந்தப் பங்கை மாத்திரம் நீ அடையாதது என்னை?" என்று வினவினார்கள். அதனைக் கேட்டும் ஒன்றும் பேசாது இறுமாந்திருக்கும் கூலியாளரை அவர்கள் பார்த்து, "இவனோர் பித்தனோ பேய்கோட்பட்டவனோ ஒன்றுந் தெரியவில்லை; கூலியும் வாங்கிக் கொண்டான்; வந்தியுடைய கூலியானென்றும் எழுதிவித்துக்கொண்டான், மிக்க அழகுடையவனாயுமிருக்கின்றான; இவனுடைய மேனியானது இவன் முன் கூலிவேலை செய்தவனல்லனென்பதை விளக்குகின்றது" என்று அடிக்க அஞ்சி இதனை நாம் அரசனுக்கு விண்ணப்பஞ் செய்வோமென்று போனார்கள். போய்ப் பாண்டியராசனை வணங்கி நின்று, "அரசனே! அளந்து விடப்பட்ட பங்குகளையெல்லாம் எல்லாரும் மலைபோலக் கட்டினார்கள். வந்தியென்கின்ற முதியாள் மாத்திரம் தன் பங்கை அடைத்திலள். மன்மதனிலும் மிக்க கட்டழகுடைய ஒருவன் வந்து, அவளுடைய கூலியாளென்று தன்னை எழுதுவித்துக் கொண்டு, இராசகுமாரன்போலக் களித்தும் ஆடியும் பாடியும் வேலை செய்யாது காலம் போக்குகின்றான். அவனுடைய அழகைக் கண்டு அவனை அடிக்க அஞ்சுகின்றோம்" என்று விண்ணப்பஞ் செய்தார்கள். உடனே அரசன் அடைக்கப்பட்ட கரைகளை நாம் போய்ப் பார்போமென்று மந்திரிமாரோடு புறப்பட்டு வைகையை அடைந்து, எல்லாக் கரைகளும் உயர்த்திக் கட்டப்பட்டிருத்தலைக் கண்டு மகிழ்ந்து,

அடைப்பாரின்மையால் வந்தியுடைய பங்குக்கரையை அழித்து வெள்ளம் பெருகுதலைக் கண்டு கோபித்து, "இக்கரையை அடைப்பவன் எங்கே?" என்று வினவினன். அரசனுடைய கோபத்தைக் கண்ட ஏவலாளர்கள், உள்ளும் புறமும் மேலும் கீழுமாய், உயிர்தோறு மொளித்து நின்ற கள்வராகிய கூலியாளரைக் கையிற் பிடித்து இழுத்துவந்து, "இவன் தான் வந்தியுடைய கூலியாள்" என்று காட்டினார்கள். அரிமர்த்தனபாண்டியன் அவரைக் கண்டு கோபமிகுந்து, பொற்பிரம்பைக் கையினால் வாங்கி, உலகமே யுருவமாக யோனிகளுறுப்பாகக் கொண்ட அவருடைய திருமுதுகில் அடித்தான். சோதிஸ்வரூபியாகிய சோமசுந்தரக் கடவுள் கூடையோடு மண்ணை உடைப்பிலே கொட்டிவிட்டு உடனே மறைந்தருளினார்.

உயிர்க்குயிராகிய சிவபெருமான்மேற் பட்ட அவ்வடித் தழும்பானது, பாண்டியன் மேலும், அவனுடைய மனைவியர் மேலும், மந்திரிமார் மேலும், இராசகுமாரர் மேலும், சேனாவீரர் மேலும், குதிரை மேலும், யானை மேலும் பட்டது; சூரியன் முதலாகிய கிரகங்கள் மேலும், நட்சத்திரங்கள் மேலும், பிருதிவி முதலாகிய பூதங்கள் மேலும், மேகங்கள் மேலும், வேதங்கள் மேலும், சமயக்கடவுளர் மேலும், தேவர்கள் மேலும், முனிவர்கள் மேலும் பட்டது; மனிதர்கள் முதலாகிய இயங்கியற் பொருள்மேலும், மலை, மரம் முதலாகிய நிலையியற் பொருள் மேலும், ஊனிற் பொருந்திய கருவின் மேலும், உயிரில்லாத சித்திரங்கள் மேலும் பட்டது. விஷ்ணுமூர்த்தி தம்முடைய அறிதுயிலை விட்டெழுந்தார்; பிரமதேவர் இஃதென்னையென்று வியந்தார்; இந்திரன் அஞ்சினான்; தேவரும் பிறரும் நடுங்கினார்கள்; யக்ஷர், சித்தர் முதலானவர்கள் முன் வடுப்படாத தம்முடம்பிலுண்டாகிய புண்ணை ஒருவருக்கொருவர் காட்டி மயங்கினார்கள்.

சோமசுந்தரக் கடவுள், எவ்வுயிர்க்கும் உயிராயுள்ளவர் தாமேயென்பதையும், பத்தி வலையிற் படுபவரென்பதையும் காட்டும் பொருட்டுத் திருமேனியிலடிபட்டும், ஒரு கூடை மண் கொட்டிக்கரையை உயரச் செய்தும், மறைந்தருளியதைக் கண்டு, அரசனுடைய ஏவலாளர்கள் வந்தியாரிடத்திற் போனார்கள். "நானனுப்பிய கூலியாள் என்ன செய்தானோ என்ன முடியுமோ!" என்று சோமசுந்தரக் கடவுளை நினைத்து அழுது கொண்டிருந்த அவ் வந்தியாரை, சிவபெருமானுடைய திருவருளினாலே சிவகணங்கள் வந்து, "அன்னே வருக" என்று தேவவிமானத்திலேற்றி, தேவர்கள் பூமழை பொழியவும், வேதங்கள் ஒலிக்கவும், துந்துபி முழங்கவும், சிவலோகத்திற்கு அழைத்துக் கொண்டு போனார்கள்.

பாண்டியராசன், கூலியாளர் மறைந்ததையும், கரை உயர்ந்ததையும், தன்னுடைய உடம்பிலே அடிபட்டதையும், "என்மேலடிபட்டது! என் மேலடிபட்டது!" என்று மந்திரி முதலானோர் பேசுவதையுங் கண்டு, ஐயங் கொண்டு நின்றான். அப்பொழுது சோமசுந்தரக் கடவுள் ஆகாயத்தில் அசரீரியாய்த் தோன்றி, "செங்கோல் வழுவாத பாண்டியனே! உன்னுடைய பொருள்களெல்லாம் தரும வழியிலே சம்பாதிக்கப்பட்டன வாதலாற் சுத்தமுடையனவாம். ஆதலால் அவை நமக்கும் நம்மன்பர்க்கும் வாதவூரனாலே கொடுக்கப்பட்டன. அவனை நீ வருத்தினாய். அப்போது காட்டிலுள்ள நரிகளையெல்லாம் குதிரைகளாக்கித் தந்தேம். அவைகள் அன்றிரவே நரிகளாய் மாறிப்போயின. மற்றை நாளும் அவனை நீ துன்பஞ் செய்தாய். அது பொறுது நாம் வைகையைப் பெருகச் செய்து வந்தியிடத்திலே பிட்டு வாங்கியுண்டு அவளுக்குக் கூலியாளாய் அடிபட்டு, மண்கொட்டிக் கரையை உயரச் செய்து, அவளுடைய துன்பத்தை தீர்த்து அவளை எம்முலகிற் சேர்த்தேம். இவையெல்லாம் நாம் செய்தது இந்த வாதவூரன் பொருட்டேயாம். இவனுடைய செய்கைகளொன்றையும் நீ அறியாய். உனக்கு இம்மையின்பத்தையும் மறுமையின்பத்தையும் தந்த இவனைத் தன் விருப்பத்தின்படி நடக்க விடுத்து, நீ நூல்வழியே நடந்து பூரண ஆயுளுடையனாய் நிறைந்த செல்வத்தோடும் வாழ்வாயாக" என்று சபைதோரும் கேட்க அருளிச் செய்தார். பாண்டியராசன் அச்சமும் அதிசய

மும் ஆனந்தமுமடைந்து, வாதவூரர் எங்கேயென்று தேடித் திருக்கோயிலை யடைந்து அங்கே அவரைக் கண்டு விழுந்து வணங்கி, "பூமியை அரசாண்டு நரகத்துக்கேதுவான பாவங்களைச் செய்த அடியேனுக்குத் தவப்பயனாய் வந்து இம்மை மறுமை யின்பங்களைத்தந்தீர், அதுவன்றிப் பிறவிப்பிணிக்கும் மருந் தாயினீர். தேவரீரையறியாது அடியேன் செய்த பிழைகளை யெல்லாம் பொறுத்து முன்போல இப்பூமியை அரசாளுக" என்று பிரார்த்தித்தான். பற்றுக்களையெல்லாம் விட்ட மாணிக்கவாசக சுவாமிகள் அரசனை நோக்கி, "கடல் சூழ்ந்த நிலவுலகுக்கெல்லாம் ஆயிரங் கண்களையுடைய இந்திர னைப்போல அரசுபுரிவீர், உங்கள் நாயகர் அருளிச் செய்த வண்ணமே செய்வீராக. உம்மை நான் அடுத்தமையினாலே உலகாசாரத்தையும் வேதா சாரத்தையும் அறிந்து சித்தசுத்தியடைந்து சிவனிடத்திற் பத்தி வைத்துச் சம்ஸார வாசனையற்றுச் சீவன் முத்தனானேன். பரமசிவனே மும்மூர்த்தி களை யுண்டாக்கி இவ்வுலகத்தைப் படைத்துக் காத்து அழித்துப் பிறவித் துன்பத்தினுக்கு அஞ்சினோர்க்குக் கெடாத முத்தியின்பத்தைக் கொடுத் தருளுவர். உயர்வொப்பில்லாத இத் திருவாலவாயுடையாரே மந்தரம், கைலாசம், மேரு, ஸ்ரீபருப்பதம், காசி முதலிய தலங்களிலே போக மோக்ஷ ங்களைக் கொடுத்துக் கொண்டு வீற்றிருப்பார். இவரே கண்ணுவர் முதலான இருடிகளுக்கு வேதத்தின் உண்மையை அருளிச் செய்தார். ஞானாகாச மாகிய சிதம்பரத்துக்கு வரும்படி அடியேனுக்கு ஆஞ்ஞாபித்தார், ஆத லால் அங்கே என்னைப்போகும்படி செய்க" என்று சொல்லி, சோமசுந்தரக் கடவுளை வணங்கித் துதித்து விடை பெற்றுக் கொண்டு புறப்பட்டார். பாண்டி யராசன் பின் தொடர்ந்து, மாணிக்கவாசக சுவாமிகள் "நில்லும் நில்லும்" என்று தடுக்கவும், கூப்பிடு தூரமளவும் போய்ப் பாதங்களிலே விழுந்து நமஸ்கரித்து அனுமதி பெற்றுக் கொண்டு திரும்பினான். திரும்பி வந்து கோயிலையடைந்து, சோமசுந்தரக் கடவுளைத் தரிசித்து, தான் அடிக்கும்படி பிரம்பு நீட்டியபோது திருமுதுகைக் கொடுத்தருளிய அந்தக் கருணையை நினைத்து நினைத்து ஆறாது,

அடையாளம் படஒருவ னடித்தகொடுஞ் சிலைத்தழும்புந்
தொடையாக ஒருதொண்டன் தொடுத்தெறிந்த கல்லும்போற்
கடையானேன் வெகுண்டடித்த கைப்பிரம்பும் உலகமெல்லா
முடையானே பொறுத்ததோ உன்னருமைத் திருமேனி.

கடியேறு மலர்மகன்மால் முதலாய கடவுளரும்
படியேழு மளவிறந்த பல்லுயிரு நீயேயோ
முடியேற மண்சுமந்தாய் முதுகுதனி லடிபட்ட
தடியேனும் பட்டேனின் திருமேனி யானேனோ.

கைக்குமருந் தின்சுவைபின் காட்டுமா றெனவினைக்கும்
பொய்க்குமருங் கலனாகி மண்ணாண்டு புலைநரகந்
துய்க்குமருந் துயர்களைவான் மாறாய்நின் துணையடிக்கே
உய்க்குமருந் தவரிவரென் றறியாமை யொறுத்தேனே.

பாதியுமை யுருவான பரமேட்டீ எனக்கிம்மை
ஊதியமும் பரகதியு முறுதியென விளைவிக்கும்
நீதியினால் மந்திரியாய் நின்னருளா யவதரித்த
வேதியரை யறியாதே வெறுத்துநா னொறுத்தேனே.

மாயா விருத்தியினால் மாழாந்து மாதவரை
ஆயா தொறுத்தே னருநரகத் தாழ்ந்துநான்
வீயாம லின்றனையார் மெய்ம்மையெலாந் தேற்றியவென்
தாயானாய் தண்ணளிக்கென் தமியேன்செய் கைம்மாறே.

நின்னையுணர்ந் தவர்வேத நெறிவேள்வி செய்தூட்டும்
இன்னமுதிற் கழிசுவைத்தோ இவளிடும்பிட் டெவ்வுயிர்க்கு
மன்னவனே செந்துவர்வாய் மலர்ந்தமுது செய்தனையால்
அன்னையிலா உனக்கிவளோ ரன்னையாய் வந்தாளோ.

அன்றுசிறுத் தொண்டரிடும் பிள்ளைக் கறியமுதும்
மென்று சுவைதெரிந்த வேடனிட்ட ஊனும்போல்
நன்று நரையாட்டி யிடுபிட்டும் நயந்தருந்தி
என்று மடியார்க் கெளிவந்தா யெந்தாயே.

நரியாவும் பரியாக்கி நடத்தியுமம் பரமன்றித்
தரியாயான் தருதுகிலைத் திருமுடிமேற் றரித்துமறைக்
கரியாய்நீ யென்பாச மறுக்கவருந் திருமேனி
தெரியாதே பரியாசை திளைத்திருமாந் திருந்தேனே.

விண்சுமக்கும் புள்ளாய் விலங்காய்ச் சுழன்றுமனம்
புண்சுமக்குஞ் சூழ்ச்சி வலியுடைய புத்தேளிர்
மண்சுமக்கு மள்ளராய் வந்திலரே வந்தக்காற்
பண்சுமக்குஞ் சொல்லிபங்கன் பாதமுடி காண்பாரே.

என்று பலவாறு துதித்துத் தம்மையடைந்த அன்பர்க்கு இவரன்பரா மென்றும் இவரைப் பெற்றுற் போக மோக்ஷம்பெறுதல் எளிதாமென்றுஞ் சொல்லி, பல திருப்புணிகளையும் பூசை முதலானவைகளையுஞ் செய்வித்து, வெள்ளியம்பலத்தில் மாறியாடிய திருவடிகளிலே பதிந்த அன்புடையனாய் அரசு செய்து கொண்டிருந்தான்.

அப்படி வாழுங் காலத்தில் அரிமர்த்தனபாண்டியன், பல செல்வங்களும் ஓங்க, சகநாதனென்கிற புத்திரனைப்பெற்று, அவனை முடிசூட்டி அரசனாக்கி வைத்து விட்டு, மாணிக்கவாசக சுவாமிகளுடைய சேர்க்கையினாலே மும் மலத் தொடர்ச்சி நீங்கிச் சிவபெருமானுடைய திருவடிகளை யடைந்தான்.

மதுரையினின்றும் புறப்பட்ட மாணிக்கவாசகசுவாமிகள், பல திருப்பதி களையும் வணங்கிக் கொண்டு, சிதம்பரத்தை அடைந்து, வீதிதோறும் விழுந்து விழுந்து நமஸ்கரித்து, திருக்கோயிலிலே புகுந்து, சச்சிதானந்த மயமாகிய சிவகங்கையிலே ஸ்நானஞ் செய்து, சபாநாயகர் தமது அருட்சத்தியாகிய சிவகாமியம்மையார் காண ஆனந்தத்தாண்டவஞ் செய்தருளா நின்ற கனக சபைக்கு எதிரே சென்று, காந்தத்துக்கு எதிர்ப்பட்ட இரும்பு போல இழுப் புண்டு போனார். திருப்பெருந்துறையிலே தம்மை அடிமைகொண்ட ஆசாரி ய மூர்த்தமாய்த் தோன்றி, வருகவென்கின்ற குறிப்போடு நின்று அங்கே நிருத்தஞ் செய்கின்ற சபாநாயகருடைய நிலையைக் கண்டு, அஞ்சலி செய்து நிலத்தில் வீழ்ந்து பரவசமானார். அக்கினியிற்பட்ட வெண்ணெய்போல மனங் கசிந்துருகிப் பாடினார், ஆடினார். திருவாசகமருளிச் செய்து துதித்துக் கொண்டு சில நாளிருந்து, பின் சபாநாயகருடைய ஆஞ்ஞையினாலே, சிதம் பரத்துக்குக் கிழக்கேயுள்ள தபோவனத்தையடைந்து சிவானந்தத்தி லமிழ்ந் திச் சிவயோகஞ் செய்துகொண்டிருந்தார். அந்நாளிலே, ஈழமண்டலத்தி லுள்ள புத்தர்கள் சிலர் சிதம்பரத்தையடைந்து தில்லைமூவாயிரவரோடு வாதுசெய்யும்படி கேட்டார்கள். சபாநாயகர் தில்லை மூவாயிரவருக்குச் சொப்ப னத்திலே, தோன்றி, "வாதவூரனை அழைத்து வந்து புத்தரோடு வாது செய்யும்படி விடுவீராயின் உங்களுக்கு வெற்றியாகும்" என்று திருவாய் மலர்ந்தருளினார். தில்லை மூவாயிரவர் நித்திரைவிட்டெழுந்து களிப்புற்றுத் தபோவனத்தை யடைந்து மாணிக்கவாசக சுவாமிகளை அழைத்தார்கள். அதற்குச் சிவாஞ்ஞையின் வழியே நின்ற சுவாமிகள் மறுத்தனர். தில்லை மூவாயிரவர் திரும்பிப்போய் வருத்த முற்றிருக்க, சபாநாயகர் மீளவும் அவர்களுக்குக் கனவிலே தோன்றி, திருப்பெருந்துறையிலே குருந்த மரத் தடியிலே தாம் ஆட்கொண்ட முறைமையினையும் மாணிக்கவாசகனென்று இட்ட நாமத்தினையும் அறிவித்து, "இனி அவனை மாணிக்கவாசகனென்று அழையுங்கள், வருவான்" என்றருளிச் செய்தார். அப்படியே அவர்கள் போயழைக்க, மாணிக்க வாசகசுவாமிகள், "சிவபெருமானுடைய திருவருள் இதுவோ?" என்று அவர்களோடு புறப்பட்டு வந்து, சபாநாய கரைத் தரிசித்துக் கொண்டு, புத்தர்களோடு வாதுசெய்து அவர்களைவென்று, பிறவிதொட்டு ஊமையாயிருந்த சோழராசாவுடைய மகளை ஊமைதீர்த்தருளி னார். பின்னுஞ் சிலகாலந் திருவாசகம் பாடித் துதித்துக் கொண்டு அந்தத் தலத்திலேயிருந்து சிவபெருமானுடைய திருவடி நீழலை யடைந்தார்.

II

ஜன விநோதினி.

---

1 சிருஷ்டியின் அதிசயங்கள்.

ஒரு நாள் மாலை வேளையில் கொல்லை வெளியிலே நான் உல்லாசமாய் உலாவித்திரிகையில், பொழுதுபோகிற தருணமாயிற்று. அச்சமயத்தில் மேற்றிசையிலே தோன்றிய செவ்வானத்தின் அதிசயங்களைக் கண்டு அகங்களித்து நிற்கையில், சிறிதுசிறிதாய் அச்செவ்வான மறைந்துபோயிற்று. உடனே நக்ஷத்திரங்களும் கிரகங்களும் ஒவ்வொன்ருய்த் தோன்றச் சீக்கிரமே ஆகாயமுழுதும் அவற்ருல் அடர்ந்து ஓர் அழகொளி பரப்பியதுபோலாயிற்று. அதற்கேற்க, அந்தக் காலத்தின் சிறப்பிஞலும், நக்ஷத்திரங்களின் ஒளி மிகுதியாலும் ஆகாயம் அதிக நீலமாய்ப் பார்க்கப்பதிஞயிரம் கண்ணும் போதாமலிருந்தது. இவ்விதமான விஞேதக்காட்சியைப் பூர்த்திபண்ணப் பூரணச் சந்திரனும் உதயமாயிற்று.

முன்னமே வெகு விசித்திரமாய்த் தோன்றும் ஆகாயத்தில் தேஜோமயமாய்ச் சந்திரன் எழுந்துவரக்காணும்போது என் இருதயத்தில் ஒரு எண்ணமுண்டாயிற்று. "கடவுளுடைய கைத்தொழிலான ஆதியந்தமில்லாத அற்புதமான ஆகாயத்தையும், அவ்வாகாய மகா சபையைச் சிங்காரிக்கும் சோதிமண்டலமான சந்திரனையும், இன்னும் இப்பூமியைப்போலவே சூரியனைச் சுற்றி ஓடும் செவ்வாய், சனி, சுக்கிரன் முதலிய நவக்கிரகங்களையும் நக்ஷத்திரங்களையும் நினைத்துப் பார்ப்போம். இன்னும் ஆகாயத்தில் அதி உன்னதமான விடங்களில் நமது கண்ணுக்குத் தெளிவாய்த் தோன்றியும் தோன்ருமலும், அவற்றைப் படைத்தவனுலும் அளவிடுதற்கரிய அநேகமாயிரம் நக்ஷத்திரங்கள் காணப்படுகின்றனவே ; அத்தனையும் என்னவென்று எண்ணுகிறீர்கள் ? இதைப்போல் அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு பெரிய அண்டம். அதாவது, தனித்தனி ஒவ்வொன்றும் ஒவ்வொரு பெரிய சூரியனும் அதைச் சுற்றி ஓடுகிற பல கிரகங்களும் நக்ஷத்திரங்களும் அமைந்த ஒவ்வொரு சோதிமண்டலம். அவ்வுலகங்களில் வாழ்பவர் கண்ணுக்கு, நமக்குத் தோன்ருத இன்னும் எத்தனையோ அண்டங்கள் நக்ஷத்திரங்கள் போல் காணப்படும். மூவுலகும் அளந்த மகா புருஷனை சர்வேசுவரனுடைய சரீரத்தில் மயிர்க்காலுக்கு மயிர்க்கால் ஒவ்வொரு அண்டம் தொங்குகிறதென்கிருர்களல்லவா ?" என்றிப்படி மெய்ம்மறந்து சர்வேசுவரனுடைய சிருஷ்டியின் அதிசயங்களெல்லாம் எண்ணி அகமகிழ்ந்து கொண்டிருக்கையில், என் இருதயத்தில் ஒரு எண்ணமுண்டாயிற்று. " ஆ ! இப்படிப்பட்ட பல உலகங்களுக்கு முன்னே நாம் எவ்வளவு பொருள் ! ஆயினும் கருணைக்கடலான கடவுள் நம்மையும் மறவாமல் காத்தருளுகிருரல்லவா ! " என்று ஆனந்திக்கலானேன்.

இங்கே நமக்கு ஒளி கொடுக்கின்ற சூரியனும் அதைச் சுற்றிய கிரகங்கள் முதலிய யாவையுமே அடியோடு அழிந்து இருந்தவிடந் தெரியாமல் போய்விடட்டுமே ; ஆயினுமென்ன ? கடற் கரையில் ஒரு கருமணல் காணுமல் போனுலும், கடலில் ஒரு நீர்த்துளி குறைந்தாலும் என்ன குறைவு உண்டாகுமோ, அதைப்பார்க்க அதிகமான குறைவு இந்தச் சிருஷ்டியில்உண்டாகாது. ஈசுவர சிருஷ்டி முழுமையும் ஆய்ந்தோய்ந்து பார்க்கையில், அதில் இவ்வண்டம் அமைந்திருக்குமிடம் அவ்வளவு சொற்பமானது. இவ்வண்டம் முழுதும் இல்லாமற் போனுலும் அதனுல் இந்தச் சிருஷ்டி மகா சமுத்திரத்தில் ஒரு குறைவில்லை. இந்தப் பிரபஞ்சம் முழுமையும் ஒரே திருஷ்டியாய்ப் பார்த்து அடிமுதல் நுனி வரையில் நுட்பமாய்ச் சிந்திப்பவர்க்கு இந்த விடம் சூனியமாகவே தோன்ருது. அவ்வளவு சிறந்த அறிவுள்ளவர்களும் உலகிலுண்டோ வென்கிறீர்களோ ? நமக்கே ஒருகால் இந்தச் சிருஷ்டி

முழுமையும் அறியத்தக்க அற்புதமான அறிவுண்டானாலும் உண்டாகலாம்; அல்லது நம்மைப் பார்க்க மிகவும் துடிப்பானவர்களாய் இப்போது காணப் படுகிறவர்களுக்கு அவ்வுயர்ந்த அறிவு உண்டாவதற்கு ஐயமில்லை. நாம் வெறும் கண்ணால் கண்டு பிடிக்கமாளாத பல நக்ஷத்திரங்களைக் கண்ணாடி களைக் கொண்டு காண்கிறோம். தூரதிருஷ்டிக் கண்ணாடிகள் எவ்வளவு சிறந்திருக்கின்றனவோ, அவ்வளவு அதிகமாய் நக்ஷத்திரங்கள் காணப் படுகின்றன. தாம் முதலில் படைக்கப்பட்ட நாள் முதல் தம் ஒளி இன்னும் இப்பூமிக்கு வந்து சேராத அவ்வளவு உயரத்திலும் அநேக நக்ஷத்திரங்கள் இருக்கலாமென்று ஹைஜினியஸ் என்னும் பண்டிதர் ஒருவர் சொல்லியிருக் கிறார். இந்தப் பிரபஞ்சத்திற்கு எல்லை ஒன்று உண்டென்பதற்குச் சந்தேக மில்லை. ஆயினும் சர்வ சக்தியுள்ளவரும் கைம்மாறு வேண்டாத கருணைக் கடலுமான கடவுள் அளவிலா வல்லமையையும் மகிமையையும் வெளி யிடும் பொருட்டு இந்தப் பிரபஞ்சத்தைப் படைப்பதாகிய விநோத விளையாட் டைக் கைக் கொண்டாரென்றால், அவருடைய படைப்புக்கு இவ்வளவென்று எல்லையேற்படுத்த நம்போன்ற மிதபுத்தியுள்ள மனிதராலாகுமோ?

இவற்றையெல்லாம் ஆலோசிக்கும்போது மறுபடியும் எனக்கு மிகவும் அச்சம் உண்டாயிற்று. "ஆ, கடவுள் எவ்வளவு அதிகமான வேலையைக் கைக் கொண்டிருக்கிறார்! அநந்தமான உலகங்களையும் படைத்து அவற்றுள் ஒன்றுகூடவிடாமல் அனைத்தையும் ஊக்கத்தோடு காத்தருளவேண்டுமல்ல வா? இப்படி அநேகமாயிரம் உலகங்களையும் காத்தருளுகிற கவலையில் மிகவும் அற்பமாகிய நம்மையும் அவர் எப்படிக் காத்தருளப்போகிறார்! எத்தனையோ தொல்லையில் ஒரு வேளை நம்மை மறந்தாலும் மறந்து போகலாமல்லவா?" என்றிப்படி எண்ணமிட்டு அஞ்சி நின்றேன்.

ஆயினும் உடனே அதற்கு முழுதும் மாறான மற்றொரு எண்ண முண்டாயிற்று. "ஆ, நம்முடைய மதியீனத்தை என்னென்று சொல்வது! ஒன்றுமறியாத நம்மைப் போலவே எல்லாமறிந்த கடவுளையும் நினைக்கிறதா? ஒரே சமயத்தில் பல காரியங்களைக் கவனிக்க நம்மாலாகாது. ஏதோ ஒரு காரியத்தில் நாம் கவனம் வைத்தால் மற்றக் காரியங்களை உபேக்ஷை செய்வது நமது இயற்கை. எவ்வளவு வல்லவராயினும் அவரவர் மதிக்குத் தக்கபடி இந்தக் குறைவு மனிதர் அனைவரிடத்திலும் உண்டு. கடவுளால் படைக்கப்பட்டவர்எப்படிப்பட்டவரானாலும் சரி, அவர் சஞ்சரிக்குமிடம் மிக வும் சொற்பமாதலால் அதற்கேற்றபடி அவர் அறிந்தபொருள்களும் அளவிட்டவையாகவே யிருக்கும். நாம் செய்கிற செய்கைகளும் அறியும் பொருள்களும் அவரவர் மதிக்கேற்றபடி ஏறத்தாழப் பலவளவாயிருக்கும். நம்முள் ஒருவன் எவ்வளவு அதிகமாய் அறிந்தவனாயிருப்பினும் அவன் அறிவும் ஓரளவுள்ளதேயொழிய அளவுகடந்ததன்று. சர்வஞ்ஞரான ஈசு ரரைப்பற்றி ஆலோசிக்கும் போதும் அவருடைய அறிவும் இப்படி ஓர் அளவுள்ளதேயென்று நம்மைப்போலவே நினைத்துவிடுகிறோம். நன்றாய் ஆய்ந்தோய்ந்து பார்க்குமளவில் இப்படிப்பட்ட குறைவு ஒன்றும் கடவுளிடத் தில் கிடையாதென்பது உள்ளங்கை நெல்லிக் கனிபோலத் தோன்றும். அவனன்றி அணுவும் அசையாது.

"ஆதலால் ஈசுவரர் தமக்கிருக்கிற பல தொழிலில் நம்மை மறந்து உபேக்ஷை செய்வரோவென்றெண்ணி நாம் அணுவளவும் அச்சப்பட வேண்டு வதில்லை. அவர் சர்வ வியாபியென்பதையும் சர்வஞ்ஞரென்பதையும் எண் ணிப்பார்ப்போமானால் அந்த அச்சம் உடனே நீங்கிவிடும். கருப்பைக்குள் பாலகனையும் கல்லுக்குள் தேரையையும் மறவாமற் காக்கின்றன கடவுள் நம்மை மறந்துபோவாரோ?

"கடவுள் சர்வவியாபியாகையால் இந்தச் சிருஷ்டியிலுள்ள ஒவ்வொரு பொருளிலும் தாம் உட்புகுந்து அதது செய்ய வேண்டிய செய்கைகளைச் செய் வித்து இந்தப்பிரபஞ்சம் முழுமையும் தாமே தாங்குகிறார்; இந்தச் சிருஷ்டி யில் அவரில்லாதவிடமில்லை. அவர்க்கு எட்டாத தூரமாவது அவர் உட் செல் லக்கூடாத அவரைப் பார்க்க அதிகச்சிறிதாவது அதிகப் பெரிதாவது ஒன்றும்

கிடையாது. சித்தோ அசித்தோ, அணுவோ மகத்தோ எந்த வஸ்துவிலும் அவர் அந்தர்யாமியாயிருக்கிறார். இந்தப் பிரபஞ்சத்தில் எந்தப் பொருளை யும் விட்டு ஒழியக்கூடாமலிருப்பதே கடவுளுக்கு ஒரு குறையென்று சொல்ல வேண்டுமேயொழிய மற்றொரு குறையுமில்லை. ஈசுவரராகிய ஒரு மகா சக்கிரத்திற்கு மையம் எங்குமிருக்கிறது. சுற்றெல்லை எங்குமில்லையென்று ஒரு மகாவித்துவான் வர்ணித்துச் சொல்லியிருக்கிறார்.

"இப்படி சர்வ வியாபியாயிருப்பது போலவே கடவுள் சர்வஞ்ஞராயுமிருக் கிறாரல்லவா? அவர் சர்வவியாபியென்பதனாலேயே சர்வஞ்ஞரென்பதும் ஏற் படுகின்றது. சித்தோ அசித்தோ இந்தப் பிரபஞ்சத்திலுள்ள பொருள் அனைத்திலும் அவர் அந்தர்யாமியாயிருக்கிறாரென்றால் அவற்றில் உண் டாகும் ஒவ்வொரு சேஷ்டையையும் மனோபாவத்தையும் அவர் எப்படி அறிந்து கொள்ளக்கூடாமலிருப்பார்! இந்தப் பிரபஞ்சமெல்லாம் பர மாத்துமாவான கடவுள் தமக்கென்று தாமே நிருமித்துக் கொண்ட ஒரு பெரிய ஆலயமென்றும் அவருடைய சரீரமென்றும் சொல்லுகிறார் கள். ஆய்ந்து பார்க்குமளவில் இவ்வுலகமெல்லாம் அவருடைய ஞானேந் திரியமென்றே சொல்ல வேண்டும். அதனாலேயே அவர் எல்லாம் அறிந்த வராகிறார்.

"ஜீவாத்துமாவானது இந்தச் சரீரத்தைவிட்டு எழுந்துபோமானால் பின்பு அதற்கு எங்கும் யதேச்சையாய்ச் சஞ்சரிக்கச் சக்தி உண்டாகையால் எவ் வளவு தூரம் போனாலும் எங்கும் கடவுளுடைய சக்தி அமைந்திருக்கக்கண்டு அதிசயிக்கும்படியாகும். ஆ இப்படி எங்கும் உள்ளவரும் எல்லாம் உணர் ந்தவருமான கடவுளை நாம் காணக்கூடுமானால் நமக்கு எவ்வளவு ஆனந்த மாயிருக்கும்! முன்னே பார்த்தாலும் அவர் நமது கண்ணுக்குத் தென்பட வில்லை. பின்னே பார்த்தாலும் தென்படவில்லை. பக்கங்களில் பார்த்தாலும் காணப்படவில்லை. அவர் எங்கும் உள்ளவராயினும் எங்கே பார்த்தாலும் நமது கண்ணுக்கு மட்டும் அவர் காணப்படவில்லையே? ஆச்சரியம்!"

இப்படிப் பலவிதமான கடவுளுடைய நித்திய கலியாண குணங்களையெல் லாம் நினைத்துப் பார்க்கையில் அவரவர் மனத்திலுள்ள எவ்விதமான அஞ் ஞானவிருளும் அந்த க்ஷணமே ஒழிந்து போகின்றது. தமது சிருஷ்டியில் அகப்பட்ட பொருள் எதையும் அவர் உபேக்ஷை செய்கிறதில்லை. அவற்றுள் ளும் நம்மை ஒரு வேளை கடவுள் கைவிடுவாரோவென்று அஞ்சி நடப்பவர் களை அவர் முக்கியமாய்க் கண்ணுற்று வருகிறார். நாம் எண்ணுகிற ஒவ் வொரு எண்ணமும் இப்படிப்பட்டதென்று அவர்க்கு நன்றாய்த் தெரியும். அவர் ஒருபோதும் நம்மை உபேக்ஷை செய்வதில்லையாதலால் நாம் அவரைப் பூரணமாய் நம்பி நடக்கக்கடவோம்.

2 சிருஷ்டியைக்கொண்டு சிருஷ்டிகர்த்தாவைக் கண்டுகொள்.

இந்தப் படைப்புப்பொருள்கள் அனைத்தும் அவற்றைப் படைத்தவர் பேரரு ளும் பேராற்றலும் உடையவரென விளக்குகின்றன. சகலமான சராசரங் களுக்கும் ஆதாரமான இப்பெரும் பூகோளத்தைப் பாருங்கள்; எந்தப் புறமும் நம்மைச் சுற்றிச் சூழ்ந்து கொண்டிருக்கும் அளவிறந்த ஆகாய மகாசமுத்திரத்தைச் சற்று அண்ணாந்து பாருங்கள்; ஆகாயமெங்கும் நிறைந்து நமக்கு ஒளி கொடுக்கும் அநேகமாயிரம் நக்ஷத்திரங்களையும் இப்பூமியில் உள்ள பிராணி வர்க்கங்களையும்-அனைத்திற்கும் பிராணாதாரமாய் எந்தப் புறமும் சூழ்ந்திருக்கின்ற வாயு மண்டலத்தையும் சமுத்திரங்களை யும் உற்றுப் பாருங்கள். இப்பூமியை இவ்வண்ணம் அந்தரத்தில் ஓடும்படி அமைத்தது யார்? முதலில் இதற்கு அஸ்திவாரம் ஏற்படுத்தினது யார்? இப்பூமியின் மேற்புறம் இப்பொழுதிருப்பதைப் பார்க்கச் சிறிதளவு அதிக மாய் உறுதி கொண்டிருக்குமாயின் மானிடர்கள் பயிர்த் தொழிலுக்குப் பண்படுத்தச் சிறிதும் உதவியற்றதாகிவிடும்; இப்பொழுது இருக்குமளவு

உறுதியற்றிருக்குமாயின் பிராணிகளின் அடிவைப்புகள் அதன் மேல் தாங்காது சேற்றிலிட்ட கால்போலப் புதைந்துபோம்படியாகும். இவ்வண்ணம் இப்பூமியை அமைத்திருப்பதனால் உண்டாகிவரும் நன்மைகளுக்கு அளவுண்டோ ? இயற்கையில் வெட்ட வெளியாய்க் கண்ணுக்குக் கொடுமை செய்யுமிடங்களெல்லாம் கண் குளிரக் காணும் விநோதக் காட்சியுடையவையாகின்றன ; இரண்டொரு வருஷத்திலே காய்கனி மலர் இலைதழை முதலியவை நிறைந்த மரஞ்செடிகள் அடர்ந்த தோட்டங்களும் தோப்புகளும் உடையனவாய் மனிதர்க்கு மிக்க மனோகரமான இடங்களாகின்றன. அவற்றின் சம்பத்தைக் குறைப்பதொன்றுமில்லை ; அவை எத்தனை ஆண்டு தம் ஆட்சிகளை இவ்வுலகத்தார்க்கு அளித்துவரினும் எள்ளளவும் அழிவு பெறுவதில்லை ; அவை எப்பொழுதும் மூப்புப் பெறுவதில்லை ; என்றும் ஏகரீதியாகவே தம் உடம்பினின்றும் அளவற்ற ஐசுவரியங்களை அளித்து வருகின்றன. நாளளவிலே மனிதர்கள் முதிர்ந்து மாண்டு ஒன்றன் பின் ஒன்றாய்ப் பல தலைமுறைகள் கழிந்துவரினும் இப்பூமிமட்டும் வருஷந்தோறும் வசந்தகாலத்தில் மறுத்து மறுத்து இளமைபெறுகின்றது. அதைப் பின்னும் பண்படுத்தினால் தற்கால நிலைமையைப்பார்க்கப் பதினாயிரமடங்கு மிகுதியாகச் செழித்தோங்கும்.

இப்பூமியெங்கும் ஏகரீதியாயிராமல் உயர்ந்தும் தாழ்ந்தும் பற்பலவிதமாக வேறுபட்டு அமைந்திருப்பது அதற்கோர் அற்புதக் காட்சியாயிருப்பதோடுகூட மிக்க உபயோகமுமாகின்றது. கடவுள் கருதிய விடங்களில் குன்றுகளும் மலைகளும் உயர்ந்தெழுந்திருக்கின்றன ; அகாதமாய்க் கணவாய்கள் ஆழ்ந்திருக்கின்றன. அவ்விடங்களில் ஆடுமாடுகளுக்கு உபயோகமான இலைதழைகள் அபரிமிதமாக வளருகின்றன ; சமபூமியான நாடுகளில் பயிர்கள் பொலிவுற்றிருக்கின்றன. அனைவரும் அதிசயித்துக் காணத்தக்க ஓர் நாடகசாலைபோலக் கொஞ்சமுயர்ந்த குன்றுகளில் பலவகைப் பழச் செடிகளும் மரங்களும் வளர்கின்றன. பெரிய மலைகள் ஆகாயமளாவியுயர்ந்து சிகரங்களில் வெள்ளிமலைபோல வெளேலென்று பனி மூடி வெளுத்திருக்கின்றன. அவற்றின் பாரிசங்களினின்று பெருகிவருகின்ற பிரவாகங்களே பெரிய நதிகளுக்குப் பிறப்பிடமாகின்றன. மானிட தேகத்திலுள்ள எலும்புகள் தசைகளைத் தாங்குவதுபோலப் பருவதப் பிராந்தங்களிலுள்ள பெரும் பாறைகள் அம்மலைகளை உறுதியாகத் தாங்குகின்றன. இவ்வண்ணம் இப்பூமி ஓரிடத்துக்கு ஓரிடம் வேறுபட்டிருப்பது நாடுகளுக்கு ஓர் அற்புதக் காட்சியாகின்றது ; மேலும் அதுவே மன்னுயிர்களுடைய விருப்பங்களெல்லாம் நிறைவேறுவதற்கு ஏதுவுமாகின்றது.

இப்பூமியில் உற்பத்தியாகின்ற பொருளனைத்தும் மறுபடியும் ஐம்பூதங்களாகப் பிரிந்து அதிலேயே அடக்கமாகிப் புதிதாகப் பலபொருள் உற்பத்தியாவதற்கு ஏதுவாகின்றன. பூமியில் முளைப்பவையெல்லாம் மறுபடியும் அதிலேயே மடிகின்றமையினால் ஒன்றும் அழிவதில்லை ; நாம் ஒருவிதை விதைப்போமானால் இப்பூமி அதைப்போல் ஆயிரம்பங்கு அதிகமான பயன்தரத்தக்க பொருளாக்கி நமக்குத் தருகின்றது. மேலும் இப்பூமி நாம் மாடமாளிகை, கூடகோபுரம், கோயில் குளம் முதலிய பல சிறந்த கட்டடங்கள் கட்டுவதற்கு உபயோகமான பலவகைக் கற்களை உற்பத்தியாக்குகின்றது ; மனிதர்க்கு மிக்க உபயோகமானதும் மேன்மை பெற்றதுமான பலவகைத் தாதுவர்க்கங்களைக் கர்ப்பத்தில் அடக்கிக்கொண்டிருக்கின்றது.

இதினின்றும் உண்டாகின்ற செடி கொடிகளை விசாரித்துப் பார்ப்போம். அவற்றின் வகை இத்தனையென்று எண்ணிச் சொல்ல எவராலுமில்லை. அவற்றுள் ஒவ்வொன்றின் இயற்கையும் ஒவ்வொரு விதமானது. இவ்வுலகம் உண்டான நாள் முதல் உண்டாகித் தேசமெங்கும் பரந்திருக்கின்ற விஸ்தீரணமான காடுகளைக் கவனியுங்கள் ; சாகோபசாகமாய் உயர்ந்து ஆகாயம் முழுதும் பரந்திருப்பதுபோலப் பூமிக்குள்ளும் விசேஷமாக வேரோடி எங்கும் வியாபித்திருக்கின்ற விருக்ஷங்களையும் ஆலோசியுங்கள். அத்தனை விருக்ஷங்களையும் எவ்வகைக் காற்றுக்கும் அசையவொட்டாமல்

உறுதியாக நிலைநிறுத்திக் காக்கின்றவை அவற்றின் வேர்களே. அவ் வேர்களே பூமிக்குள் நாட்டிய குழைகள்போலிருந்து அந்த விருக்ஷங்கள் வளர்வதற்கு வேண்டிய பூசாரங்களை நாற்புறத்தினின்றுமிழுத்து அடி மரத்தில் கொண்டு சேர்க்கின்றன. மெல்லியதான மரத்தின் உட்புறம் வெயில் காற்றுகளில் அடிபட்டு அழியாதபடி மேற்பட்டை அவற்றைப் பத்திரமாகக் காக்கின்றது. வேர்கள் அடிமரத்தில் கொண்டு சேர்த்த சாரங் களைக் கிளைகள் பல வழியாகப் பிரிந்து மரம் முழுதும் செலுத்துகின்றன. கோடைக்காலத்தில் கதிரவனது கொடிய கிரணங்களால் நாம் வருந்தித் தவிக்காதபடி இம்மரங்கள் நமக்கு நிழல் கொடுத்துக் காக்கின்றன. குளிர் காலத்திலும் நாம் குளிரால் வருந்தாதபடி அவை சூடுண்டாக்குகின்றன. மரக்கட்டைகள் அடுப்பெரிப்பதற்கு மாத்திரமே உபயோகப்படுவனவல்ல; வீடுகட்ட வேண்டிய உத்தரம் முதலியன, மேஜை நாற்காலி முதலிய வீட்டுச்சாமான், கப்பல் வண்டி முதலான மனிதர் செய்யக்கூடிய பல பொருள் இவற்றுக்கும் உதவியாகின்றன. பழ மரங்கள் நிரம்பப் பழுத்துச் சுமைதாங்க மாட்டாமல் தலை தாழும்போது அப்பழங்களைப் பெற்றுக் கொள்ள நம்மை வருந்தி அழைப்பனபோலிருக்கின்றன. பெரிய விருக்ஷங்களில் உள்ள புது மையத்தனையும் ஒரு சிறு செடிக்குள்ளேயே அடங்கியிருக்கின்றது. இப் பூமி தன்னிலையில் தான் சிறிதும் வேற்றுமைப்படாமலிருந்தும் தன் விளைவுகளில் இவ்விதமான வேறுபாடுகளை உண்டாக்குகின்றது.

நீரைக்குறித்து யோசிப்போம். அது திரவமாய் ஊடே பார்க்கத் தக்க தெளிவான் ஒருவகைப் பொருள்; அது நமது கைக்குப் பிடிபடத் தக்க பொருளன்று; அதற்கு எவ்விதமான உருவமும் கிடையாது; அது எதில் புகுகின்றதோ அதன் வடிவமாகின்றது. நீரை நன்றாகக் காய்ச்சி ஞல் அது நமது கண்ணுக்குத் தெரியாத பொருளாக மாறிப்போம். நீரெல் லாம் அப்படியே ஒருமிக்க மாறிப்போமாயின் உடனே இப்பூமி முழுதும் உலர்ந்து கல்லாய்ப்போம். இந்தத் திரவப்பொருளை நமக்குத் தந்தருளி னவரெவரோ அவரே அதை வெகு கருத்தாய் இப்பூமிமுழுதும் பரந் திருக்கப் படைத்திருக்கிருர். நீர் மலையினின்றும் பெருகி வந்து கண வாய்களின் வழியாய்ப் பெரிய நதிகளிற் புகுந்து சுற்றிச் சுழன்று நாடு முழுதும் நீர்பாய்ச்சிக் கொண்டு ஓடி நானா தேசத்து வர்த்தகங்களுக்கும் மத்திய கட்டமான சமுத்திரத்திற்குச் செழிப்பு உண்டாகும்படி அதிலே போய் வீழ்கின்றன. நாடுகளுக்கு நிலையான பிரிவுபோலிருக்கும் இந்தச் சமுத்திரம் எல்லாத் தேசத்தார்க்கும் பொதுவான மத்தியமார்க்கமாம்; பழைய உலகத்தார் புது உலகத்தைக் கண்டு பிடித்ததும், அந்தப் புதுகண்டத் துப் பொருள்கள் பழைய கண்டத்துக்கு வரும்படியானதும், வழிதுறை இல் லாத அந்த மகா சமுத்திரத்தின் வழியாகவேயல்லவா?

மனிததேகத்தில் ரத்தம் ஓடிப் பரவுவதுபோல நீர் பூமிக்குள் எங்கும் பரவியிருக்கின்றது. மேலும் கடல்நீர் என்றும் ஒரே அளவாய்உப்பவும் வடியவும் காண்கிருேம். அப்படி உப்பி வடிவதற்கு யாது காரணமோ? அந்த நீர் நித்தமும் அளவு தப்பாமல் உப்புவதும் வடிவதும் மட்டும் நமக்குத் தெரிகிறதேயன்றி அதைப்பற்றி மற்றென்றும் தெரியவில்லை. அதை அப்படி ஒரே அளவாய் உப்பிவடியக் கட்டளையிட்டது யார்? கடல் நீர் இப்போது அசையும் அளவிற்குக் கொஞ்சம் அதிகரித்தாலும் குறைந்தாலும் இந்தப் பூமி முழுதும் அப்பொழுதே தாறுமாறுய்ப் போம். அபாரமான சமுத்திரங்களை இவ்வண்ணம் ஒரே அளவில் அடக்கி ஆண்டுவருபவர் யார்? எல்லாவற்றையும் அததன் அளவிற்கு ஏறுமலும் தாழாமலும் ஒரே அளவில் அமைத்துவருபவர் யார்? அளவில் நீடூழிகாலமாய் இக்கடல் கரை புரளாது ஒரே நிலையில் நிற்கும்படி அதை நியமித்திருப்பவர் யார்? ஆகாயத்தை அண்ணுந்து பார்த்தால் பறவைகள் பறப்பதுபோல் எப்போதும் மேகங்கள் ஓடித்திரிகின்றன. வாயு மண்டலத்தைக் குளிரச் செய்யவும், பூமியிலுள்ளோருடைய தாகத்தைத் தணிக்கவும் நீர்த்துளிகள் அபரிமித மாய் நமது தலைக்கு மேலெங்கும் பரந்திருக்கின்றன. அவையாவும் ஒரே காலத்தில் விழத் தலைப்படுமாயின் அவ்விடமெங்கும்ஜலப்பிரளயமாகி அங்குள்ள யாவையும் அழிந்துவிடும். அப்படியில்லாமல் அவற்றைத் தக்க விடத்தில் தக்கவளவாகப் பெய்யும்படி நியமித்திருப்பவர் யார்?

3 சணல்.

ஒருகால் சணற் செடிகள் செம்மையாய்ச் செழிப்பாக வளர்ந்து வெகு அழகாய் நீலநிறமான மெல்லிய மலர்களோடுகூடி மனோகரமாயிருந்தன. அவை ஆநந்தமாய் உயர்ந்து ஓங்கும்படி வெயில் நன்றாகக் காய்ந்தது ; மேலும் அவை செம்மையாய்ச் செழித்தோங்கும்படி மாதம் மும்மாரி பெய்து நீர் பாய்ச்சியது. இதனால் அச்செடிகளுக்கு தாய் செம்மையாய் அழுக்குத் தேய்த்துக் குளிப்பாட்டி முத்தமிட்டால் மக்களுக்கு எவ்வளவு களிப்பு உண்டாகுமோ அவ்வளவு களிப்பு உண்டாயிற்று. அம்மக்கள் எவ்வளவு அழகாய்ப் பிரகாசிப்பார்களோ அவ்வளவு அழகாய் அச்செடிகளும் பிரகாசித்தன.

அப்பொழுது அந்தச் சணல் தன் நிலையைத் தானே கண்டு மகிழ்ந்து, “நான் நன்றாயிருக்கிறேனென்று சொல்லி எல்லோரும் என்னைக் கொண்டாடுகிறார்கள். நான் அற்புதமாய் எவ்வளவு உயரம் உயர்ந்திருக்கிறேன் ! என்னைக் கொண்டு வெகு நேர்த்தியான சணற்புடவை நெய்வார்கள். ஆ, நான் எவ்வளவு அதிர்ஷ்டசாலி ! பாக்கியவான்களுக்குள் நானே மிகுந்த பாக்கியம் பெற்றவன். எனது தற்கால நிலையே வெகு சிறப்பானது. இன்னும் பல வேலைகளுக்கும் நான் உபயோகப்படுகிறேன். எவ்வளவு சந்தோஷமாய்ச் சூரியன் காய்கின்றது ; எவ்வளவு திருப்தியாக மழை பெய்தது ! நான் அளவில்லாத ஆநந்தம் உடையவனாகிறேன். என் அளவு பாக்கியம்பெற்றவர் ஒருவருமில்லை” என்றிப்படி மனோராச்சியம் செய்து கொண்டிருந்தது.

அண்டையில் இருந்த வேலி அதைக் கேட்டு, “நீ இப்பொழுதுதான் உலகில் உற்பத்தியானாய் ; உலகவியற்கை இவ்விதமென்பது இன்னும் உனக்குத் தெரியவில்லை. நாங்கள் நெடுநாளாக வாழ்கிறோம். எங்களுக்கு இதன் இயற்கை நன்றாய்த்தெரியும். உங்களுக்குக் காலமாகிவிட்டது. சீக்கிரமே அழிந்துபோவீர்கள் ; அதிகமாகத் துள்ளவேண்டாம்” என்றது.

அதற்குச் சணல், “எங்கள் காலம் இன்னும் ஆகவில்லை. நாளை நன்றாக வெயிலாவது காயும் ; அல்லது எனக்குக் குளிர்ச்சியுண்டாக மழையாவது பெய்யும். நான் நாளுக்குநாள் விருத்தியாகி வருகிறேன் ; இப்பொழுது நிறைபூவாக நான் எவ்வளவு அழகாய் இருக்கிறேன். யாவருள்ளும் யானே அதிர்ஷ்டசாலி” என்றது.

அப்படியிருக்க ஒரு நாள் சிலர் அந்தச் சணற் புலத்திற்கு வந்து அந்தச் செடிகளை அடியோடு அறுத்துக்கொண்டு போய்விட்டார்கள். இந்தச் செய்கை அதற்கு மிகவும் வேதனை செய்வதல்லவா ? பிறகு அதைத் தண்ணீரில் மூழ்க அடைத்து அடுப்பின் மேல் வைத்துக் காய்ச்சினார்கள். இதைவிடக் கொடுமைவேறு வேண்டுமோ ?

அதுகண்டு சணல், “ஒருவன் எப்பொழுதும் நன்மையையே எதிர்பார்த்திருப்பதுகூடாது. கிருஷ்ணபக்ஷம் சுக்லபக்ஷமென்பன எதற்கும் உண்டல்லாவா ? நன்மை தீமை இரண்டிலும் பட்டுத் தேர்ந்தவனே சிறந்தவனாவான்” என்றெண்ணியிருந்தது.

ஆயினும் அதற்குப் பின்வந்தது அதினும் மிகக் கெடுதியாக முடிந்தது. தண்ணீரில் நன்றாய் ஊறப்போட்டு அழுகச் செய்து நாருரித்துச் சிக்குவாரினார்கள். இவற்றிற்கு இடை இடையே தெரியாமல் பல வேலைகள் நடந்தன. பின்பு நூல் யந்திரத்தில் மாட்டி நூற்கப்புகுந்தனர். அப்பொழுது அது சக்கரத்தில் சுற்றின சுற்று இவ்விதமென்று அதற்கே நிதானிக்கக் கூடாததாயிருந்தது.

இவ்விதத் துன்பத்தில் அகப்பட்டுத் தவிக்கையிலும் அந்தச் சணல், “நான் மிகவும் அதிர்ஷ்டசாலியே. ஒருவனுக்கு ஒரு சந்தோஷம் நேர்ந்தால் அவ்வளவோடு அவன் திருப்தி அடைந்திருப்பதே நலம். சந்துஷ்டியா

யிருப்பதற்குச் சமானம் ஒன்றுமில்லை" என்றது. பின்பு தறியிலிருக்கை யிலும் இவ்விதமே சொல்லிவந்தது. இப்பொழுது அது ஒரு பெரிய சணற் புடவையாயிற்று. வேர் முதல் நுனிவரையுமிருந்த சணல் அத்தனையும் அந்தப் புடவைக்கு உபயோகமாகிவிட்டது.

தனக்கு அந்நிலை வந்ததைக்கண்டு அந்தச் சணல், "ஆ, இதென்ன வெகு அற்புதமாயிருக்கின்றது! நமக்கு இவ்விதமான சிறந்தபதம் வருமென்று இதுவரையில் நாம் கனவிலும் கருதவில்லையே; நம்முடைய பாக்கியமல்லவா பாக்கியம்!

"வருந்தி யழைத்தாலும் வாராத வாரா
பொருந்துவன போமினென்றால் போகா"

எனப் பெரியோர் சொல்வது பொய்யாகுமா? வேலி ஒன்றும் தெரியாமல் ஏதோ பிதற்றிற்று. ஏனெனில் நமது காலம் இன்னும் கழியவில்லை. இப்பொழுதுதான் துவக்கமாகின்றது. நாம் எவ்வளவு துன்பம் அனுபவித்தாலும் கடைசியில் இப்படி ஒரு உயர்ந்த நிலைக்கு வந்தோமல்லவா? நாமே பாக்கியவான்களுக்குள் தலையான பாக்கியம் பெற்றோம். இப்பொழுது எவ்வளவு உறுதி, எவ்வளவு அழகு, எவ்வளவு வெளுப்பு, எவ்வளவு நீளம்! வெறும் செடியா யிருப்பதைப் பார்க்க இது மிக்க நலமல்லவா? செடியில் நிரம்ப அழகிய மலர்கள் அலங்காரமாயிருப்பினும் அதை எவரும் அத்தனையாகக் கவனித்ததில்லை. எப்பொழுதோ ஒருகால் மழை பெய்யும்பொழுதன்றி மற்ற நாளில் அதற்குத் தண்ணீர் கிடைப்பதில்லை. இப்பொழுதோ பலர் வேண்டுமென்று தேடி வந்து காத்திருந்து அதிக ஆவலோடு நம்மைக் கொள்கிறார்கள். நாள்தோறும் நம்மை வெளுக்கத் தோய்த்துப் பலர் தரிக்கிறார்கள். மிகவும் உயர்ந்ததென்று பலர் நம்மைப் புகழ்ந்து பேசுகிறார்கள்" என்றது.

இப்படியிருக்க ஒருவன் அந்தச் சணற்புடவையை வாங்கி வீட்டுக்குக் கொண்டுபோய் உடுப்புத் தைக்கலானான். அதை எத்தனை வகையாகக் கிழித்துக் கத்தரித்து ஊசிமாட்டித் தைக்கப் புகுந்தார்கள்! இது அதற்கு ஒரு இம்சையேயன்றி உபசரணையா? அல்ல; அந்தப் பெரிய புடவை பத்து அங்கிகளாகத் தைக்கப்பட்டது. அந்த நிலையைப் பார்த்துச் சணல், "ஆ! இப்பொழுது பாருங்கள்! நாம் அனைவரும் கண்டு வியக்கத்தக்கவராயினோம். இப்பொழுது நாம் உலகத்துக்கு மிக்க உபயோகமுள்ளவராயினோம். இதுவே இவ்வுலகில் நாம் அனுபவிக்கத்தக்க உண்மையான ஆநந்தம். இப்பொழுது நாம் ஒன்றைப் பத்தாகப் பிரித்தும் எல்லாம் ஏகரீதியாகவே இருக்கிறோம். இதென்ன பாரும் பாக்கியம்!" என்று எண்ணி ஆநந்தமடைந்தது.

இவ்வண்ணமே சில வருஷங்கள் கழிந்தன. நாளாவட்டத்தில் அந்தச்சணல் அங்கிகளெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாய்க் கிழிந்து கடைசியில் உதவியற்றுப்போயின.

அப்பொழுது அவற்றுள் ஒவ்வொன்றும், "இவ்வுலகத்தில் உண்டாகின்ற பொருள் அனைத்தும் அழிய வேண்டுவதுதான்; கூடாத காரியத்தை எவரும் எதிர் பார்க்கலாகாது" என்றெண்ணித் திருப்தியடைந்தது.

அவைகளெல்லாம் துண்டுதுண்டாகக் கிழிக்கப்பட்டன. பின்பு அவற்றைத் தண்ணீரில் அழுகப்போட்டுச் சமைப்பதுமுதலிய பலவிதமான செய்கைகள் செய்துவரும்போது, அவை தங்கள் காலம் அவ்வளவோடு ஒழிந்ததென்றெண்ணின. ஆயினும் அவை பின்பு வெகு நேர்த்தியான வெள்ளைக்கடிதமாயின.

அதுகண்டு அந்தக் கடிதம், ஆ இதென்ன ஆச்சரியம்! இதுவும் ஒரு விநோதமே. நான் ஆதியில் இருந்ததைப்பார்க்க இப்பொழுது மிகவும் மேன்மையான பதவிக்கு வந்துவிட்டேன், எழுதுவதற்கு ஏற்ற கருவியா

னேன் ; இப்பொழுது எவ்வளவு சிறந்த விஷயங்களையும் என்மேல் எழுதுவார்கள். இதுவும் ஓர் அதிசயமான அதிர்ஷ்டமே'' என்று எண்ணி அகங்களித்தது.

ஆம், அது அப்படி எண்ணியது யதார்த்தமே. கடிதத்தில் விநோத கதைகளும், சிறந்த காவியங்களும் எழுதத் துவக்கினார்கள் ; இப்படிப்பட்ட பதம் பெறுவது எவ்வளவு பாக்கியம் ! அந்தக் கடிதத்தில் எழுதியவற்றைப்படித்து மன்னுயிர்கள் முன்னிருந்ததைப்பார்க்க மிக்க யோக்கியரும் அறிவு மிகுந்தவருமாயினர் என்றால் அதைவிடச் சிறப்பு வேறென்ன ! மேலும் கடிதத்தில் எழுதியபோது சொற்களுக்கு மிகவும் மேன்மை உண்டாகின்றது.

"இந்த நிலை நான் புலத்தில் சிறுப்யிராயிருக்கும்போது எள்ளளவும் அபேக்ஷைகொள்ளத் துணியத்தக்கதன்று. மானிடர்களுக்கு அறிவும் ஆநந்தமும் அபிவிருத்தி செய்யத்தக்கவனாகவேண்டுமென்று அந்த நிலையில் எப்படி ஆசைகொள்ளக்கூடும் ? இப்பொழுதும் இந்நிலை உண்மையென நம்பப் பயமாயிருக்கின்றது. ஆயினும் வாஸ்தவத்தில் இது எனக்குக் கிடைத்திருக்கின்றது. சுவாமியறியச் சொல்கின்றேன் ; இதற்காக நான் யாதொரு முயற்சியும் செய்தவனன்று. எனக்குக் கிடைத்த இயற்கையான சாமர்த்தியத்தாலேயே நான் இந்நிலைக்கு வந்தேன். ஆயினும் முக்காலமும் உணர்ந்த முதற்புருஷரான கடவுளே இவ்வாறென்னைச் சந்தோஷமும் பெருமையுமாய் மேன்மேலும் உயர்ந்த பதவிக்கு மாற்றுகிறார். ஒவ்வொரு தருணமும் என் காலம் கழிந்ததென்று நான் நினைத்தபோதெல்லாம் முன்னிருந்ததைவிட மேலான நன்னிலை பெற்றுவருகிறேன். இப்பொழுது யாவரும் படித்துத் தெரிந்துகொள்ளும்படி இவ்வுலகமுழுதும் யாத்திரை செய்துவர என்னை அனுப்புவார்கள். இது அவசியம் தப்பாமல் நடக்கப்போகிற காரியம். முன் என் உடம்பில் மலர்கள் எவ்வளவு அதிகமாகப்பூத்து அழகு செய்திருந்தனவோ, அவ்வளவு அதிகமாய் இப்பொழுது இந்தப் பெருமை உண்டாக எதிர்பார்க்கிறேன் ; அதிர்ஷ்டசாலிகளுள் தலைமையான அதிர்ஷ்டசாலி நானே என்பதற்குச் சந்தேகமுண்டோ ?" என்றுசொல்லிச் சந்தோஷித்தது.

ஆயினும் அந்தக் கடிதங்களை அதுநினைத்தபடியே வெளிதேசங்களுக்கு அனுப்புவதைவிட்டு அச்சிடும்படி அச்சுக்கூடத்திற்கு அனுப்பிவிட்டனர். அவற்றில் எழுதியிருந்தவற்றையெல்லாம் பலபுத்தகங்களாகப் பதிப்பிக்கும்படி அச்செழுத்துக்களாகக் கூட்டினார்கள். கையால் எழுதிய ஒரேபுத்தகத்தைப் பலவிடங்களுக்கும் அனுப்பிப் பலபேர் படிக்கும்படி செய்வதைவிட, பல்லாயிரம் புத்தகங்கள் அச்சிட்டுப் பலவிடங்களுக்கும் அனுப்பினால், அதனால் எத்தனைபேர் பெரும்பயனும் பேராநந்தமும் அடைவார்கள் ? மேலும் அந்த ஒரே கையெழுத்துப் பிரதிமுழுதும் சுற்றிவருவதற்குள் பலபேர் கைபட்டுக் கிழிந்துபோகுமல்லவா ?

அப்பொழுது அந்தக் கடிதம், "ஆ, இது மற்றவைகளைவிட மிகவும் உயர்ந்த ஏற்பாடுதான். இவ்விதமான ஏற்பாடு இதுவரை என் புத்தியில் தோன்றவில்லை. இப்பொழுது பதிக்கின்ற புதுப் புத்தகங்களுக்கெல்லாம் யானே பெரியபாட்டனாகிறேன். தள்ளாத கிழவரான பாட்டனாரை வீட்டிலேயேவைத்துப் பூஜித்து வருவார்களல்லவா ? இதுவும் ஒரு நன்மைதான். உலகமுழுவதும் ஓடித்திரிவது சிறிதும் என்னால் முடியாதகாரியம். முதலில் இப்புத்தகம் எழுதினவன் என்னையே முக்கியமாகப் பார்த்தான். அவன் கருத்திலிருந்த ஒவ்வொருசொல்லும் அவன் எழுதுகோலின் மூலமாய் என்னிடத்திலேயே அமைந்தது. எல்லாவற்றிலும் யானே மிக்க பாக்கியம் பெற்றவன்'' என்று எண்ணி உவப்படைந்தது.

அச்செழுத்து அடுக்கியானபின் கையெழுத்துக் கடிதங்களை ஒன்றாகச் சேர்த்துக்கட்டி அங்கே ஒரு மூலையில்கிடந்த பழைய பெட்டியில் கந்தைக் கடிதங்களோடுகூடப் போட்டுவிட்டார்கள்.

அதுகண்டு அந்தக் கடிதம், “அவரவர் தம்மால் கூடியகாரியங்களைச் செய்துவிட்டுக் கடைசியில் நிம்மதியாக உட்கார்ந்திருப்பதைவிட ஆநந்தம் வேறென்ன? மேலும் அவனவனுடைய அபிப்பிராயத்தைக் கடைசியில் ஆலோசிப்பதும், அதுவரையில் தாம் செய்தகாரியங்களைச் சிந்தித்துப்பார்ப்பதும் சிறப்பானதே. இதுவரை எனக்கு நேர்ந்த மேன்மைகள் யாவும் நன்ருய்த் தெரியும். அதன்படியே இனி வரப்போவதையும் யோசிப்போம். இனி நான் என்ன பதம்பெறுவேன்? ஆதிமுதல் நான் ஒன்றின்மேலொன்ருக மேலானபதமே பெற்றுவந்ததனுல், இனிமேலும் இதைவிடப் பெருமைபெற்றபதமே பெறுவேனென்பது நிச்சயம்” என்றிப்படி எண்ணமிட்டுக்கொண்டிருந்தது.

இப்படியிருக்க ஒருநாள் அந்தக் கடிதங்களையெல்லாம் வெளியே எடுத்துக் கும்பலாகக் கொட்டி நெருப்புவைத்து எரித்துவிட்டார்கள். அத்தனை கடிதங்களும் எரியும்போது அதிக உயரமாகச் சுவாலைவிட்டு எரியுமாதலின் அதன் அற்புதத்தைப் பார்க்கச் சிறுவர்கள் வந்து அதைச்சுற்றிச் சூழ்ந்து கொண்டனர்.

அங்கே கிடந்த கடிதம் அத்தனையும் கொண்டுவந்து அந்தத் தீயிலே கொட்டினுர்கள். அக்கினி வெகு நன்ருகச் சுவாலிக்கத் துவக்கிற்று. அது கண்டு கடிதம், “ஆ, ஆ”! என்று தவித்தது. எரிந்து போவதென்ருல் எவர்க்குத்தான் அபிமதமாகும்? ஆயினும் அத்தனை கடிதங்களும் பற்றிக்கொண்டபோது, சுவாலைகள் சணற்செடிகள் வளர்ந்திருந்த உயரத்திலும் அதிக உயரமாக எழுந்தன; அந்தச் சணல் அதுவரையில் ஒருபோதும் பெற்றிராத பளபளப்போடு அந்தச் சுவாலைகள் மின்னிப் பிரகாசித்தன. ஒரே நிமிஷத்தில் அத்தனை கடிதங்களும் பொன்நிறமாக மாற அத்தனை அக்ஷரங்களும் அபிப்பிராயங்களும் அழியலாயின. அத்தருணத்தில்அந்தச் சுவாலைகளோடு எழுந்தக் கடிதப்பொடிகள், “நாம் இப்படியே எழுந்து சூரியமண்டலம்போய்ச் சேர்வோமெனக் காண்கிறதே!” என்றெண்ணி அகங்களித்தன. அந்த அக்கினி எரிகிற ஓசையில் பதினுயிரம் குரல்கூடி அந்தப் பேச்சைப்பேசினதுபோலிருந்தது. அப்படியே அவ்வீட்டு மேல்மாடம்வரையில் அந்தச் சுவாலைகள் உயர்ந்து எரிந்தன. முன் சணற்செடியில் பூத்திருந்த பூக்களைப்போலப் பல்லாயிரம் தணற்பொறிகள் அந்தச் சுவாலையோடு உயர எழுந்து, மறுபடியும் ஆடிக்கொண்டு கீழே விழுந்தன. அக்கினிச்சுவாலைகள் தணிந்தபிறகு கரியான கடிதப்பொடியொழிய மற்றென்றும் மிகுந்திருக்கவில்லை. அதைச் சூழ்ந்திருந்த சிறுவர்களெல்லாம், “ஓ, தீ அணைந்துபோயிற்று! அணைந்துபோயிற்று!” என்று கூவிக் கைகொட்டி நகைத்துக்கொண்டு ஓடிப்போயினர். ஆயினும் அதிநுட்பமான சிறு சிறு கடிதக்கரிப்பொடிகள், நமது காலம் ஒருபோதும் கழியாது; நமக்கு முடிவே இல்லை. பாக்கியம் பெற்றவர்களுக்குள் நாமே மிகுந்த பாக்கியமுள்ளவர்கள் என்று சந்தோஷித்தன.

4. காலமேகருந்தனம்.

முற்காலத்தில் ஒரு பாட்டனும் பேரனும் சிறிதுதூரமான வெவ்வேறிடங்களில் வசித்துக்கொண்டிருந்தார்கள். ஆயினும் பேரன் சனிக்கிழமைதோறும் பாட்டனைவந்து பார்த்துப்போவது தப்புவதில்லை. அப்படியிருக்க ஒரு தடவை பேரன்வந்தபோது பாட்டன் அவனைப்பார்த்து, ‘நல்லது குழந்தாய், இப்போது நீ எனக்கு அதிசயமாய் ஏதாவது கொணர்ந்தாயோ?’ என்று கேட்க, பேரன் தான் வழக்கமாய் உட்காருமிடத்தில் உட்கார்ந்து, ‘இதோ இந்த சமாசார பத்திரிகை கொண்டுவந்தேன்; இதிலொரு கதையிருக்கிறது, அது வாஸ்தவமாய் நடந்தகதையே; ஆயினும் கட்டுக்கதைபோலக்கேட்க வெகு விநோதமாயிருக்கிறது’ என்ருன்.

அதற்குப் பாட்டன், ‘ஆம் குழந்தாய், மெய்க்கதைகளைப்பார்க்கலும் பொய் எப்போதும் அதிசயமாகத்தானிருக்கும். அதென்ன கதைசொல்,—பத்திரிகையிலிருப்பதைப் படிக்கவேண்டாம்; உன் வாய்மொழியாகவே சொல் கேட்போமென, பேரன் சொல்லுகிருன்.—

" ஒருநாள் காலையில் இரண்டொரு எளியமனிதர்கள், கரைதட்டிக் கப்பலுடைந்து அலைகளால் கரை சேர்க்கப்பட்ட கட்டைக் கரி ஏதாவது இறைந்திருந்தால் பொறுக்கிவரலாமென்று கடற்கரைக்குப் போனார்கள். எவனோ வயிறெரிய நடுக்கடலில் பறிகொடுத்த கப்பல்துண்டுகளைப் பொறுக்கிக்கொண்டுபோய் நாம் போகம் அடையலாமா! அன்று இந்த மனிதர்களுக்கு அங்கே அகப்பட்டது அவர்கள் எண்ணிப்போனபடி கட்டையும் கரியு மாத்திரமேயன்று; அதைவிட எத்தனையோ பங்கு சிறந்தபொருளும் அகப்பட்டது. அது இன்னபொருளென்று பின்னே சொல்லுகிறேன். அவர்கள் அவ்வளவோடும் திருப்தியடைந்து திரும்பிவிடாமல் அக்கடற்கரையிலேயேயிருந்து வெகுநாழிகைவரையில் ஓயாமல் தேடிக்கொண்டிருந்தார்கள். ஒருவர்பின் ஒருவராய் இன்னும் அநேகர் அவ்விடத்துக்கு வந்தார்கள். அவர்களும் இவ்வெளியவர்களைக் கவனித்திருப்பார்களெனத் தோன்றுகிறது. யார்வந்தாலும் வந்தவர்களெல்லாம் அங்கேயே இருந்து நிலத்தைவெட்டி அடிக்கடி என்னென்னவோ தேடியெடுத்துக்கொண்டிருந்தார்கள். எங்கே வெட்டினாலும் யதேஷ்டமாய்ப் பொருள் அகப்படவே அவர்களுக்கு மேன்மேலும் ஆவல் அதிகமாயிற்று. இப்படிக் கொஞ்சம் கொஞ்சமாய் ஜனங்கள்வந்து நெருங்கக் கடைசியில் கடற்கரையெல்லாம் பெருங்கூட்டமாயிற்று. பொழுது போய் இருண்டபின்பும் அவர்கள் அங்கேயே இருந்து தீவட்டிகள் கொளுத்திக்கொண்டு இரவிலும் தேடப்புகுந்தார்கள். அவர்கள் அங்கே கண்டெடுத்தது உங்களுக்கு என்னவெனத் தோன்றுகிறது? சிறந்த வெள்ளி நாணயங்கள்."

' அதெப்படிக் குழந்தாய்? மணல்மேட்டு மத்தியில் வெள்ளி நாணயம் எப்படி வந்தது? உலோபியொருவனும் தன் ஆஸ்தியை அப்படிப் பட்டவிடத்தில் கொண்டுபோய்ப் புதைத்துவைக்கமாட்டானே!"

" ஆம், அதுவன்று—வெகுநாளைக்கு முன்னே கரிக்கப்பலொன்று அங்கே கரைதட்டி உடைந்துபோனதாகச் சொல்லுகிறார்கள். அக்கப்பல் கரிவர்த்தகர் கைவசமாவதற்குமுன்னே, ஆப்பிரிகா தேசத்துப் பேதைகளை அடிமைகளாகத் திருடி இழுத்துக்கொண்டுவருவதற்கு உபயோகமாகிவந்தது. இந்த நாணயங்கள் அந்தக் கப்பலில் இருந்திருக்கலாம். இத்தனைநாள் வரையில் அக்கப்பலின் கட்டைகளோடுகூடவே அவை கடலில் மூழ்கிக்கிடந்தன. அப்படியிருக்க இப்போது ஏதோ ஒரு அலையினால் மேலெழுப்பப் பட்டுக் கரைவந்து சேர்ந்தன.'

" அந்தமட்டும் அவ்வடிமைவர்த்தகக்கப்பல் தன் பொல்லாத பாக்கியத்தை அனுபவியாமற் போய்விட்டதல்லவா? இப்படிப்பட்ட பாவத்திற்கிடமான வர்த்தகம் இப்போது உலகில் எங்குமில்லாமல் ஒழிந்துபோனதற்காகக் கடவுளை கையெடுத்தேத்தக் கடவோம்."

" அதிருக்கட்டும், பொருள் அகப்படுவது எவ்வளவு பாக்கியமையா?"

" குழந்தாய், நாம் உழைத்துச் சம்பாதிப்பதே சிறந்த பாக்கியம்; ஒருவர் தேடிவைத்ததைக் கண்டெடுத்துக்கொள்வது நல்லதன்று. கண்டெடுப்பதனால் ஒருகால் தமக்கே கெடுதிவிளைந்தாலும் விளையும். அது பார்வைக்குச் சுலபமாய்ச் சீக்கிரத்தில்முடிகிற காரியமாகத் தோன்றினும், பின்பு வழக்கப்படி அன்றாடம் சிற்சிலவாய்ப்பொருள் வந்துகொண்டிருக்கப் பெறாமல் விசனத்துக்கிடமாகும்."

" ஆயினும் பொருள்கண்டெடுப்பது பெருமையே—உங்கள் அண்டை வீட்டுக் காரன் தன் தகப்பன் சிலவருஷங்களுக்குமுன்னே ஏலத்தில்வாங்கின புத்தகம் ஒன்றில் ஐம்பதுரூபாய் நோட்டு இரண்டு வைத்திருக்கக் கண்டெடுத்தான். எப்போதும் எனக்கு அவனை விசாரிக்க வெகு ஆவலாயிருக்கிறது."

" ஆம், நீ சொல்வது சரிதான்; ஆயினும் அதனால் ஏழைக்கு அதிக நன்மை உண்டாவதில்லை. அண்டைவீட்டுக்காரன் அந்த ரூபாயைக்கொடுத்து அப்போதே சிறந்த ரத்தின கம்பளமொன்று வாங்கிவிட்டான். அதனோடு அந்தப்பொருள் செலவழிந்துபோயிற்று. அந்த ரத்தினகம்பளமும்

அவன் வீட்டிலிருந்த விகாரமான மேஜை நாற்காலிமுதலிய சாமான்களோடு சிறிதும் ஒத்திராமல், அவன் வாழ்நாள்முழுதும் மிகுந்த மனவருத்தமுற்றிருப்பதற்கு இடமாயிற்று. 'தேடாதழிக்கிற் பாடாமுடியும் அல்லவா ? நாம் புதிதாய்ப் பொருள்தேட விரும்புவதைப்பார்க்கிலும் இருக்கிற ஆஸ்தியை வீண்செலவு செய்யாமல் பத்திரமாய் வைத்திருக்க முயல்வதே மிகவும் நல்லது.''

'' ஆஸ்தியை வீணுக்குவதா ? வீண் செலவு செய்யத்தான் எனக்கு என்ன ஆஸ்தியிருக்கிறது ? நாலைந்து ரூபாய்க்குமேல் ஒரு தடவையும் என் கைக்குப் பொருள் கிட்டினதேயில்லையே. அதையும் இன்னின்னவிதமாய்ச் செலவு செய்யவேண்டுமென்று தாய் எனக்குக் கட்டளையிடுவாள். ஏதாவது எனக்கு ஒரு புத்தகம் வேண்டியிருந்தால், அதைமாத்திரம் அவள் என் இஷ்டப்படிப் பார்த்து வாங்கிக்கொள்ளச் சொல்வதுண்டு.''

'' குழந்தாய், உனக்கும் ஆஸ்தியிருக்கிறது ; அதை இரண்டொரு தருணங்களில் நீ வீண்செலவு செய்யவும் நான் கண்டிருக்கிறேன்.''

'' பாட்டனுரே, நீங்கள் சொல்வது இன்னதென்று எனக்குத் தெரியவில்லையே ; ஆயினும் நீங்கள் சொல்லவேண்டாம் ; நானே கூடியவரையில் முயன்று யோசித்துப்பார்க்கிறேன். அந்த ஆஸ்தி உங்களுக்குமிருக்கிறதா ?'

'' ஆலோசிக்குமளவில் உனக்கு இருக்குமளவு எனக்கில்லை, குழந்தாய்.''

'' ஆயின் எனக்கு அதிகமாயிருக்கிறதோ, ஐயா ?''

'' அது எனக்குத் தெரியாது, பிள்ளாய் ; கடவுள் ஒருவர்க்கே தெரியும். அவர்தாம் அதை உனக்குச் சிறிதுசிறிதாகக் கொடுத்துவருகிறுர்.''

'' கல்விப்பொருளையாவது சவுக்கியப்பொருளையாவது நீங்கள் கருதியிருப்பதாக எனக்குத் தோன்றவில்லை.''

'' இவற்றை நான் கருதவேயில்லை ; நான் சொல்வது இவையில்லாமலே உனக்குக் கிடைக்கத்தக்கது. நீ உயிரோடிருக்குமளவும் இந்தப் பொருள் உனக்கு அழியாது. அதை ஒருவரும் உன்னிடத்தினின்றும் கொள்ளைகொள்ளவுமாட்டார்கள்.''

'' வேண்டுமானுல் நான் அதை யாருக்காவது கொடுத்துவிடலாமா ?''

'' நீ அதை எறிந்துவிடலாம் ; ஒருவரும் அதைக் கண்டெடுத்துக் கொள்ளமாட்டார்கள். எறிந்துவிட்டால் நீகூட அதை மறுபடியும் காணமாட்டாய். அந்தப் பொருள் போனுல்போனதுதான். பின்பு அது அழுதாலும் வராது ; அனுதாபப் பட்டாலும் கிடைக்காது.''

'' அதென்னபொருள் ? நீங்கள் சொல்வதைக்கேட்டால் வெகு சிறந்த பொருளாயிருக்குமெனத் தோன்றுகிறது ; அது வெகு விலைபெற்றதாயிருக்கவேண்டும்.''

'' ஆம், இவ்வுலகத்திலுள்ள எல்லாப் பிராணிகளுக்கும் அதுவே முதற்பொருள். அதைப் பத்திரமாய்க் காப்பாற்றி நன்றுய் விருத்திபண்ணிஞல் அதுவே நமக்குச் செல்வமும் சவுக்கியமுமாகும். வீணுய் எறிந்துவிட்டால் துன்பமும் துக்கமும் வந்துசேரும். மேலும் அது அழிவிலாவுலகம் அடைவதற்கு ஆதிகாரணமாயுமிருக்கின்றது.''

'' ஐயா, நீங்கள் கருதிய கருந்தனம் இன்னதென்று இப்போது எனக்குத் தெளிவாய்த் தெரிந்தது ; காலமல்லவா ?'' என்று சொல்லி அச்சிறுவன் சந்தோஷித்தான்.

5. உப்பும் உப்புக்கனியும்.

ராமசாமியென்ற மாணுக்கனைப்பார்த்து உபாத்தியாயர் ஒரு நாள், "பிள்ளாய், உனக்கு உப்பின் உற்பத்திவரலாறு தெரியுமா" என, இம்மாணுக்கன், "அதெப்படி, ஐயா, எனக்குத் தெரியாதே" என்றதற்கு, அவர் அதை அடியில்வருமாறு போதித்தார்.

உபாத்தியாயர் : "உப்புகள் விசேஷமாய்க் கனிகளிலிருந்து வெட்டியெடுக்கப்படுகின்றன."

மாணுக்கன் : "கடல்நீரை இறைத்து உப்புப் பயிர்செய்வதாக எனக்குக் கேள்வி, அப்படியல்லவோ ?"

உபா. உப்புப் பயிர்செய்வதுமுண்டு ; ஆயின் கனிகளிலிருந்து வெட்டியெடுப்பதுதான் மிகவும் சுத்தமான உப்பு. பூமிக்குள் அகப்படுகிற பல வகைத் தாதுக்களில் உப்பும் ஒன்று. அது இப்பூமியில் பலவிடங்களிலும் அகப்படுகின்றது.

மா. அதிருக்கட்டும் ; அதைப் பிறகு விசாரிப்போம். உப்புப் பயிர்செய்வது எப்படி ஐயா ?

உபா. கடல்நீரைக்கொண்டு உப்புப் பயிர்செய்வதற்கு வேண்டியவகை இரண்டுண்டு.

மா. அதென்ன வகைகள் ? அது ஒரேவகையாயிராமல் இரண்டானதற்கு ஏது என்ன ?

உபா. அந்தந்தத் தேசங்களின் சீதோஷ்ணபேதத்தால் அது இரண்டு விதமாயிற்று. உஷ்ணதேசங்களில் சூரியனுடைய வெப்பத்தால் கடல்நீரைச் சுண்டச்செய்து உப்பு உண்டாக்குவார்கள். துருவத்தை அடுத்த சீததேசங்களில் கடல்நீரை உறையும்படிசெய்து உப்பு எடுப்பார்கள். இவ்விரண்டு வகையிலும், உவர்ப்பான கடல் நீரினின்றும் நல்லநீர் வேருய்ப் பிரிந்து போக, அதிலுள்ள உப்பு மாத்திரம் அடியில் தங்கிக் கட்டி கட்டுகின்றது.

மா. ஆயின் உப்புத் தற்செயலாயே விளைந்துபோமோ ? நமது பிரயாசை அதற்குச் சிறிதும் தேவையில்லையோ ?

உபா. அப்படியில்லை. அதற்குத் தக்கபடி மனிதர்கள் கஷ்டப்பட்டு வேலை செய்தால்தான் செம்மையாய் உப்பு உற்பத்தியாகும். இரண்டாவது சொன்னபடி உப்பு உண்டாவதற்கு இயற்கையில் உண்டாகிற காற்று முதலிய சாதனங்களே போதும் ; முதலில் சொன்னவிதமாய் உற்பத்தி செய்வதற்கு மாத்திரம் வெவ்வேறு வழிகள் உண்டு. அவையாவன :

1. இயற்கையாயே நீர் சுவறுவதனுல் உண்டாவது.
2. செயற்கைக் கருவிகளால் நீர் சுவறச்செய்து உண்டாக்குவது.
3. இவ்விரண்டும் சேர்ந்து உண்டாவது.

மா. ஆயின் இத்தேசத்தில் உப்பு உண்டாக்குகிற வழி இவற்றுள் எது, ஐயா ?

உபா. இவற்றுள் முதல்வழியே இத்தேசத்தில் உபயோகிக்கப்படுகின்றது. இவ்வழியால் உப்பு விளைவதற்குத்தக்க சீதோஷ்ண நிலை வேண்டுவதோடு கூட வரண்டகாற்றும், விசாலமான கழிவெளியும் வேண்டும். கோடைக் காலத்தில் இவையெல்லாம் சரியாய் அமைந்து பயிர்செய்யப் பக்குவமாயிருக்கும். வேண்டும்பொழுது நீரையெல்லாம் சுலபமாய் ஒரே அளவாக வடிய விடுவதற்கேற்றபடி உப்புப் பயிர் செய்யும் பூமிகளை வாட்டம்செய்து பாத்தி கட்டிக் கட்டளைபோட்டு அதில் கடல்நீரைக் கட்டுவார்கள். அததற்குத்தக்க அளவுக்கேற்க நீர் கட்டினுல், சிலநாளையில் அந்த நீரின் மேற்புறத்தில்

சிறிது சிறிதாய் உப்புப்பூத்து, சீக்கிரமே அது அமிழ்ந்து அடியில் படிந்து போம். இவ்வாறு வேண்டியவளவு படிந்தபிறகு அந்தப் பாத்திகளின் பக்கங்களில் கட்டிகட்டியாய் உப்புப் பூக்கத்தொடங்கும். ஆயின் இவ்விதமாக விளைகிற உப்பு அத்தனை வெளுப்பாயிராது ; தகுந்த பக்குவம் செய்தால் மிகவும் வெளுப்பாக விளையும்.

மா. அந்தப் பாத்திகளில் கட்டின கடல்நீர் அப்படியே அதில் நிலையாய் இருக்கவேண்டுமோ ?

உபா. முதலில் தண்ணீர்கட்டிச் சுமார் நான்குநாளைக்குப்பிறகு அந்த நீரை வடியவிட்டு மறுபடி நீர் கட்டுவார்கள். இப்படிப் போதுமானவளவு உப்புப் படிந்தபின் நீரை நன்ருய் வடியவிட்டிருந்தால் கட்டிகட்டியாய் உப்புக் கட்டும். ஆயினும் இந்த அளவு அந்தந்த நீரின் தன்மைக்கும் காற்றின் அளவுக்கும் ஏற்றபடிப் பலவகையாயிருக்கும்.

மா. சமுத்திரஜலந்தானே உப்பாகிறது ; அந்த நீர் அத்தனையும் உப்புத் தானே ?

உபா. அத்தனையும் உப்பன்று ; நூற்றுக்கு இருபத்தேழுபங்கு கடல் நீரில் உப்புக் கலந்திருக்கின்றது.

மா. கடல்நீரில்மாத்திரந்தான் உப்பு இருக்கின்றதோ ?

உபா. பூமியில் உப்புக்கனிகள் உண்டென முன்னமே சொன்னேனே ; இவையன்றி பெரிய உப்புத்தடாகங்களும், உப்பு ஊற்றுகளும், உப்புக் கழி வெளிகளும் உண்டு.

மா. கனிகளில் கிடைக்கின்ற உப்பு சாதாரணமான உப்புப்போலவே இருக் குமா, வேறுவிதமாயிருக்குமா ?

உபா. கனிகளில் அகப்படுகின்ற உப்புக்குக் கல்லுப்பு என்று பெயர். அது கெட்டியாகப் பாறைபாறையாயிருக்கும்.

மா. அவ்விதமான உப்பு அகப்படுகின்ற கனிகள் எங்கிருக்கின்றன ? தெரியச்சொல்ல வேண்டுகிறேன்.

உபா. உப்புக்கனிகள் இப்பூமியில் எந்தப் புறத்திலும் அகப்படும்.

மா. கல்லுப்புக்கனிகள் இவ்வாசியாக் கண்டத்திலும் இருக்கின்றனவோ ?

உபா. ஆசியாக் கண்டத்தில் உப்புக்கனிகள் அநேகவிடங்களில் உண்டு. உராலியன்மலைக்கு அருகிலிருக்கின்ற ஒரு பெரிய வெளியில் உப்புக்கனி ஒன்று இருக்கின்றது. அதுதான் எல்லாவற்றுள்ளும் மிகப் பெரியது. ஆஸ்திரகானுக்கு அருகே ஒரு கனி இருக்கின்றது. ஸைபீரியாவில் பல கனிகளிருக்கின்றன. அங்கே சில கனிகளில் வெட்டுகிற கருவியும் ஒடிந்து போம்படி உப்பு அத்தனை கெட்டியாயிருக்கின்றது. துருக்கி, பாரசீகம் இத் தேசங்களிலும் உப்பு அகப்படுகின்றது. அரபிதேசத்தில் சிலவிடங்களிலே அது மிகவும் விசேஷமாயிருக்கின்றது. அத்தேசம் அதிக உஷ்ண பூமி யாதலால் அங்கே உப்புக்கற்கள் அதிக கெட்டியாயிருக்கின்றன ; அவற்றை வீடுகள் கட்டுவதற்கும் உபயோகப்படுத்துகின்றனர். பாரசீகக்குடாவின் வட புறத்திலுள்ள ஆர்மஸ் என்னும் தீவு முழுவதும் ஏறக்குறைய உப்புக்கற் களே என்கிருர்கள். காச்மீரத்தை அடுத்த கணவாயில் உப்புக்கனிகளிருக் கின்றன. லாகோரீல் சுமார் முந்நூறு அடி உயரமுள்ள உப்புமலை ஒன்று உண்டு. இம்மலையின் உப்புகளைவெட்டித் தட்டுகளாகவும் பலகைகளாகவும் விளக்குத் தண்டுகளாகவும் செய்கின்றனர். இவ்விந்தியாவிலும் பல விடங் களில் கல்லுப்புகள் அகப்படக்காண்கிருேம். இதனுலேயே இது ஒரு இடத் திற்கே உரியதல்லவெனத் தெளிவாகின்றதல்லவா ?

மா. ஆப்பிரிகாக் கண்டத்திலும் உப்புக்கனிகள் இருக்கின்றனவோ ?

உபா. ஆப்பிரிகாவில் அத்லாஸ்மலையின் இருபுறத்திலும் கல்லுப்பு விசேஷமாய் உண்டு ; இக்கிரிமந்து கணவாயில் உப்புக்கனிகள் இருக்கின்றன.

லிபியா வனந்தரத்து வடபாரிசத்தில் மைல் தூரத்துக்கு மைல் தூரம் விஸ்தாரமான உப்புக்கனிகளே. ஸைபீரியாவுக்குத் தென்கிழக்கில் விசாலமான உப்பு வெளியொன்று உண்டு. அதை நாம் கடந்துபோவ தென்றால் நான்குநாள் செல்லும். அத்தேசத்துக்கு வேண்டிய உப்பு யாவும் அங்கிருந்தே கொண்டுபோகப்படுகின்றது. அவ்விடத்து உப்புகளையே பில்லை பில்லையாகச் செய்து அத்தேசத்தில் சிலவிடங்களிலே நாணயமாக வழங்குகிறார்கள்.

மா. ஐரோப்பாக் கண்டத்தில் உண்டா இல்லையா? அதைக் கேட்க மறந்துபோனேனே.

உபா. குழந்தாய், ஐரோப்பாவிலும் பலவிடங்களில் உண்டு. ஜர்மனி, ஆஸ்திரியா, ஸ்திரியா, அங்கரி, போலாந்து, வால்ஷியா, ஸ்பானியா முதலிய விடங்களில் உப்புக்கனிகள் உண்டு. இவற்றுள் போலாந்தில் கிராகோநகரத்துக்கு அருகிலுள்ள ரெலிஸ்கா என்பதும், ஸ்பானியாவில் சுமார் ஐந்நூறு அடி உயரமுள்ள கார்தோவாமலையுமே முதன்மையான உப்புக்கனிகள். அம்மலை சுமார் மூன்றுமைல் சுற்றளவுள்ளது. நாம் அதைச் சுற்றிவர ஒருமணி நேரம் செல்லும். ரெலிஸ்காவென்னும் கனியில் எண்ணூறு வருஷமாக உப்பு வெட்டியெடுத்துவருகிறார்கள்.

மா. இப்பொழுது நமது சக்கரவர்த்தியார் இருக்குமிடமான இங்கிலாந்திலுமுண்டோ?

உபா. அங்கும் உண்டு; செஷயர், ஸ்தாபோர்ட்டுஷயர், வார்செஸ்தர்ஷயர் இவ்விடங்களில் அதிகமாய் உண்டு. பிள்ளாய், நீ உப்புக்கனியைக் கண்டதில்லையே. ரெலிஸ்கா என்னும் உப்புக்கனியைப்பற்றிச் சொல்லுகிறேன், கேட்கிறாயா?

மா. ஐயா, தாங்கள் இத்தனை தயவுசெய்து சொன்னால் கேட்பதற்கென்ன? காத்திருக்கிறேனே. அந்தக் கனியைத் தாங்கள் நேராகவே போய்க் கண்ணால் கண்டிருக்கிறீர்களோ?

உபா. நான் போய்ப் பார்க்கவில்லை; அவ்விடம் போயிருந்த என்னுடைய நேசர் ஒருவர் அதைப்பற்றிச் சொல்லக்கேட்டிருக்கிறேன். அவர் அதன் காட்சி வெகு அற்புதமென்கிறார். இந்தக் கனி போலாந்திலிருக்கிறதென்று சொன்னேனல்லவா? அது பூமிக்குள் அறுநூறு கஜம் ஆழத்தின்கீழ் இருக்கின்றது.

மா. ஐயா, இதைக் கேட்கையிலேயே எனக்குப் பயமாயிருக்கின்றதே; அந்தப் பாதாளத்திற்கு எப்படிப் போகிறது?

உபா. என் நேசர் அதற்குள்ளேகூட இறங்கிப்போய்ப் பார்த்துவந்தாராம். இறங்குவது எப்படியெனில், அங்கே பலகையொன்று கப்பிக்கயிற்றில் கட்டித் தொங்குகின்றது. அதில் உட்கார்ந்தால் மேலே நிற்பவன் அந்தக் கயிற்றைத் தளர்த்திவிடுகிறான்; மூச்சுவிடுகிற நேரத்தில் அது அடிப்புறம்போய்ச் சேருகின்றது. என் நேசர் இறங்கும்போது அவர்க்குத் துணையாய் அவரோடுகூட அங்கிருப்பவன் ஒருவன் அதில் உட்கார்ந்து, அந்தச் சிறு குகைவழியில் இறங்கும்போது ஏதாவது கல், சக்கை தடுக்கப்போகிறதென்று அப்படிப் பட்டதை வெட்டிக்கொண்டுபோகும்படிக் கத்தியும் கையுமாய் இறங்கினான். சீக்கிரமே அவர்கள் அடிப்புறம் சேர்ந்தார்கள். அவ்விடம் காடாந்தகாரமாயிருந்ததனால் உடனே அவன் ஒரு தீவட்டி கொளுத்திக்கொண்டு அங்கிருந்த பெரும்பாதைவழியாக அழைத்துக்கொண்டு போனான். அவ்வழியில் வெகு தூரத்துக்கப்பால் மினுக்கு மினுக்கென்று விளக்குவெளிச்சம் தெரிந்துகொண்டிருந்தது.

மா. அந்தப் பாதாளபூமியில் விள்க்குவெளிச்சம் எப்படி வந்ததையா?

உபா. அங்கு அநேகம் விளக்குகள் ஓயாமல் எரிந்துகொண்டிருக்கின்றன. அநேகம்பேர் அவ்விடத்தில் வேலைசெய்துகொண்டிருக்கிறார்களல்லவா? விளக்கில்லாமல் அவர்கள் எப்படி அவ்விருளில் வேலைசெய்யமாளும்?

என் நேசர் அவ்விடம் பனிக்கட்டிகளால் செய்த பெரிய அரண்மனைபோ லிருந்ததென்ருர். உப்பினுல் அழகாய்ச் சித்திரித்த சிறந்த கம்பங்கள் உள்ள விசாலமான சபாமண்டபங்களும் பிராகாரங்களுமாய் அவ்விடம் வெகு விநோதமாயிருந்ததாம்.

மா. ஆ, அது எத்தனை அற்புதமாயிருக்குமோ !

உபா. அற்புதமென்பதற்குக் கேட்கவேண்டுமா ? தூரத்திலிருந்துபார்க்கும்பொழுது அங்குள்ள கம்பங்களும் சுவர்களும் வானவில் வருணமாய்த் தோற்றின ; சமீபத்தில் சென்றபொழுது சுத்த வெளுப்பாகத் தோன்றின.

மா. அதெப்படி, ஐயா ? மழைத்தாரைகளில் சூரியகிரணம் பிரதிபலிப்பதால் வானவில் வருணம் உண்டாகின்றதெனப் புத்தகங்களில் படித்திருக்கிருேம். அந்தக் குகையில் சூரியனேது ?

உபா. ஆம், அது மெய்தான். அந்தக் குகையில் சூரியனுக்குப் பதில் அதைப்போலிருப்பது வேறென்றுமில்லையா யோசித்துப்பார்.

மா. விளக்குகள் இருக்கின்றனவெனத் தாங்களே சொன்னீர்களே ?

உபா. ஆம், அங்குள்ள ஒவ்வொருவழியிலும் விளக்குகள் போட்டிருக்கின்றன. அவற்றின் ஒளி உப்புக்கம்பங்களில் பிரதிபலிக்கும்பொழுது சூரியனொளி மழைத்தாரைகளில் பிரதிபலிப்பது போலாகின்றது. இந்தக் கனி முன்னே ராஜாங்கத்துக் கைதிகள் வேலைசெய்த விடம்.

மா. ஆயின் அந்தக் கைதிகள் நாள்தோறும் தங்கள் நேசர் இறங்கின விதமே அதற்குள் இறங்கிப்போகவேண்டுமோ ?

உபா. அப்படியில்லை ; அவர்கள் அங்கேயே நிலையாயிருந்து அங்கேயே இறந்துபோனுர்கள். அந்த உப்புக்கனியில் சிறப்பாகச்சித்திரித்த ஆலயமொன்றுண்டு ; அங்கேயே அவர்களை அடக்கமும் செய்தார்கள். அவ்விடத்தில் வேலைசெய்யப்போகிறவர்களுக்குச் சிறுவீடுகளும், மற்றும் வேண்டிய பல தட்டுமுட்டுகள் யாவும் உப்புக்கட்டிகளாலேயே செய்யப்பட்டிருக்கின்றன.

மா. மேஜை நாற்காலி முதலியவைகூடவா ?

உபா. அவைமாத்திரமா ! குருட்டுக் குதிரைகளுக்குக் கொட்டாரங்கூடச் செய்யப்பட்டிருக்கின்றது.

மா. அங்கிருப்பவர்களுக்குக் குருட்டுக்குதிரை என் ஐயா ?

உபா. முதலில் அவ்விடத்திற்குக் கொண்டுபோகும்போது அவை குருடல்ல ; அங்குக் கண்ணைக் கூசச் செய்யும் அதிகப் பளபளப்பான வெண்மைநிறத்தைக் காண்பதனுல் அப்படியாகின்றன. உப்பாயினும் பனிக்கட்டியாயினும், அவற்றின் அதிகப் பளபளப்பான வெண்மை நிறத்தைக்கண்டால், மனிதர் மிருகம் யாவர்க்கும் கண்கெட்டுப்போம்.

மா. ஆயின், ஐயோ ! அந்தக் கைதிகளை நினைக்க எனக்கு மிகப் பரிதாபமாயிருக்கிறதே. இப்பொழுதும் யாராவது அதில் அடைபட்டு இருக்கிருர்களோ ?

உபா. குழந்தாய், இப்பொழுது ஒருவருமில்லை. இப்போது ருஷியா தேசத்துக்குடிகள் அதில் இறங்கி வேலை செய்கிருர்கள். அவர்கள் எப்பொழுதோ ஒவ்வொருவேளை அதனுட் சென்று வேலைசெய்துவிட்டு வெளியே வந்துவிடுவார்கள். ஆயினும் இவர்களும் இன்னம் நெடுநாள் அவ்விடத்தில் வேலைசெய்யும்படி இராதெனத் தோன்றுகின்றது. ஏனெனில் சிலநாளாக அக்கனிகளில் வெகு வேகமாக நீர் ஊறத்தலைப்பட்டு மிகுந்த அபாயம் விளைவிக்கின்றதாம். ஆனதுபற்றி அக்கனியின் மேற்புறத்தில் உள்ள கிராமத்தார் மிகக் கவலையுற்றிருக்கிருர்கள்.

மா. அந்தப் பாதாளத்தில் நீர் விசேஷமாய்ச் சுரக்குமானால் அங்கு வேலைசெய்பவர்கள் அப்படியே மூழ்கிப்போவார்களல்லவா ?

உபா. மூழ்கிப்போவார்களென்பதற்குக் கேட்கவேண்டுமோ ? நீர் செம்மையாய்ச் சுரந்துவரத் தலைப்பட்டால் அத்தனை ஆழமும் அதிசீக்கிரத்தில் நிறைந்துபோகாதா ? அந்தக் கனிகளில் இன்னொரு அதிசயமுண்டு கேட்கிறாயா ? இந்தத் தரையில் செடிகள் முளைப்பதுபோலவே அந்தக் கனிகள் அடிப்புறத்திலும் பூஞ்செடி தழைச்செடி முதலியவெல்லாம் தற்செயலாய் முளைத்துப் பயிராகின்றன. பார்ப்போர் கண் கூசும்படி அவை அதிக வெண்மை நிறமானவை. அவற்றில் ஒரு சிறிது கிள்ளி வாயில்போட்டால் நாவற்றுப்போம்படி அவை அத்தனை காரமுள்ளவை. இந்த உப்பு மலர்ச் செடிகள் முற்றும் தாதுசாரமேயன்றி வேறல்ல.

மா. ஐயா, இப்பூமியின் கீழ்ப்பாதியில் உள்ள கனிகளைமட்டும் சொன்னீர்களே ; மேற்பாதியிலிருக்கும் அமெரிகாக் கண்டத்தில் உப்புக்கனிகளில்லையோ ?

உபா. குழந்தாய், அமெரிகாவிலும் உப்புக்கனிகள் அதிகம் உண்டு. பெரு என்னும் தேசத்தைச்சார்ந்த மேட்டுப்பாங்குகளில் கல்லுப்பு விசேஷமாய் அகப்படுகின்றது. அவ்விடத்தில் உப்புக் கற்கள் அதிக கெட்டியானவை. அவற்றின் நிறமும் ஓர் வகையாயிருக்கும். அப்படியே கிரனடா, லூஷியானா, காலிபோர்னியா, இத்தேசங்களிலும் உப்புக்கனிகளுண்டு ; ஆஸ்திரேலியாவில் இல்லையாவென்று கேட்பாயோ ? அங்கும் கல்லுப்புக்கனிகள் இருக்கின்றன.

மா. ஐயா, இவ்விதமாய் இவ்வுலகமுழுதும் உப்புக்கனிகள் அமைக்கப்பட்டிருப்பதற்கு யாதுகாரணமோ ?

உபா. குழந்தாய், இதனாலேயே கடவுள் சர்வவல்லமை உடையவரென்பதையும் சர்வஞ்ஞரென்பதையும் நீ கண்டுகொள்ளலாம். இவ்வுலகத்தில் உள்ள கோடாகோடி பிராணிகளுக்கும் உணவுக்கு உப்பு அவசியம். உப்பில்லாமல் எவரும் பிழைத்திருப்பது அரிது. ஆனதுபற்றியே ஓரிடத்திலன்றிப் பலவிடங்களிலும் உப்புக்கனிகள் காணப்படுகின்றன.

மா. ஜீவகாருண்ணியமுள்ள கடவுள் இப்படி அபரிமிதமாய் உப்பைப் படைத்திருக்க, அதிக விலைகொடுத்தாலல்லது எளிதில் அது நமக்குக் கிடைப்பதில்லையே, அதேன் ?

உபா. குழந்தாய், நீ நினைப்பது சரியே. நியாயப்படி விற்றால் பைசாவுக்குப் படிகூட விற்கலாம். உப்பு எவர்க்கும் இன்றியமையாத பொருளென்று கண்டு துரைத்தனத்தார் அந்த வர்த்தகத்தைத் தாமே கைக்கொண்டு, அதன்மேல் அதிகமாக வரிபோட்டு உயர்ந்தவிலைக்கு விற்கிறார்கள். பிரான்ஸ், ஸ்பானியா இத்தேசங்களில் இதைப்பற்றிப் பெரும்கலகம் உண்டாயிருக்கிறது. அங்கே பெரியமனிதர்களுக்குமட்டும் உப்புவரி கிடையாதாம் ; ஏழைகள்மட்டும் கொடுக்கவேண்டுமாம். வருஷத்தில் தலைக்குச் சுமார் எழெட்டுப்படி உப்பு தேவையாகிறதல்லவா ?

மா. நாம் வருஷத்தில் அவ்வளவு உப்பு சாப்பிடுகிறோமா ? ஒரு நாளைக்குச் சிறிதளவு உப்புத்தானே நாம் உட்கொள்ளுகிறோம்.

உபா. பிள்ளாய், அப்படியா நீ நினைக்கிறாய் ? நாம் புசிக்கிற ஒவ்வொரு பொருளிலும் உப்பு கலக்கப்பட்டிருக்கிறதல்லவா ? உப்பு இல்லாவிட்டால் நாம் எந்தக் கதியாவோமென்று எண்ணுகிறாய் ? ஹொலாந்தில் பூர்வகாலத்துச் சட்டப்படி குற்றவாளிகளுக்கு மிகக் கொடியதண்டனையாய் உப்பில்லாச்சோறு அளித்துவந்தார்கள்.

மா. இந்தத் தண்டனை விசித்திரமாயிருக்கிறதே. அவர்கள் அதை ஒரு வருத்தமாகக் கொள்வார்களெனத் தோன்றவில்லையே.

உபா. உனக்கு அப்படித்தான் தோன்றும்; அவர்கள் அந்தத் தண்டனையைக் கேட்டு மிகவும் நடுங்குகிறார்கள். அந்தக் குளிர் தேசத்தில் அவ்விதமான உணவை உண்பவர்கள் மிகவும் உடல்மெலிந்து தீராநோயில் அடிபட்டு இறக்கிறார்கள். உப்பை உண்ணுதவர்களுக்குத் தேகம் மிகவும் அசவுக்கியப்படுகின்றது. "உப்பில்லாப்பண்டத்தைக் குப்பையில் எறியவேண்டும்" என்கிறார்களல்லவா? சென்ற 1870–71 வருஷங்களில் ஜர்மனி தேசத்துப் படைகள் போராடப்போயிருந்தபொழுது பகைவர் தேசத்தில் அச்சேனைக்குச் சிறிதும் உப்பு அகப்படவொட்டாமல் செய்துவிட்டார்கள்.

மா. ஆ, இவ்வளவு உபயோகமான பொருளை நமக்கு அளித்திருப்பதற்காக நாம் கடவுளிடத்தில் எவ்வளவு நன்றியுள்ளவர்களாயிருக்கவேண்டும்!

6. யோககியதை.

இவ்வுலகில் மன்னுயிர்களுக்கு மகுடமும் மகிமையும் அவரவர்களுடைய யோக்கியதையே. மனிதர்களுக்கு எல்லாப் பேறுகளிலும் நற்குணமே பெரும்பேறும். அவர்களுக்கு உயர்ந்த அந்தஸ்தும் இதுவே, அனைவரும் உள்ளமுவந்து அங்கீகரிக்கத்தக்க ஆஸ்தியுமிதுவே. யோக்கியதை எந்தெந்த நிலைமைக்கும் பெருமையுண்டாக்கும்; எவ்வளவு தாழ்ந்த ஸ்திதியையும் உயர்த்தும். சற்குணம் செல்வத்திலும் அதிகச் செல்வாக்குள்ளது. பிரசித்திபெறவேண்டுமென்கிற பேராவலில்லாமலே பலவிதமான கீர்த்தியையும் உண்டாக்கும். சற்குணமுண்டானால் அதனோடு சகலவிதமான செல்வாக்குமுண்டாகும். எப்படியெனில், யோக்கியதை, உண்மை, மாறுபடாத மனவுறுதியாகிய இந்நற்குணங்களே செல்வாக்கையுண்டாக்குகின்றவை. மனிதர்களுக்கு இந்நற்குணங்களுள்ளவரிடத்திலுண்டாகும் நம்பிக்கையும் மதிப்பும் மற்றெந்தக் குணமுள்ளவரிடத்திலும் உண்டாவதில்லை.

யோக்கியதையென்பது மனிதருடைய நல்ல சுபாவத்திற்கு அடையாளமாம். அது வடிவெடுத்துவந்த நீதிநெறியேயன்றி வேறல்ல. நற்குணமுள்ளவர்கள் மற்றெல்லோரும் தத்தமிருதயம்போலவே நம்புவதற்கிடமாயிருப்பதுமாத்திரமேயன்றி, செம்மையாய் அரசாளப்படும் ராஜாங்கமனைத்திலும் உபயோகமான காரியமனைத்தையும் நடத்துவதற்குச் சிறந்த முதற்காரணமாகிறார்கள். ஏனெனில், முக்கியமாய் இவ்வுலகத்தையாள்வன நீதிநெறிகளேயன்றி வேறல்ல. யுத்தரங்கத்திலும் நீதிபலத்தால் எவ்வளவு காரியம் சாதிக்கலாமோ அதில் பத்திலொரு பங்குதான் தேகபலத்தால் சாதிக்கமாளுமென நெப்போலியன் மொழிந்தார். ஒரு தேசத்தின் பலம், தொழில், முயற்சி, நாகரிகம் இவை அனைத்திற்கும் ஆதாரம் அங்கங்குள்ள மனிதர்களுடைய நடத்தையே. தேசரக்ஷணத்திற்கு மூலாதாரமும் இதுவே. சட்டதிட்டங்களும் நிபந்தனைகளும் இதினின்று உற்பத்தியானவையே. கடவுளுடைய கோணுத கருணையால் இந்தப் பிரபஞ்சத்தில் சகல தேசஜாதி மதஸ்தர்களுக்கும் அவரவர் நடத்தைக்கு ஏற்றவண்ணம் இன்பதுன்பங்கள் அமையுமேயன்றி மற்றப்படி அமையா. ஒரு காரியமுண்டானால் அதற்குக் காரணமுண்டென்பது எப்படி நிச்சயமோ அப்படியே அவரவருடைய நடத்தையும் அததற்கேற்ற பயனை விளைவிக்குமென்பது நிச்சயம்.

ஒருவன் மற்றவர்களைப்போல் அறிவில் பண்படாதவனும், அற்பசாமர்த்தியனும், தனஞ்சிறியனுமாயிருப்பினும், அவன் நடத்தைமட்டும் மாறுயர்ந்திருக்குமானால், தொழிற்சாலையோ, கணக்குச்சாலையோ, வர்த்தகசாலையோ மந்திராலோசனைச்சபையோ எவ்விடத்திலாயினும் அவனுக்குச் செல்வாக்கு அதிகமாகும். 1801-ம்வருஷத்தில் கானிங்பிரபு மிகத்தேர்ந்து ஒன்று எழுதியிருக்கிறார். அதாவது, 'நான் நன்னடைக்கையின் வழியாகச் சென்று ஆட்சிபெறவேண்டும்; அதுதவிர வேறொருவழியில் நடக்க முயலவும் மாட்டேன்; ஒருவேளை இது மெதுவான மார்க்கமாயிருப்பினும் குறித்தவிடத்தில் தவறாது கொண்டுசேர்க்குமென்பது நிச்சய'மென்றார்.

அறிவுமிகுந்தவர்களைக் கண்டு வியப்படையலாமென்றாலும், மற்றொரு விசேஷகுணமிருந்தாலன்றி அவர்களிடத்தில் நம்பிக்கை கொள்ளலாகாது. ஆனதுபற்றியே இங்கிலாந்து தேசத்தாரெவரும், புத்திமான்களுடைய யுக்தியாலோசனைகளைமட்டும் கேட்டு, நன்னடக்கையுள்ளவர்கள் சொல்லுகிறபடி நடக்கும் இயற்கையுடையவர்களென்னும் நீதிநிறைந்த இச்சிறுவாக்கியத்தை ஜான் ரஸ்ஸெலென்பவர் ஒரு சமயத்தில் உதாகரித்தார். இவ்வாக்கியத்தின் கருத்து காலஞ்சென்ற பிரான்ஸிஸ் ஹார்னர் என்பவருடைய சரித்திரத்தில் வெகுநன்றாய்த் தெளிவாகும். எப்போதுபார்த்தாலும் அவர் முகத்தில் பத்துக்கற்பனைகள் முத்திரையிட்டவைபோலக் காணப்படுமென ஸிட்னி ஸ்மித்து அவருடைய பெருமையை எடுத்துக்காட்டியிருக்கிறார். அவரைப்பற்றிக் காக்பரன் பிரபு அடியில்வருமாறு சொல்லியிருக்கிறார். அதாவது :— "யோக்கியர்களெல்லாம் கேட்டு விசேஷமாய் வியக்கத்தக்கதாய் அவர் சரித்திரத்தில் மேன்மைபெற்ற விசேஷமென்னவெனில், அவர் முப்பத்தெட்டாம் வயதிலே இறந்துபோனாரென்றாலும், அவ்வளவுகாலத்திலேயே பிரசித்த ஸ்தலங்களிலெல்லாம் அவர்க்கு விசேஷமாய்ச் செல்வாக்கு உண்டாயிருந்தது. புத்தி விவேகமில்லாத நீசர்தவிர மற்றெல்லாரும் அவரை நன்கு மதித்து நம்பி நேசித்து அன்புகூர்ந்து அவர் இறந்ததற்காகக் கண்ணீர்விட்டுக் கதறினார்கள். பாரிலிமெந்து சபையாரில் இறந்தவர்களில் இவரினும் மிக்க வழிபாடு பெற்றவர் ஒருவருமில்லை.

"இவ்வளவு உயர்வான பதவி அவருக்கு எப்படி அமைந்ததென்று வாலிபர்களெல்லாம் கேட்கக்கடவர்கள். உயர்குலப்பெருமையாலமைந்ததா? இல்லை, அவர் எடின்பர்க்கு வியாபாரி ஒருவனுடைய மகன். அல்லது செல்வத்தாலா? அவராகிலும், அவருடைய சுற்றத்தாராகிலும், கால் ரூபாயாவது மிகுந்து கையில் வைத்துக்கொண்டிருந்தது ஒருபோதுமில்லை. உத்தியோகப்பெருமையாலா? அவர் நிர்வகித்த உத்தியோகமொன்றேயொன்று, அதுவும் சில வருஷகாலந்தான். அந்த உத்தியோகத்தில் அதிகாரமும் ஒன்றும் கிடையாது; சம்பளமும் சொற்பம். யுத்திபுத்தி சாமர்த்தியங்களாலா? அப்படியும் அவர் பிரசித்தரன்று; அவருக்குப் புத்திவல்லமை அவ்வளவாய் விசேஷமில்லை; ஜாக்கிரதையும் மெதுவும் தவறாதிருக்க வேண்டுமென்கிற நோக்கமுமாத்திரமேயுடையவர். வாய்ச்சாமர்த்தியத்தாலா? அவர் அடக்கமும் மரியாதையுமாய்ப் பேசுகிறவரேயன்றிக் கேட்போரை பயமுறுத்தி வசீகரிக்கும்படியான நாவன்மையுடையவரன்று. பிறரைப் பகட்டும்படியான வேஷத்தாலா? அவர் உள்ளபடி உள்ளும் புறமும் ஒத்துநடப்பவரேயன்றி வேஷம் போடுகிறவரன்று. ஆயின் பின்னெந்தப் பெருமையாலே அவர்க்கு அம்மேன்மை கிடைத்தது? நல்ல இருதய பரிபாகமுள்ளவர். அனைவருக்கும் அவசியம் அமையத்தக்கதான விவேகம், உழைப்பு, நன்னெறி, ஒழுக்கம், ஈவு இரக்கம் முதலிய இக்குணங்களாலேதான். முக்கியமாய் அவரைச் சிறப்பித்தது அவருடைய நற்குணத்தின் வலிமையே. அந்த நற்குணமும் அவர்க்குச் சுபாவத்திலே கிடைத்ததன்று; அற்பமான சிலகருவிகளைக்கொண்டு அவர்தாமே அமைத்துக்கொண்டது. ஹௌஸ் ஆவ் காமன்ஸ் என்னும் ஜனப்பிரதிநிதி சபையில் அதிக சாமர்த்தியமும் சாதுரியமும் நாவன்மையயும் உடைய அநேகர் இருந்தனரென்றாலும், நீதிநெறி முதலிய நற்குணங்களையும் அவற்றோடு சேர்த்துப்பார்க்கையில், இவரினும் மிக்கோர் ஒருவருமில்லை. கல்வி, குணநலம் இவற்றின் உதவிமட்டுமிருக்குமானால், எவ்வளவு அற்ப சாமர்த்தியமாயினும், மற்றெந்தப் பொருளின் உதவியும் சிறிதுமில்லாமலே, உலக வியாபார விஷயத்தில் எவ்வளவு போட்டிகளும் பொறாமைகளுமிருந்தாலும் அவற்றின் நடுவேதாமே மேலிட்டு எவ்வகை அருந்தொழிலும் செய்யக்கூடுமென்பதை அனைவர்க்கும் திருஷ்டாந்தப்படுத்திக் காட்ட ஹார்னர் இவ்வுலகில்வந்து பிறந்தவரென்னலாம்" என்று சொல்லியிருக்கிறார்.

அறிவே பலமென்பார் சிலர்; ஆசாரமே பலமென்பார் சிலர். இவ்விரண்டினுள்ளும் இரண்டாவதிலேயே உண்மை அதிகமிருக்கிறதென்னவேண்டும். இருதயமில்லாத மனமும், ஆசாரமில்லாத அறிவும், சுகுணமில்லாத

சாமர்த்தியமும் ஆகிய இவையெல்லாம் தத்தம் வழியில் வலிமையுள்ளவைகளேயாயினும், அவற்றின் வலிமை விசேஷமாய்த் தீமை விளைவிப்பதற்குமட்டும் பலமாகுமேயொழிய மற்றப்படியாகா. அவை நமக்கு அறிவுபுகட்டினாலும் புகட்டும், வினோதமாகப் பொழுதுபோக்காயிருந்தாலுமிருக்கும். ஆயினும் முடிச்சுமாரியின் கைத்திறமும் வழிக்கொள்ளைக்காரனுடைய குதிரையேற்ற நலமும் எவ்வளவு வியக்கத்தக்கவையோ அவ்வளவே சிலவேளை வியக்கத்தக்கவையாகும்.

உண்மை, மனநிறை, நன்மையாகிய இவைகளே ஒருவனுடைய குணங்களில் மிகவும் முக்கியமானவையாம். அல்லது பூர்வ கிரந்த கர்த்தா ஒருவர் மொழிந்தபடி, சுகிர்தத்திற்குக் கைம்மாறின்றித் தொழும்புசெய்யத்தக்க உள்ளத்திற் பிறந்த ராஜவிசுவாசமாம். இக்குணங்களோடு ஒருவனுக்கு மனவுறுதியுமிருக்குமானால், அவனுடைய வல்லமைக்குத் தடையொன்றுமில்லை. அவன் நன்மைசெய்வதற்கும் சலிக்கமாட்டான்; தீமைகளை வெல்லவும் பின்வாங்கமாட்டான். வருத்தங்களையும் கஷ்டநிஷ்டூரங்களையும் உத்தரிக்கவும் வல்லவனாகிறான். கொலோனாவாசியாகிய ஸ்தோவானைப் புல்லர் மேல்விழுந்தமர்த்தி, இப்பொழுது உன் அரணெங்கேயென்று கேலியாய்க் கேட்டபொழுது, அவன் தன் இருதயத்தில் கைவைத்து, இங்கேயென்று அச்சமின்றி உத்தரம் உரைத்தான். மனநிலைமாறாத நெறியோனுடைய நற்குணம் நன்றாகப் பிரகாசிப்பது அவனுடைய கஷ்டகாலத்திலேதான். மற்றவையெல்லாம் துணைநில்லாது தவறிப்போக, மனநிறையும் ஆண்மையுமே அப்போது அவனுக்கு முக்கியாதாரமாகின்றன.

சுத்ததத்துவ சுதந்தரியும், பழிக்கஞ்சி வழிநிற்கும் சத்தியானுசாரியுமாகிய எர்ஸ்கின் பிரபு அனுசரித்த ஆசாரக்கிரமங்கள் ஒவ்வொரு வாலிபரும் தம் இருதயத்தில் உறுதியாய்ப் பதியவைத்துக்கொள்ளத்தக்கவைகள். அவர் சொல்லியதாவது:—"தருமமென்று என் நெஞ்சு சொல்வதை எப்பொழுதும் செய்வதும், பின்பு அதனால் விளையும் பயனைக் கடவுள் திருவுள்ளத்தின் செயலென்று எண்ணிக்கொள்வதும் இளமையிலேயே நான் கைக்கொண்ட முதற்கற்பனையும் புத்தியுமாம். பெற்றோர் கற்பித்த இப்பாடத்தின் ஞாபகமும் சாதனையும் இடுகாடுவரைக்கும் என்னுடனே வரும். இன்றளவும் அதை அனுசரித்துக்கொண்டு வந்தேன். அதைக் கைக்கொண்டு எப்பொழுதேனும் எனக்கு நஷ்டம் வந்ததென்று குறைகூற நிமித்தமொன்றுமில்லை. மேலும் செல்வமும் சாம்பிராச்சியமும் பெறுவதற்குரிய வழி அதுவேயென்று கண்டேன். நீங்கள் அனுசரிக்கவேண்டிய வழியும் இவ்வழியேயென்று என் பிள்ளைகளுக்கும் காட்டுவே"னென்றார்.

நன்னடக்கையுடைமையே இவ்வுலகில் உயர்ந்த பேறென்று ஒவ்வொரு மனிதனும் அதை நாடுவது கடன். தகுந்த சாதனங்களால் அதைப் பத்திரமாய்க் கைக் கொள்ளச் செய்யும் யத்தனமே அவனுக்கு முயற்சி செய்ய முகாந்தரத்தைக் காட்டும். ஆண்மையைப்பற்றி அவனுக்குள்ள அபிப்பிராயம் உயரஉயர, அம்முகாந்தரமும் நிலைபெற்றுத் திடமுறும். உயர்ந்த ஒழுக்கத்தின் அளவை உள்ளபடி உணர நாம் வல்லவரல்லாதிருப்பினும் அதைக் கைக் கொள்வது நல்லது. இதைச் சுட்டி மெஸ் டிஸ்ரெலி சொல்லியதாவது:—"மேல் நோக்கமில்லாத வாலிபன் கீழ் நோக்குவான். உயரப் பறக்காத ஜந்து தவழும் அமைப்புள்ளதுபோலு"மென்றார். "பணிந்த நடையும் உயர்ந்த நோக்கமும் உள்ளவனாயிரு; இருந்தால் உனக்குத் தாழ்மையும் மேன்மையுமுண்டாம். அது கண்டு மனவலி குலையவேண்டாம். ஆகாயத்தை இலக்காய்க் குறிப்பவன் எய்யும் அம்பு மரத்தை இலக்காய்க் குறிப்பவன் எய்யும் அம்பைப் பார்க்கிலும் மிகவும் உயரப் பறக்கு"மென்று ஜார்ஜி ஹொபர்ட்டு தெளிந்து உரைத்திருக்கிறார்.

தன்னிடத்தில் விளங்கிய சாத்விகமனைத்திலும் குறையாமல் பின்னும் ஆயிரமடங்கு அதிகமுண்டென நெஞ்சார நினைவார அறிந்திருப்பவனும், உள்ளமும் ஒழுக்கமும் ஒத்திருப்பவனும், நால்வருடன் கலந்து உறவாடும்

பொழுது செய்யும் உபசாரமனைத்தோடுங்கூட, பெருந்தன்மையுள்ள மனத்தில் முளைத்தெழுந்த செடியிற்பூத்த மலர்போலும் மிகுந்த மரியாதைகள் இணைந்திருக்கப்பெறுவோனும், இவ்வண்ணம் சாதுவென்னும் சிறப்புப் பெயரை எசுவாரின்றி அணிந்து கொள்வோனுமாகிய இத்தன்மையனைத் தவிர எப்பொழுதும் பெருமைபெற வல்லவர் வேறுயார்?

புத்திவைப்பதற்கு உருவமைவது அந்தரங்கத்தில்; நல்லொழுக்கத்திற்கு உருவமைவது இப்பிரபஞ்சமாகிய போர்க்களத்தில்.

ஒரு தேசத்தை உயர்த்துவதும், ஒரு தேசத்தைத் திடப்படுத்துவதும், ஒரு தேசத்துக்கு மகத்துவம் உண்டாக்குவதும் அதன் அதிகாரத்தைப் பரப்பி அதற்குச் செல்வாக்குண்டாக்கிப் பிறர் அதற்கு அடங்கி அதை அபிமானிக்கும்படிசெய்வதும், லக்ஷோப லக்ஷம் பெயர்களுடைய இருதயத்தை வணக்கி அதன்முன் இதர தேசத்தார்கள் கர்வமடங்கித் தலை வணங்கும்படி செய்வதும், கீழ்ப்படியச் செய்வதற்கு ஏற்ற கருவியும், மேன்மைபெறுவதற்கு மூலாதாரமும், ஒரு தேசத்தார்க்கு மெய்யான சிங்காதனமும் கிரீடமும் செங்கோலுமாகிய இவையெல்லாம் குலப்பெருமையாலும் அமைந்ததல்ல; நாகரிகத்தாலும் வரப்பெற்றதல்ல, புத்திசாமர்த்தியமொன்றாலும் அமைந்ததல்ல; நல்லொழுக்கத்தால் அமைந்த ஆட்சிகளேயாம். மனிதர்களுக்கு இதுவே மெய்யான குலவிருதுவித்தை.

7. பூமியில் புதையுண்ட பட்டணம்.

இத்தாலி தேசத்தில் நேபில்ஸ் நகரத்துக்கருகே பொம்பியா என்று ஒரு பட்டணம் உளதென அநேகர் கேள்வியுற்றிருக்கலாம். அந்தப் பட்டணம் விஷுவியஸ் என்னும் எரிமலையினின்றும் பொங்கி வந்த மண் வெள்ளத்தின் கீழ்ப் பதினெட்டு நூற்றாண்டுகளாய்ப் புதையுண்டு கிடக்கின்றது. அப்படிப் புதையுண்ட பட்டணம் இது ஒன்று மாத்திரமேயல்ல; ஹெர்க்கியுலேனியம், ஆபிலொந்தி, தெக்லானம், ரெதினு, ஸ்தோபியா என்ற பல பட்டணங்களும் அழிந்து கிடக்கின்றன. ஆயினும் அவற்றுள் பொம்பியா, ஹெர்க்கியுலேனியம், ஸ்தோபியா இவை மட்டுமே கண்டு பிடிக்கப்பட்டன. மற்றவை இன்னும் அப்படியேதான் ஒருவர் கண்ணுக்கும் அகப்படாமல் பூமியின் கீழ் அழுந்திக்கிடக்கின்றன. பொம்பியா பட்டணம் சாம்பல், மண், கல் இவைகளாலேயே மூடுண்டிருந்ததனால் அது வெகு லேசாக வெட்டிப் பார்க்கக் கூடியதாயிற்று. ஹெர்க்கியுலேனியமென்பது லாவா என்னும் ஒருவகை எரிமலைப் பொருள் வெள்ளம்பாய்ந்து கல் போலக் கெட்டிப்பட்டுப்போனதனால் அதை வெட்டியெடுக்க வெகு வருத்தமாயிற்று. பொம்பியா பட்டணத்தைப்பற்றியே இங்கு ஒருவாறு எடுத்துரைப்போம்.

அப்பட்டணத்துள் அநேக பாகம் வெட்டிக் கண்டறியப்பட்டிருக்கிறதென்றாலும், காணாமல் பூமிக்குள் புதைந்த பாகம் அதிகம் இருக்கின்றது. அவற்றையும் வெட்டியெடுப்பார்கள். வெட்டிப் பார்த்தும் அவ்விடம் பூமிக்குள் ஒரு குகைபோல் இருள் மூடியிருப்பதனால் நன்றாய்ப் பார்க்கக்கூடாமலிருக்கிறது.

ஒருகால் மிகப் பெருமைபெற்றிருந்த அப்பழைய நகரத்தைப் போய்ப் பார்ப்பவர்கள் நாளைக்கும் அதன் அற்புதங்களைக் கண்டு அதிசயிக்கும்படியாகும். அப்பட்டணத்தில் தெருக்களெல்லாம் மிகவும் நெருக்கமாயும் ஓர் அளவில்லாத பலவகைக் கற்கள் படுத்துமிருக்கின்றன. வீடுகளெல்லாம் அநேகமாய் இரண்டு கட்டுகள் உள்ளவை. நீர்க்குழாய்கள் அநேகம் இருக்கின்றன.

அந்த நகரத்தில் மாளிகை வீதி என்று பேர்பெற்று ஒழுங்காய் நெடுந்தூரம் நீண்ட பெரிய வீதி ஒன்று உளது. இப்பொழுது அவ் வீதி எங்கும் நிச்சப்தமாய் இருக்கின்றது. ஒன்றும் அங்கு அசைந்து உலாவுவது இல்லை; குழந்தைகள் கூவி விளையாடுவதில்லை; வீடு வாயில்களில் ஒருவரும் தென்படுவதில்லை; இங்கும் அங்கும் சரக்குகள் போக்குவரவு செய்வதில்லை;

மளிகைக் கடை, பழக்கடை முதலாகக் கடைத் தெருவுஒன்றுமில்லை ; கைத்தொழில்கள் ஒன்றும் நடந்தேறுவதில்லை ; எல்லாம் நிச்சப்தமாயிருக்கின்றன. அங்கிருந்து பின்னும் சிறிது தூரம் சென்ருல், அழகிய ஆலயங்கள், நாடகசாலைகள், நியாய சபைகள் முதலிய பல பிரசித்தமான பெருங் கட்டடங்களெல்லாம் அழிந்து அழகு குலைந்து கிடக்கக் காணலாம். கற்படுத்த தரைகளில் தேர் ஓடின அடையாளங்கள் இன்னும் வெயிலில் பளபளத்துப் பிரகாசிக்கின்றன. இலமாயிருக்கின்ற கம்பங்களிலும் சுவர்களிலும் செய்திருந்த முற்காலத்துச் சிறந்த சிற்ப வேலைகளின் வடிவங்களும் வர்ணங்களும் இன்னும் அவைகட்கு அழகாயிருக்கின்றன. இவ்விடத்தில் அநேகம் ஆண்களும் பெண்களும் மேலேபடிந்து கெட்டியாய்ப்போன மண்கட்டிகளை மலைமலையாகப் பெயர்த்து வண்டிகளிலேற்றி அப்புறப்படுத்துகின்றனர். வேறு சிலர் கற்களையும் சாம்பல் கட்டிகளையும் ஜாக்கிரதையாய்ப் பெயர்த்தெடுத்து வெளிப்படுத்துகின்றனர். மற்றும் சிலர் விலைபெற்ற பொருள்களை வேருகப் பிரித்து வைப்பதும், அழியாது மிகுந்திருக்கும் மெத்தை மேடைகளைப் பின்னும் அழிக்காது அவ்வளவோடாவது வைத்துக்காக்கும்படி, அசைந்து ஆடும் சுவர் முதலியவற்றை முட்டு கொடுத்து நிலைக்கச் செய்வதுமாகிய வேலை செய்துவருகின்றனர். பியரெலி என்பவர் தலைவராயிருந்து இவ்வேலை அனைத்தையும் நடத்திவருகிருர்.

பொம்பியா பட்டணம் பூமியில் புதையுண்டு இப்பொழுது 1800 வருஷமாகின்றது. அப்பட்டணத்தை வெட்டிப் பார்த்து அதில் உள்ள அற்புதக் காட்சிகளைப் பின்னும் கண்டறிய வேண்டுமென்னும் ஆவல் சென்ற வருஷத்தில் ஐரோப்பியர்களுக்கு உண்டாயிற்று. அதன் பொருட்டு அத்தேசத்துப் பெரிய பண்டிதர்கள் பலர்கூடி மகோற்சவமொன்று நடத்தி அப்பட்டணத்தின் பூர்வசரித்திரத்தைப் படிக்கச் செய்தார்கள். அங்கே இலமாய்க் கிடந்த கட்டடங்களைப் போய்ப் பார்த்தார்கள். பின்னும் பலவிடங்களைப் புதிதாய் வெட்டியெடுத்து வருகிருர்கள்.

இப்பொழுது எல்லாம் ஓய்ந்திருக்கும் இந்த மகா நகரம் மிகவும் மேன்மைபெற்றிருந்த் காலமொன்று இருந்தது. ஒருகால் அது மிக்க மாட்சிமைபெற்றிருந்ததனுலேயே அப்பட்டணத்திற்குப் பொம்பியா எனப் பெயர் அமைந்தது. பாம்ப் என்ருல் மாட்சிமை என்று அர்த்தம். இந்தப் பட்டணம் கண்ணுக்கு இனிய காட்சிகள் அமைந்த ஒரு கடற்கரை ஓரமாய், செல்வம் பொழியும் சிங்காரவனமான ஒரு சமபூமியின் முகப்பிலே, தெள்ளிய நீர்பாயும் ஓர் ஆற்றங்கரையில் இருந்தது. அங்கே கடலோரத்திலும் ஆற்றங் கரையிலும் உள்ள மைதானத்தில், இந்நகரத்திற்கும் நேபில்ஸ்நகரத்திற்கும் மத்தியில் ஓரழகாய், விநோதமான நாட்டு விடுதிகளும் சிங்காரத் தோட்டங்களும் இருப்பதோடுகூட, அப்பட்டணத்தில் பல சித்திர விசித்திரங்களும் விநோதக் காட்சிகளுமிருந்தன. அங்கே சிறப்புற்றிருக்கின்ற குடாக்கடலில் பல வர்த்தகக் கப்பல்களும் படவுகளும் செம்படவர் மீன் பிடிக்க வைத்திருக்கும் தோணிகளுமாகிய இவை எப்பொழுதும் அடர்ந்து இங்கும் அங்கும் ஓடிக் கொண்டிருந்தன. பொம்பியா நகரம் செல்வத்தில் சிறப்புற்றதாகி, வர்த்தகத்துக்கேற்றவிடமாயும், சேனைகள் இறங்கச் சவுக்கியமான சன்னிவேசமாயும், கண்ணுக்குக் குளிர்ச்சியான காட்சிகள் உள்ளதாய்ச் சுகந்தேடி அனைவரும் வந்தடையும் இடமாயுமிருந்ததால், தேசாந்திரிகள் அநேகர் அவ்விடத்தில் வந்து வசிக்கும்படியிருந்தது. அதை அடுத்த விஷுவியஸ் மலைச் சிகரங்களிலேகூட அந்நகரச் சீமான்கள் வசந்த மாளிகைகள் கட்டிக் கொண்டு குடியிருந்தனர்.

இவ்வாறு சிறப்புற்ருேங்கிய இச்செல்வ நகரம் கி.-பி. 79-ம்வருஷத்தில் எவர்க்கும் தெரியாமல் திடீரென்று அழிக்கப்பட்டது. அப்படி ஓர் அபாயம் உண்டாகுமென்று எவரும் கனவிலும் கருதவில்லை. விஷுவியஸ் மலையின் கொடிமுடியில் முன் எப்பொழுதோ பொங்கி வழிந்த லாவா என்னும் பொருள்கள் தோய்ந்து அது ஒரு எரி மலையென்பதை அனைவர்க்கும் அறிவித்துக் கொண்டிருந்ததென்ருலும், பின்பு வெகு

நாள் வரையில் சிறிதும் சந்தடி செய்யாதிருந்ததனால், அதன் வேகம் அவ்வளவோடு அடங்கிப்போயிற்றென்று எண்ணி அனைவரும் அமைதியாயிருந்தனர். கி. பி. 63-ம் வரு வரையில் அதில் யாதொரு சந்தடியுமுண்டாகவில்லை. அந்த வருஷத்தில் அங்கே ஒரு கொடிய பூகம்பம் உண்டாகி, போம்பியா நகரத்திலும் அதையடுத்த பட்டணங்களிலும் வெகு வாய்ச் சேதம் உண்டாயிற்று ; ஆயினும் அப்பொழுது அதைச் சீர்ப்படுத்திக் கட்டினார்கள். அதற்குப் பின் பதினான்கு வருஷம் கழித்து, வெகு பயங்கரமாய் அம்மலை கொதிப்பெடுத்து அப்பட்டணங்களை அடியோடு அழித்துவிட்டது. அப்பொழுது ஆகாயத்தில், நன்றாய் வெயில் காய்கின்ற நடுப்பகல் மழைக்காலத்து இரவுபோல் இருண்டுபோம்படி அவ்வளவு அடர்ந்து சாம்பற்புகை பறந்ததாம். அங்கிருந்து பதின்காத வழிக்கு அதிக தூரத்திலிருக்கின்ற ரோமாபுரியிலேகூட அதனால் இருள் மூடிப்போயிற்றென்கிறார்கள். அந்தப் புகைமேகத்தினின்றும் கந்தகங்கள் எரிந்துகொண்டு வீழ்ந்தன ; மெல்லிய சாம்பற் பொடிகள் அனற்பொறிபோல் எரிந்து கொண்டு மழைபொழிவதுபோலப் பொழிந்தன ; நெருப்புக் கற்கள் வீழ்ந்தன. உடனே அம்மலைத் துவாரத்தினின்றும் பேரோசை ஒன்று உண்டாகி, கெட்டியான கருமண் ஆறு ஒன்று எதற்கும் தடைப்படாத வேகத்தோடு பெருகி வந்து அப்பட்டணத்துத் தெருக்கள்தோறும் பரவி சந்து பொந்துகளெல்லாம் பாய்ந்து முழுமையும் அழித்துவிட்டது.

ஆயினும் அந்த ஆபத்து வேளையில் அப்பட்டணத்தார்க்குப் பதுங்குமிடம் ஒன்றும் அகப்படவில்லையா என்பீர்களோ? அப்பட்டணத்துள் அந்த மண் வெள்ளம் புகாதவிடம் இல்லை ; வெளியே ஓடவும் சாத்தியப்படவில்லை அவ்வெள்ளம் வழியை மறித்து எங்கும் சூழ்ந்து கொண்டது. பூமியின் கீழ்ப்புறங்களிலும் வீடுகளின் அறைகளிலும் போய்ப் புகுந்து கொண்டவர்கள் உடனே மூச்சுத்திணறி மாண்டு உலகமுள்ளளவும் அப்படியே அடைபட்டிருக்க வேண்டியதாயிற்று. அநேகர் வீதிவழியே ஓடப்பார்த்தார்கள் ; அவர்களெல்லாம் தரையெங்கும் வீழ்ந்து படிந்துபோன கற்கள் தடுக்கி விழுந்து விழுந்து மண் வெள்ளத்தின் கீழ் அகப்பட்டுக் கொள்வதும் ஆகாயத்திலிருந்து வீழ்ந்த கற்கள் பட்டு அடியுண்டு இறப்பதுமானார்கள். அந்தப் பேரிருளில் வழி துறை தெரியாமல் கும்பல் கும்பலாய் அநேகர் போய் நெருங்கினார்கள் ; கண்களில் நெருப்புப் பொறிகள் விழ, ஆகாயத்தினின்றும் கந்தகப் பொருள்கள் வர்ஷிக்க அத்தனை பேரும் எரிமலை வெள்ளத்தின் கீழ் அகப்பட்டுக் கொண்டார்கள். அவ்விடம் விட்டுத் தப்பி வெளியே ஓடிப்போனவர்களும் வானத்தில் கிளம்பின சாம்பற் புகை சூழ்ந்துகொண்டு இறந்துபோனார்கள். மூன்று நாளையில் அந்தப் பட்டணம் கண்ணுக்குப்புலப்படாமல் சாம்பல்களாலும் கந்தகக்கற்களாலும் கெட்டிப்பட்ட எரிமலை மண்களாலும் மூடுண்டுபோயிற்று. இவ்வாறு அப்பட்டணம் அழிக்கப்பட்டது அநேகர் எண்ணியிருந்தபடி லாவா என்னும் ஒருவகை எரிமலைப் பொருள் வெள்ளத்தினாலன்று ; சூடு கொண்ட சாம்பல்களாலும் உருகிப் பெருகி வந்த மண்வெள்ளத்தாலுமே மூடப்பட்டது. இவை நன்றாய்க்கெட்டியான ஒரு கவசம்போலாகி அப்பட்டணத்துள் அகப்பட்டுக் கொண்ட மனித சரீரம் முதலிய யாவையும் அழுகிக் கெடவொட்டாமல் அப்படியே பாதுகாத்தன.

அந்தப் பட்டணத்து முக்கியமான கோபுரவாயில் ஒன்றில் காவல் காத்துக் கொண்டிருந்த ஒருவன் ஒரு கையில் கத்திபிடித்து மற்றொரு கையால் சொக்காயைக் கொண்டு வாயை மூடிநின்ற வண்ணமே அம்மண் வெள்ளத்தில் அகப்பட்டுப் புதைந்துபோயினன். அநேக நூற்றாண்டுகளுக்குப் பின் அவ்விடத்தை வெட்டிப் பார்த்தபோது, துருப்பிடித்த கத்தியும் கையுமாய் அவ்விடத்தில் அவனுடல் அப்படியே காணப்பட்டது.

ஒருவர் கையை ஒருவர் கோத்துக் கொண்டபடி அநேகர் இறந்துபோனார்கள். ஓரிடத்தில் ஒருத்தி தன் மூன்று குழந்தைகளோடுகூட மாண்டுபோயிருந்தாள். மற்றொரிடத்தில் ஒரு மூலையில் ஓடி ஒளிக்கப்போன ஒரே

குடும்பத்தைச் சேர்ந்த பதினேழு பேர் அங்கேயே கும்பலாய் அழிந்து போனார்கள். ஒரு பெண் பிள்ளையண்டை அநேகம் ஆரங்களும், பல பொன் ஆபரணங்களும், அவள் கையில் ஒரு பை நிரம்பப் பணமும் இருக்கக் காணப்பட்டன. ஒரு எஜமானன் கையில் சாவிக் கொத்தும், பணப்பையும், நகைநட்டுகளும் எடுத்துக் கொண்டு ஓட, அவனுடைய வேலைக்காரன் வெள்ளி வெண்கலச் சாமான்கள் எடுத்துக் கொண்டுஅவனைப் பின் தொடர்ந்து ஓட, இருவரும் வாசற்படி கடக்கு முன்னே சாம்பல்மாரி அடித்து மல்லாந்து போனார்கள். சிலர் சுவரில் சார்ந்தபடியே உயிரிழந்தார்கள். பலவாறு சொல்லியென்ன ? யார் யார் எந்தெந்த நிலையில் நின்றபோது அந்தக், கொடிய வெள்ளம் அவர்களைச் சூழ்ந்து கொண்டதோ அந்தந்தவிதமே அவரவர் அங்கங்கு வெட்டிப் பார்க்கையில் கல்லாகிக் காணப்பட்டனர். இவ்வாறு அக்காலத்தில் அக்கினி வெள்ளம் கக்கினது இப்போது அம் மலைச் சிகரத்தில் காணப்படுகின்ற அக்கினிபிலமன்று. அம்மலையின் மத் தியில் ஓரிடத்தில் கொதிப்பெடுத்து அந்தக் கொடிய காட்சி உண்டாயிற்று. அது முதல் அடிக்கடி அம்மலையில் பலதரம் கொதிப்பு உண்டாயிற்றெனரு லும், அந்த முகத்தில் மறுபடி ஒரு தடவையும் கொதிப்பெடுக்கவில்லை.

காலவளவில் அம்மலை மறுபடியும் சாந்தமாயிற்று. சில காலத்தில் அந்தச் சாம்பல் படிந்தவிடங்களெல்லாம் செழித்த விளை நிலங்களாகி அதன் மேல் திராட்சைச் செடி, அத்திச்செடி முதலிய செடிகளெல்லாம் பயிராகத் தொடங்கின. அந்த மண்மேடுகளின் மேல் போர்திசி, ரெஸினு, தாரிதெல்கி ரிசோ என்று இப்படி வேறு சில பட்டணங்கள் கட்டப்பட்டன. பொம்பியாவென ஒரு நகரமிருந்ததென்பதையே முற்றும் மறந்துபோயினர்போலும். ஆயி னும் அப்படி ஒரு பட்டணம் பூர்வத்தில் இருந்ததென்பதைப்பற்றிச் சில ஐதிகங்கள் மட்டும் அத்தேசத்து ஜனங்களுக்குள் வழங்கிவந்தன. பதினாரு வது நூற்றாண்டில் நீர்க்கால் ஒன்று வெட்டத் தரையைத் தோண்டின பொழுது ஒரு ஆலயத்தின் சிகரமொன்று காணப்பட்டது. ஆயினும் அப்பொழுது அதைச் சோதனை செய்து பார்க்க வேண்டுமென்னும் முயற்சி எவர்க்கும் உண்டாகவில்லை. அப்படியிருக்க 1748-ம்வூடித்தில் இரண்டு வேளாளர்கள் ஏதோ ஒரு காரியமாய்த் தரையைத் தோண்டக் கீழ்ப்புறத்தில் மாளிகை ஒன்று தென்பட்டது. அந்தச் செய்தி பலவிடங்களிலும் பரவ, அங்கங்குள்ள வித்வான்கள் அதன் வரலாற்றைத் தேர்ந்தறிய முயன்றது மன்றி, அங்குள்ள துரைத்தனத்தார் தாமும் அதைத் தோண்டிப் பார்க்க ஏற்பட்டனர். பின்பு 1848-ம்வூடித்தில் அந்தக் காரியத்தை மிக்க ஊக்கத் தோடு செய்யத்துவக்கினார்கள். அதற்காகப் பல காலங்களில் பல அதிகாரி கள் ஏற்பட்டு பூமியில் வழி தோண்டிக் கொண்டு போய் அந்தப் பாதாள பட்டணத்தைப் பார்க்க முயன்றார்கள். அப்படியே தோண்டிக் கொண்டு உள்ளே போய்ப் பார்க்க, அங்கங்கிருந்த மனிதர்களுடைய வடிவம் நின்ற நிலையிலேயே நிற்கக் கண்டார்கள். சிறிதளவு குறைய இரண்டாயிரம் வருஷமாய் அப்படி நின்று கொண்டிருந்த வடிவங்கள் கொஞ்சம் காற்று நுழைய வழி உண்டானவுடனே வீழ்ந்து அழிந்துபோயின.

8. ஞானத்தை ஏற்றபடி உபயோகித்தல்.

நமக்குக் கிடைத்த சக்திகளை நாம் எப்படி உபயோகிக்கிறோமோ, அப் படியே நமக்குக் கவுரவுமுண்டாகும். தனக்குக் கிடைத்த புத்திசாமர்த்தி யம் ஒன்றாயினும் அதை ஒருவன் சரியாகப் பிரயோகிப்பானானல் அவ் விதமான புத்திசாமர்த்தியமுள்ளவனைப்பார்க்க அதிகமாய்ப் பெருமை பெறுவதற்குரியவனாவான். திரண்ட ஸ்திதி ஒருவனுக்குப் பிதிரார்ச்சி மாய்க் கிடைத்தால் அதில் எப்படி ஒரு மேன்மையுமில்லையோ அப்படியே சிறந்த புத்திசாமர்த்தியங்கள் இயற்கையாய் அமைந்திருப்பதிலும் ஒரு மேன்மையுமில்லை. அந்தப் புத்திசாமர்த்தியங்களை எப்படி உபயோகிக்கி றோமோ, அந்தப் பூஸ்திதியை எவ்விதமாய்ப் பண்படுத்துகிறோமோ அதைக் கொண்டுதான் அவற்றின் மேன்மையை அறிய வேண்டும். ஒரு உபயோக முமின்றிக் கல்விப்பொருட் பெருஞ் செல்வத்தை மனது விசேஷமாய்த் தேடி வைத்துக் கொண்டிருக்கலாம். அவ்வறிவு, நன்மைக்கும் விவேகத்திற்கும்

துணையாகி நல்லொழுக்கத்திற்புகாதிருக்குமாயின், இருந்தும் இல்லாதது போலவே. அறிவானது இவ்வுலகில் வழங்கும் அற்பமான அக்கிரமங் களுக்கு உடன்படவொட்டாமல் ஒருவனை விலக்கிக் காக்குமென்றாலும், உண்மையான நீதியொழுக்க முதலியவைகளால் பத்திரமாய்க் காக்கப் பட்டாலன்றி சுயப்பிரயோஜனமான துர்மார்க்கங்களினின்றும் விலக்கிக் காக்க மாட்டாது. ஆனதுபற்றியே கல்வியில் நன்றாய்த் தெளிந்தும் ஒழுக்கத்தில் மிகவும் குறைவுள்ளவர்களாயும், பாடசாலைப் படிப்பு பூரணமாயிருந்தாலும் வியவகாரஞானம் சிறிதுமில்லாதவர்களாயும், நாம் பார்த்தனுசரிக்கத்தக்க நல்லொழுக்கமுள்ளவர்களாயிருக்க வேண்டுவதுபோக நாம் கண்டஞ்சி ஜாக் கிரதையாயிருக்க வேண்டிய தப்பொழுக்கமுள்ளவர்களாயும் அங்கங்கே அநேகரைக் காண்கிறோம். "புத்திமான் பலவான்" என்று அடிக்கடி பழமொழி வழங்குகிறதென்றாலும், அந்தப் புத்தியை நல்வழியிற் கொண்டு திருப்பாவிட்டால் அது சிறிதும் பலமாகமாட்டாது. மேலும் தீயோர்களைப் பின்னும் கொடியவர்களாக்கி உலகத்திற்கே அபாயம் விளைவிப்பதாகும்.

இக்காலத்திலிருக்கும் கல்விப் பயிற்சியின் மேம்பாட்டை நாம் மிகவும் பெருமைப்படுத்திப் பேசும்படியாயிருக்கும்; புஸ்தகசாலைகளும், தர்மசாஸ்தி ரங்களும், விநோதப் பொருட் காட்சி சாலைகளும் அநேகமிருப்பதானால் அதைக் கண்டு நமது கல்விப் பயிற்சி விசேஷமாய்ப் பெருகுகிறதென்று எண்ணும்படியாகவுமிருக்கும். ஆயினும் இவ்வகையான சாதனங்கள் அவ னவன் உயர்ந்த கல்வித்துறைகளில் தன்னைத்தான் பண்படுத்திக் கொள் வதற்குத் துணையாயிருப்பது போலவே பெரும்பாலும் அதற்கு இடை யூறாகவும்கூடும். பொருளுள்ளவர்களெல்லாம் எப்படிப் பெருங் கொடை யுள்ளவர்களாவதில்லையோ அப்படியே விசேஷமாய்ப் புத்தகங்களைக் கையாள் பவர்களும் வித்வான்களாகமாட்டார்கள். நம்மிடத்தில் விசேஷ சுகசாதனங் களுளவென்றாலும், ஊன்றிப்பார்த்தால், அவதானம், விடாமுயற்சி, உழை ப்பு இவையாகிய பழைய வழியைப் பிடித்துச் சென்றாலல்லது அறிவும் விவேகமும் ஒருபோதும் நமக்குச் சுவாதீனமாகமாட்டா. கல்விக்கு வேண் டிய கருவிகளை மட்டும் கையாள்வது வேறு; படிப்பிலும் உயர்ந்த சிக்ஷை யால் அடையத்தக்க அறிவும் விவேகமும் கருத்துகளைக் கேட்டுத் தெரிந்து கொள்வதேயொழிய வேறல்ல. ஏனெனில், ஒன்றைப் படிக்கும்போது படிப் பவன் புத்தி புதிதாய் ஒரு வேலையும் செய்வதில்லை. ஆதலால் நமது படிப்பு, சிறிதளவேனும் மனத்தைத் திருத்தித் தெளிவிக்காமலும், ஒழு க்கத்தை உறுதி செய்யாமலும், கணப்பொழுது இதமான உள்ளக் கிளர்ச்சி தரும் ஒருவிதமான மதுபானஞ் செய்வது போலாகின்றது. இவ்வாறே அநேகர் வீணாய்ப் பொழுது கொல்லும் எளிய வேலை செய்துவருங் காலத்தில் தங்கள் மனத்தைப் பண்படுத்துகிறோமென்று சொல்லிப் பாசாங்கு செய்து திரிகிறார்கள். ஆயின் அதனினும் இழிதொழில் செய்யப்புகாமல் அந்த மட்டிலாவது அவர்களைக் காக்கிறதேயென்று அப்பொழுது கொல்லும் வேலை யைப் பார்த்தும் நாம் சந்தோஷிக்க வேண்டுவது தான்.

மேலும், புத்தகங்களைப் படித்துவரும் அறிவு வெகுவாய் விலை பெற்றதா யிருந்தாலும் புத்தகப்படிப்பாகவேமுடிகிறது. அனுபவத்தால் வரும் அறிவு விவேகமாக முடிகிறது. ஏட்டுக் கல்வி அளவற்றிருப்பதும் சரி, அனுபவம் சிறிதளவிருப்பதும் சரி. ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாதல்லவா?

நல்ல நூல்களை வாசிப்பது நமக்குப் பயன்பட்டு ஞானத்தை விருத்தி பண்ணுமாயினும், மனத்தைப் பண்படுத்தும் விஷயத்தில் பத்தோடு பதி னோராவதாயிருக்கிறதேயன்றி மற்றப்படியில்லை. நல்லொழுக்கமுண்டாக் கும் விஷயத்திலோ நல்ல அனுபவமும் உதாரணமும் உதவுவதுபோல அவ்வளவு ஒருபோதும் உதவுவதில்லை. ஆதலால் முக்கியமாய்க் கல்வி கற்பதன் நோக்கம், பிறருடைய கருத்துகளைக் கொண்டு நம்மனத்தை நிறை த்து, நமது முயற்சி சிறிது மின்றி அவர்களுடைய கல்வியறிவைக் கற்றுக் கொள்வதன்று; நமது புத்தியையும் நன்றாய் விகாசப்படுத்தி, ஜீவ காலத்தில் நாம் செய்யும் படி நேரிடுகிற பலவித வேலைகளையும் செம்மை யாய்ச் செய்து உலகத்திற்கு உபகாரிகளாக்கிக் கொள்ள வேண்டுமென்பதே.

மிக்க ஊக்கமும் உற்சாகமுமாயுழைத்து உலகத்திற்கு உபகாரிகளான பலரும் வெகுவாய்ப் படிப்பில் தேர்ச்சிபெறுதவர்களே. பிரிண்டிலி, ஸ்டீவின்ஸன் இவர்களுக்கு நல்ல வயது வந்து பெரியோர்களாகிற வரையில் எழுதப்படிக்கக்கூடத் தெரியாது. ஆயினும், சிறந்த செயல்களைச் செய்து இருவரும் இருபதுபேருக்குச் சமானமாய்க் காலங்கழித்தார்கள். ஜான் ஹண்டர் என்பவருக்கு இருபது வயது வரையில் எழுதப்படிக்கத் தெரியாதென்றாலும் தச்சுவேலை பயின்ற எவனுக்கும் இளைக்காமல் மேஜை நாற்காலிகள் மட்டும் செய்ய வல்லவராயிருந்தார்.

ஆதலால், அறிவு வேண்டுவது அவசியமென்றாலும், ஒருவன் விசேஷமாயறிவதே முக்கியமன்று ; அவ்வறிவின் நோக்கமும் பிரயோஜனமுமே முக்கியமாம். விவேகத்தை விருத்திபண்ணி, ஒழுக்கத்தைச் சீர்ப்படுத்தி, நம்மை முன்னிலும் மிக்க யோக்கியர்களாயும், சவுக்கியமுள்ளவர்களாயும், பிறர்க்கு உபயோகமானவர்களாயும், ஈவிரக்கமுள்ளவர்களாயும், விசேஷ சாமர்த்தியமும் உலகத்தில் எவ்வகைச் சிறந்த காரியத்தையும் விடா முயற்சியாய்ச் செய்து முடிக்க வேண்டுமென்கிற ஊக்கமும் உள்ளவர்களாயும் ஆக்குவதே அறிவின் நோக்கமாயிருக்க வேண்டும். நீதி நெறியைக் கவனியாமல் இவ்விதமான-புத்தி வைபவத்தை மாத்திரம் வியந்து விருத்தி செய்யும் வழக்கத்தை ஒருதரம் கையாளப் புகுந்தால், அவர்கள் இழிவென்னப்படும் அனைத்திற்கும் செல்லும் பெரும்பாதையில் அடிவைத்தவர்களென்றே சொல்ல வேண்டும். பிறரிருந்த ஸ்திதியையும் செய்த செயல்களையும் குறித்து எழுதி வைத்திருப்பவைகளைப் படித்துச் சிந்தனை செய்வது மாத்திரமே போதுமென்று திருப்தியடைந்திருக்கக்கூடாது. நாமும் அவ்விதமான ஸ்திதிக்கு வந்து அவ்வகைச் செயல்களைச் செய்ய முயலவேண்டும். நமது உயர்ந்த அறிவு ஒழுக்கத்திலும், உயர்ந்த யுக்தி ஆலோசனைகளெல்லாம் காரியத்திலும் உபயோகமாக வேண்டும். நான் என்னால் சாதிக்கக்கூடிய மட்டும் சாதித்தேன் ; இதற்கு மிஞ்ச எவர்க்கும் அவசியமில்லை என ரிக்டர் சொன்னவளவாவது நாமும் சொல்லத் திறமையுள்ளவர்களாகவேண்டும். தனக்கு இயற்கையாயமைந்த சக்தி சாமர்த்தியங்களுக்குத் தகுந்தபடி தெய்வ சகாயத்தைக் கொண்டு தன்னைத் தானே நன்றாய்ப் பண்படுத்தி நல்வழிப்படுத்துவது எவர்க்கும் கடமை.

தன்னைத் தானே சிக்ஷித்துக் கொள்வதும் தன்னைத் தானே அடக்கி ஆள்வதுமே அப்பியாச ஞானம் உண்டாவதற்குக் காரணமாம். இவற்றிற்கெல்லாம் மூலாதாரம் தன்மானமென்பது ; அதாவது, தன் பெருமையைத் தானறிந்திருப்பதாம். ஒருவனுக்குக் கோரிக்கையென்பது இதனின்றுமுண்டாகின்றது. கோரிக்கையானது அதிகாரத்துக்குத் தோழனும் காரியசித்திக்குத தாயுமாம். அப்படிச் சிறந்த கோரிக்கையுள்ளவனிடத்தில் அற்புதமான வரப் பிரசாதமிருக்கிறதென்றே சொல்ல வேண்டும். அவரவர் தம் இயற்கையான தீக்குணங்களை விலக்குவது மாத்திரமேயன்றி நற்குணங்களை விருத்திபண்ணவும் வேண்டும். தன்மானம்போலப் பிறர்மானத்தையும் பாராட்ட வேண்டும். பிறரும் அப்படியே நம்முடைய கவுரவத்தைப் பாராட்டுவது கடன்.

தன்மானமென்பது ஒருவன் தரித்துக் கொள்ளத்தக்க உயர்ந்த வஸ்திரமும், தன்னை விசேஷமாய்ப் பெருமைப்படுத்திக் கொள்ளும்படியான ஈசுவரயத்தனமாய் இருதயத்தில் உதிக்கத்தக்க உயர்ந்த அபிப்பிராயமுமாம். தன்னைத்தானே இழிவாய் நினைப்பது, பிறர் மதிப்பில் மாத்திரமேயன்றித் தன் மதிப்பினும் தாழ்ந்துபோவதாம். சிந்தனையெப்படியோ அப்படித் தான் செய்கையும். இழிவானவைகளையேஎண்ணிக் கொண்டிருப்பவன் ஒருபோதும் உயர்பதம் பெறமாட்டான். உயர்ந்த பதம் பெறவேண்டுமானால் உள்ளக் கருத்துகளும் உயர்ந்தேயிருக்க வேண்டும். எளியார்க்கெளியனும் இதை முறைமையாய் நினைத்து அனுசரித்து வருவானானால், தடையின்றி உயர்ந்தெழுவான். தன்மானம் மாத்திரம் ஒருவனுக்கு இருக்குமானால், தரித்திர ஸ்திதியும் மேன்மை பெற்றுச் சிறப்பாய் விளங்கும். ஏழையொருவன், துராசைகள் பல சூழ்ந்து கொள்ளும்பொழுதும் நெறிவிலகாது நேராய் நின்று இழிந்த செயல் செய்ய உடன்படாதிருப்பானாயின் அதைவிட அற்புதக்காட்சி வேறென்ன ?

உலகத்தில் தான் விருத்தியடைய வேண்டுவதற்கு மாத்திரம் முக்கிய சாதனமாய் எண்ணி ஒருவன் தற்பயிற்சி செய்வானானால், அவ்வெண்ணமே அப்பயிற்சியை இழிவுப்படுத்துவதாம். இந்த நோக்காய்ப் பார்க்குமிடத்தில், காலம், உழைப்பு என்னும் மூலதனத்தை வித்தியாப்பியாசத்திற்காக வைப்பது ஒரு உத்தம உபாயமென்பதற்கு ஐயமில்லை. அறிவு தெளிந்தவன் எந்த ஜீவனோபாய மார்க்கத்திலும் காலதேச வர்த்தமானங்களுக்கு ஏற்றபடி அறிந்து நடக்கவல்லவனாவான். திருத்தமாய்த் தொழில் செய்யும் விதம் எதுவும் அவன் புத்தியில் தோன்றும். எல்லா விஷயத்திலும் அவன் விசேஷ கெட்டித்தனமும் சமர்த்தும் கருமம் முடிக்கும் திறமையும் உடையவனாவான். சரீரமும் மனமும் ஒத்து உழைப்பவன் தன் வேலைகளைத் தெளிவாய்ப் பார்க்கவல்லவனாவான். அவனுடைய சாமர்த்தியம் விருத்தியாவது அப்போது அவனுக்கே நன்றாய்த் தெரியும். இதுவே மனிதர் மனத்திற் பிறக்கும் அறிவுகளெல்லாவற்றுள்ளும் மிகுந்த உல்லாசந்தரும் அறிவுபோலும். தன் முயற்சியின் வலிமை வரவர விருத்தியாகும். ஒருவனுக்குத் தன்மானம் இருக்கு மளவிற்கேற்றபடி அற்ப விஷயங்களிலுள்ள துராசைகளை விலக்க அவனுக்குத் திறமையுண்டாகும்.

ஆயினும் மேலெடுத்துக்கூறிய பல திருஷ்டாந்தங்களில் விளங்கியபடி தற்பயிற்சியால் மேன்மை கிடைக்காமலே யிருந்தாலும் இருக்கும். மனிதரில் பெரும்பாலார் எவ்வளவு சிறப்பும் நாகரிகமும் பெற்றிருந்தாலும், ஜீவனோபாயத்திற்கு வேண்டிய சாமானியத் தொழில் முயற்சி செய்துவராமல் தீராது. ஒரு ஊரார்க்காகட்டும் தேசத்தார்க்காகட்டும் மனம் எவ்வளவு பண்பட்டிருப்பினும் அவர்கள் தவறாமல் செய்ய வேண்டிய தினவேலையை ஒழித்திருக்க அவர்களாலாகாது. ஆனால் ஒன்று. உயர்ந்தோர் இழிந்தோர் ஆகிய யாவரும் சிறப்பித்து வியக்கத்தக்க உயர்ந்த அபிப்பிராயங்களுக்கேற்றபடி அந்த உழைப்பின் தரத்தையும் உயர்த்தலாம். எப்படியெனில் முற்காலத்திலும் தற்காலத்திலும் நூதன தத்துவங்களை நுணுக நினைந்தறியவல்ல பண்டிதர், ஒருவன் எத்தனைவறிஞனும் தணிந்தவனுமாயிருப்பினும், அவன் ஒதுங்கும் குடிசை எத்தனை அலங்கோலமாயிருப்பினும், அவனை வீடு தேடிப் போய்க் கண்டு அவனுடன் உட்காந்து அவ்வேளைக்குத் தோழமை கொண்டாடினாலும் கொண்டாடுவார். இவ்வாறே நலந்தெரிந்து நல்ல கிரந்தங்களை வாசிப்பதனால் உண்டாகும் கல்விப் பயிற்சியானது மிகுந்த மனவெழிச்சிக்கும் தன்னறிவு தன் முயற்சி இவைகளால் திருந்தி விருத்தியடைவதற்கும் ஏதுவாகி, நற்குணம் நன்னடக்கை இவைகளை மெத்தெனவே நன்றாய்ப் பழக்குவித்து, எப்பொழுதும் நற்பயனை விளைவிக்கும். வித்தையில் தம்மைத் தாம் பண்படுத்துவோர்க்குச் செல்வப் பொருள் சேராதிருப்பினும், உயர்ந்த அபிப்பிராயங்களோடு தோழமையுண்டாகும்.

9. அஹல்யாபாய்.

மொலாஹர்ராஜா மாளவதேசத்தைக் தனக்கு மானியமாகப் பெற்று, தக்ஷிணத்திலுள்ள அந்தத் தேசத்தின் முதல் அரசனாக கி. பி. 1769-ம் வரையில் வெகு சிறப்போடு ஆண்டு வந்தான். அவனுக்குக் காந்தி என்ற ஒரே குமாரன். தகப்பன் காலத்திலேயே அவன் ஜாட் என்னும் ஜாதியாரோடு சண்டைக்குப் போய் பாரத நகரத்தினருகே கும்பிமலையினடிவாரத்தில் இந்திரனால் கொலையுண்டான். அகல்யை குந்தியின் பாரியை; குழந்தையாயிருக்கும்பொழுதே அவளுக்கு பிராமணரிடத்திலும், சாஸ்திர விஷயத்திலும் அதிக சிரத்தையுண்டு. அவள் மிக்க மேன்மையாய் ராஜ்ய பாரம் செய்ததனால் அவள் சரித்திரம் எழுதப்பட்டிருக்கிறது.

அகல்யைக்கு ஒரு புத்திரனும் ஒரு புத்திரியும். புத்திரனுக்கு மாலி என்று பேர். பாட்டன் இறந்த பிறகு அவன் பட்டந்தரித்து, ஒன்பதே மாசம் ஆண்டு மறு உலகம்போனான். சரீர பலமும் மனத்திடனுமின்றி, சிங்காதனம் ஏறினது முதல் அவன் துர்நடத்தை உள்ளவனாயிருந்தான். இந்த துர்நடத்தையினாலே தன் தாயார் செய்த சத்விஷயங்களையும் அவ்ள் தயவு

செய்துவந்த பிராமணர்களேயும் வெறுத்தான். ஒருதரம் தேள்களை உள்ளே வைத்து, பிராமணர்களுக்கு வஸ்திரமும் பாதரக்ஷையும், பாம்பைப் புகவிட்டுத் தன் முத்திரை வைத்து ஒரு கிண்ணமும் அனுப்புவித்தான். பிராமணர்கள் ஆசையோடு திறந்தபோது, அந்த விஷஜந்துக்களால் கடிபட்டு மிகவும் சங்கடப்பட்டார்கள். அப்படி அவர்கள் சங்கடப்பட்டதில் மாலிக்கு மிகச் சந்தோஷமேயொழிய துக்கமில்லை. தன் பிள்ளையின் துர்நடத்தையைப் பார்த்துக் கண்ணீர்விட்டு இந்தப் புத்திரனைப் பெற்றேனேயென்று அகல்யை துக்கித்தாள். இதனுல் அகல்யை தன் பிள்ளையின் புத்தியை அவனுடைய இழிந்த தீரமற்ற நடத்தையினிமித்தம், மூலிகைகளினுல் கெடுத்தாளென்பது சிலருக்குச் சந்தேகம். ஆனுல் அப்படி சந்தேகிப்பதற்குக் கொஞ்சமும் நியாயமில்லை. மாலிக்குப் புத்திபேதப்பட்டது பின்வரும் காரணத்தினுல். ஒரு தட்டான்மேல் பெருங் குற்றம் சார்த்திக் கோபத்தினுல் மாலி அவனைக் கொலை செய்வித்தான். அந்தத் தட்டான்மேல் குற்றமேயில்லை ; அவன் நிர்தோஷனென்று பிறகு வெளிப்பட்டது. அதன் மேல் அவன் இருதயத்தில் துக்கம் ஜநித்து புத்திகுன்றிப் பித்தனுய்ப் பிதற்றி இறந்தான். இந்த மாலி கொலை செய்த தட்டானுக்கு தேவதாப்பிரசாதமுண்டென்பது அக்காலத்தில் எல்லாருக்கும் நன்ருய்த் தெரியும். தட்டானுக்குத் தண்டனை விதித்தபோது அவன், "நான் நிர்தோஷி, என்னை மரண தண்டனைக்கு விதிக்காதே, விதித்தால் அந்தப் பழியை உன்னிடத்தில் வாங்குவேன்" என்று. அரசன்முன்னே சொன்னுன். அப்படியே அந்தத் தட்டான் மேலுலகம்போய் மாலியின் சரீரத்தில் திரும்பப் புகுந்து வெளிப்பட்டானென்று ஒவ்வொருவரும் சொன்னுர்கள். அகல்யை அதை வாஸ்தவமென்று நம்பி அவன் படுக்கையண்டை தினம் உட்காந்து அழுது அந்தப் பேயைத் துரத்தும்படி தன்னுலானமட்டும் முயன்ருள். அவனைத் தெய்வமென்றுகூடப் பூசைசெய்து, "பிசாசே! என் பிள்ளையை விட்டு நீங்குவாயானுல் உனக்கு ஒரு கோவில்கட்டி, உன் உறவினருக்கும் மறக்காமல் ஏதாவது செய்கிறேன்" என்று வேண்டிக்கொண்டாள். இவ்வளவு செய்தும் அவள் மனம் நிறைவேருமல், அந்தப் பேய்க்குப் பூசைபோட்டபொழுது, "உன் மகன் எனக்கு மன்னிக்கத்தகாத குற்றம் செய்திருக்கிறுன் ; அவனை ஒரு நாளும் மன்னிக்கமாட்டேன், அவன் உயிரை வாங்கித்தான் போவேன்" என்று அவள் ஜபம்செய்ததைக் கேட்டு அசரீரிவாக்காகச் சொல்லிற்று. ஆகையினுல் மாலி மீள்வானென்ற நம்பிக்கையில்லை. அப்படி நம்பிக்கையில்லாதது அகல்யை செலுத்தின வேண்டுதலின் குறையினுலுமல்ல, அவளுக்கு அவனை எவ்விதமாயினும் மீட்கவேண்டுமென்னும் கவலையில்லாததனுலுமல்ல. அவன் பைத்தியம் குன்ருமலே 1766-ம் வருஷத்தில் இறந்தான்.

பிள்ளையிழந்த அரசி துக்கப்பட்டதைச் சொல்வது அவசியமன்று. ராஜ்யத்துக்கு உரிமையுள்ள புத்திரன் அவனெருவனே. அவள் புத்திரிக்கு வேறு ஜாதியில் விவாகம் செய்யப்பட்டதனுல் ஹிந்து சாஸ்திரப்படி அவள் சகோதரனுடைய ராஜ்யத்தை அடைய உரிமையற்றவள் ; ஆகையால் பிள்ளை இறந்ததும் சிங்காதனத்துக்கு ஒருவருமில்லாமல், தானே அரசியாய் ராஜ்ய விவகாரத்தில் யுக்திபுத்தியும் தைரியமும் உண்டாய், குடிகளின் நன்மையை நன்கறிந்து அரசு செலுத்தினுள். அவள் இறந்த பிறகுகூட அவள் பேர் அளவற்ற மதிப்புடன் கொண்டாடப்பட்டது.

அகல்யை துரைத்தன விஷயத்தைத் தானே வகித்துக்கொண்டது சிரேஷ்ட குருவாகிய கங்காதர ஜோஷ்பந்தோ என்பவனுக்கு இஷ்டமில்லை. அகல்யைக்கு இதர ஜனங்கள் புத்தியைக் கேட்டு நடப்பதில் இஷ்டமில்லை. ஆகையால் அவள் ராஜ்யத்தில் தனக்கு சொற்ப அதிகாரந்தான் கிடைக்குமென்று அவனுக்கு நன்ருய்த் தெரியும். அதற்காக அவள் ராஜ்யபட்டம் தரிக்காதிருக்கும் வண்ணம், அவள் பிதாக்களுக்குத் தர்ப்பணம் செய்ய ஒருவருமில்லாமல் ராஜ்யவம்சம் அற்றுப்போகும் என்று, ஒரு புத்திரனை சுவீகரித்துக் கொள்ள புத்தி சொன்னுன். அப்படியானுல் அந்தப் புத்திரனுக்குத் தான் ஆசாரியனுய்ச் சர்வாதிகாரத்தையும் தானே வகித்து, அகல்யைக்கு சீவனும்சம் கொடுத்துப் பரதேசம்போக்கலாம், மகா

ராஷ்டிர தேசத்து அரசனுகிய ராகோபா என்பவனேயும் லஞ்சம் கொடுத்துத் தன் வசமாக்கலாம் என்று நினைத்தான். அப்படியே ராகோபாவும் அகல்யைக்கு சுவீகாரம் செய்து கொள்ளும்படி சொல்லச் சம்மதித்தான். அது கண்டு கங்காதரன் அவளுக்கு இஷ்டமிருந்தாலும் இல்லாவிட்டாலும் எவ்விதமும் செய்துதானே தீரவேண்டுமென்று தனக்குள்ளே நினைத்து சந்தோஷப்பட்டான்.

ஆனுல் கங்காதரனுடைய சூதுகளுக்கு அகல்யை பயந்தவளல்ல. "நான் ராஜனுடைய பத்தினியாயிருந்தேன், ராஜனுடைய மாதாவாயுமிருந்தேன்; என் பிள்ளை இறந்ததோடு மலாஹர் வம்சம் அற்றது. இப்பொழுது ஒரு அன்னியனைக் குடும்பத்தில்புகவைத்து வம்சவிருத்தி செய்வதில் பயனென்ன? ஆகையால் அது என் இஷ்டம், உன் புத்தியை நான் கேட்கிறதில்லை" என்ருள். ராகோபாவும் பெருந்தன்மை உள்ளவனுகையால், துராசை பிடித்து குரு ஓங்கக்கூடாதென்று விரும்பி, அவனைத் தகுந்தபடி கடிந்து கொண்டான்.

அகல்யை இவ்வாறு சொல்லுமுன் தன் ஜனங்களுடைய அபிப்பிராயத்தையும், மாளவ தேசத்தில் அப்பொழுது இருந்த மகாராஷ்டிர பிரபுக்களுடைய அபிப்பிராயத்தையும் கேட்டுச் சொன்னுளென்று நம்பப்படுகிறது. அது எப்படியாஞலும், அவளுடைய தைரியத்தைக் கண்டு புகழ வேண்டும். ஏனெனில் அதனுலே ராஜ்யம் பிழைத்தது. ராகோபா சிரேஷ்ட குருவைக் கண்டித்தும் அகல்யை வார்த்தையில் கோபங்கொண்டு, பலாத்காரமாய்த் தேசத்திலிருந்து அவளைத் துரத்த யுத்தப் பிரயத்தனம் செய்தான். அகல்யை அதைக் கேட்டு, ஸ்திரீகளிடத்தில் எதுக்குச் சச்சரவு; அதனுலே உன் கல்மனம் வெளிப்படுமேயன்றி, ஆண்தன்மை வெளிப்படாது என்று சொல்லியனுப்பினுள். சொல்லியனுப்பிச் சும்மாவிராமல் தானும் யுத்த முயற்சி செய்து, சேனுதிகாரியாகிய ஹோல்கார் தன் பக்கமிருந்ததை அறிந்து, யுத்தமாகப்போகிறதென்று களிப்படைந்தாள். தானே முதலில் யுத்தஞ் செய்யத் தீர்மானித்து, தன்னுனுடைய யானை, வில், அம்பருத்தூணி இவைகளை ஆயத்தப்படுத்தி, தானும் சித்தமாயிருந்தாள். ராகோபாவுக்கு இது சமாதானப்படவில்லை; ஆனுல் அவன் ஜனங்கள் அவனுடைய நன்றியற்ற முயற்சியை முகங்கொடாமல் எதிர்த்ததுமல்லாமல், சிந்தியாவும் போஸ்லாவும் அவனுக்கு உதவிசெய்வதில்லையென்ருர்கள். இதுவுந்தவிர அகல்யை மகாராஷ்டிர அரசனுனமாதவராவுக்கு ஒரு கடிதம் எழுதினதன்மேல் அதற்குப் பதிலாய் அந்த அரசன் ராகோபாவுக்கு, அகல்யையோடு சண்டை செய்ய வேண்டாமென்று கடிதமெழுதினுன். இந்தக் கட்டளைக்கு ராகோபா கீழ்ப்படிய வேண்டியிருந்தால், யுத்தம் நடந்தேறவில்லை. இந்தச் சமயத்தில் காண்பித்த அகல்யையின் தைரியத்தால் அவள் துரைத்தனம் ஸ்திரப்பட்டு நிலைநின்றது.

இந்தச் சங்கதிகளுக்குப் பிறகு, தேக்காஜிஹோல்கார் என்ற ராணியின் உறவினனுன ஒரு மஹான் சைனியாதிபதியாக நியமிக்கப்பட்டு, நல்லவனுய் யுத்தத்தில் சாதுரியமுள்ளவன் எனப் பேரும் பெற்றுவந்தான். ஹோல்காருக்கு சைனியாதிபத்தியமானதும் ராகோபா புனுவுக்குப் போய்விட்டான்.

பிற்பாடு அகல்யை கங்காதரன் மேல் தயவுகூர்ந்து அவனைப் பிரதானமந்திரியாக நியமித்தாள். இவனுக்கும் ஹோல்காருக்கும் சினேகபந்தம் உண்டாக்குவது சாத்தியமில்லாதிருந்தும், ராஜ்யபாரமுழுதும் அவர்கள் இருவருடைய பொறுப்பாயிருந்தது. ஆனுல் அவர்கள் செய்ய வேண்டிய வேலையை அகல்யை வெகு சாமர்த்தியமாய்ப் பிரித்து, அவள் ஆண்ட 1765-ம்ஞு முதல் 1795-ம்ஞு வரைக்குமுள்ள முப்பது வருஷ காலமும் அவர்களுக்குள்ளே ஒரு சச்சரவும் நடக்கவொட்டாமல் பார்த்து வந்தாள். முதலில் சேனுதிபதியாயிருந்த ஹோல்கார் அந்த உத்தியோகத்தில் காண்பித்த திறமையால் இன்னும் பெரிய ஸ்திதிக்குக் கிரமமாய் உயர்த்தப்பட்டான். எப்பொழுதும் அகல்யையைத் தாய்போல் நினைத்து மதித்தான். ராஜதானியில் ஹோல்கார் வெகுகாலம் வசித்ததில்லை; பன்

னிரண்டுவருஷம் ஷத்திப்பூருக்குத் தென் தேசங்களில் வசித்து அவன் அவர் களிடத்தில் கப்பம் வாங்கிவர, அகல்யை அந்த நகரத்தின் வட்டமாகாணங் களில் ஆண்டுவந்தாள். இதுவன்றி ஹிந்துஸ்தானுக்கு ஹோல்கார் போன பொழுது ஹிந்துக்களிடத்தில் ராஜகாணிக்கை வாங்கினதுமல்லாமல், ராஜ புத்திரஸ்தானத்திலும் இன்னும் தான் ஜயித்த மற்றத் தேச ஜனங்களிடத்தி லும் அம்மாதிரியே காணிக்கை வாங்கி வந்தான். பிறகு மாளவம், நீமார் இன்னும் எல்லா தக்ஷிண தேசமும் அவளுக்குக் கப்பம் கட்டிவந்தன.

ஹோல்கார் அதிகாரத்தில் அகல்யைக்கு இரண்டுகோடி ரூபாய் வரும் படி வந்ததுமன்றி, சொந்தச் செலவு மாத்திரம் 200 கோடி ரூபாய் பிடித் தது. இந்தத் தொகையை யாதொரு கணக்கும் வைக்காமல் மனம்வந்தபடி செலவழித்தாள். ஆனால் ராஜ்ய விஷயமான செலவுக்கு மூடன்கூட அறியும்படியாகத் தெளிவாயும் லட்சணமாயும் கணக்கு வைத்திருந்தாள். ஹோல்கார் சமீபத்திலிருந்தால் ராஜ்ய விஷயத்தில் அவனுக்கு உதவி செய்து வருவாள்; அவன் தூரதேசம் போயிருந்த பட்சத்தில் அவன் அபிப்பிராயத்தை எழுதிக் கேட்டு நடப்பாள்; அவனுடைய சம்மதமின்றி யாதொரு விசேஷமான காரியமும் செய்யமாட்டாள். அகல்யையின் கீர்த்தி எங்கும் பரவ, ஹிந்து தேசத்து எல்லா அரசர்களும் அவள் தர்பாருக்குத் தூது அனுப்பினார்கள். அகல்யையின் தூதர்களும் ஐதராபாக்கம், சீரங் கப்பட்டணம், நாகப்பூர், லக்ஷுமணபுரி, கல்கத்தா, இந்நகரங்களிலிருந் தார்கள். இதுவன்றி, இன்னும் சொல்ப தர்பார்களுக்குச் சொல்ப காரியஸ் தர்களை அனுப்பினாள்.

அகல்யை தர்பாரில் பகிரங்கமாய்க் கொலுவிருந்தாளென்றாலும், அதற்கு மகாராஷ்டிரர்களாவது, பிராமணர்களாவது அல்லது வேறே எந்தக் கனவா னாவது ஆக்ஷேபனை சொன்னதில்லை. அவள் துரைத்தனத்திற்கு அதிபதி யானதும் அளவற்ற அதிகாரம்பெற்று, கிராமத்திலிருக்கும் வேலைக்காரர் கள், மிராசுதாரர்கள், எல்லாரும் மெய்யாகச் சுகப்பட்டு அவரவர்களுடைய உரிமைகளுக்குச் சேதமன்றி வாழும்படி அந்த அதிகாரத்தை இயற்றிவந் தாள். எவனாவது முறையிடுவானானால், தன் முதல் மந்திரியைவிட்டு விசா ரிக்கச் சொல்வதுபோல், தானே முகதாவில் விசாரிப்பாள். அவள் செய்யும் நியாயத் தீர்ப்பில் பட்சபாதமேயிராது. எவன் நியாயஸ்தலத்தில் எந்தப் பிரியாது கொண்டு வந்தாலும் அதைக் கிரமமாய் விசாரித்து, ஒரு சொல்ப விஷயங்கூடத் தவறிப்போகாமல் நீதி செலுத்தி வந்தாள்.

இந்தச் சரித்திரம் எழுதியவர், ஹோல்காருடைய பந்துக்களிடத்தில் அகல்யையின் தீர்ப்புக்காரர் எப்பொழுதும் நீதிக்கிரமமாயிருந்தனரோ வென்று தாம் விசாரித்ததாகவும், அவள் தேசத்திலும் மற்றத் தேசங்களி லும் அவளைப்பற்றிப் புகழ்ச்சி சொல்லிக் கொண்டார்களேயொழிய வேறல்ல வென்றும் சொல்லுகிறார். அவள் மரணபரியந்தம் முப்பது வருஷ காலமும் சரீரம் மனது இரண்டுக்கும் ஓய்வில்லாமல் ராஜ கிருத்தியங்களை அதிக கவனமாய்ச் செய்து வந்தாள்.

ஜபதபங்கள், பகவத் கைங்கரியம், பூஜை தர்மம் இவைகளில் அவ ளுக்கு அதிக அவகாசம் பிடித்ததுமன்றி, அநேக லௌகீக விஷயங் களையும் அவள் கவனிக்க வேண்டிதாயிருந்தது. அவள் என்ன செய்தாலும் அந்தக்கரண சுத்தியாகச் செய்வாள். "ஜகத்கர்த்தாவாகிய மகேச்வரன் நம் இருதயங்களை அறிவார்" என்று அடிக்கடி சொல்லுவாள். ஒரு குற்றவாளியை மரண தண்டனைக்கு விதிக்க நேரிடும்போதுகூட "நம் சரீரம் அநிதயம், கடவுளுடைய சிருஷ்டியை யழிக்க நாம் வல் லவரல்ல" என்று சொல்வாள்.

அகல்யை சூரியோதயத்துக்கு ஒரு முகூர்த்தம் முன்னாலெழுந்து, காலை வந்தனம் செய்து, கொஞ்ச நேரம் சாஸ்திரம் ஓதுவாள். பிறகு தன் கையால் பிராமணர்களுக்கு அன்னம் போட்டுத் தானும் சாப்பிடுவாள். சாஸ்திரங்களில் இறைச்சியும் மீனும் தள்ளி இராவிடினும், அவள் அவற் றைத்தின்றதில்லை. சாப்பிடுகையில் முணுமுணுவென்று ஏதோ மந்திரஞ்

TB
O31(1) N34

சொல்லுவாள். பிறகு சற்று நேரம் பொறுத்து ராஜ உடுப்புப் போட்டு, சாயந்தரம் வரையில் கச்சேரி செய்வாள். பின்பு கொஞ்சம் பலகாரம் செய்து சாயந்தரம் 9 மணி முதல் 11 மணி வரையில் ராஜ்ய விஷயங்களில் கவனமாயிருந்து படுக்கைக்குப் போவாள். அவள் லௌகிக வைதீக விஷயங்களை இம்மாதிரியாகச் செய்து வந்தாள் ; சங்கடம் அல்லது வருத்தம் வந்த காலந் தவிர மற்றப்பொழுது அவள் இம்முறை தவறினதேயில்லை.

அகல்யையின் ஆளுகை முழுதும் சமாதானமாகவே யிருந்தது. இதர அரசர்களெல்லாம் அவளுக்குச் சிநேகம் ஆகையால், அவள் தேசத்தை அவர்கள் படையெடுத்ததுமில்லை. அதை விரும்பினதாகத் தோன்றவுமில்லை. குடிகளெல்லாம் அவள் ஆளுகையின் கீழ் சுயேச்சையாய்ப் பராதீனமின்றியிருந்தார்கள். அவர்கள் நடந்து கொண்டது போல இவளும் அவர்களிடத்தில் நடந்து கொண்டு துஷ்ட நிக்கிரமும் சிஷ்டபரிபாலனமும் பண்ணிவந்தாள். அடிக்கடி புதிய மந்திரி நியமிப்பதனுல் தீங்கு விளையுமென்று தெரிந்து அப்படிச் செய்ததேயில்லை. கோவிந்தபந்து என்ற ஒரு பேர்பெற்ற பிராமணன் இதற்கு உதாரணமாய் அவள் ஆளுகையின் முடிவுவரையில் மந்திரியாயிருந்தான்.

இந்தூர் நகரம் முற்காலத்தில் ஒரு குக்கிராமமாயிருந்தது. ஆனுல் நாளடைவிலே அகல்யை அதை ஐசுவரியமும் சிறப்பும் பொருந்தின நகரமாக்கி அதில் மிக்க அன்பு வைத்திருந்தாள். அதற்கு அநேக திருஷ்டாந்தமிருக்கிறது. அந்த நகரத்தில் தனவானுன ஒரு வர்த்தகன் பிள்ளையில்லாமல் இறந்துபோனுன். சில துஷ்டருடைய புத்தியைக் கேட்டு ஹோல்கார் தன் போர்ச்சேவகர்களோடு அவன் வீட்டில் புகுந்து அவன் சொத்தைப் பலாத்காரமாய்க் கட்டிக் கொண்டான். பிறகு அந்த வர்த்தகன் மனைவி அகல்யையினிடத்தில் போய் முறையிட்டாள். அகல்யையோ நடந்ததையெல்லாம் கேட்டு அவள் சொத்தை அவளுக்குத் திருப்பிக்கொடுத்து யாதொரு தீங்கும் செய்யாதபடி ஆக்ஞை செய்தாள். இவ்வாறு ஜனங்களிடத்தில் அன்புள்ளவளான அவள் பேர் அந்த நகரத்தில் நீடித்து அவர்கள் இருதயத்தில் குடி கொண்டிருந்தது.

சில தேசங்களில் யர்ராவது மிகச் சிறப்புற்று ஜீவித்திருந்தால் அரசன் நிச்சயமாய் அவனிடத்தில் முன்னிலும் விசேஷமான கப்பம் வாங்கி அவன் ஐசுவரியத்தினுல் எப்படியும் லாபமடைவான் ; அகல்யையோ அப்படியல்ல ; குடிகளுடைய தனத்தினுல் அவள் சிறிதும் லாபமடைய வேண்டுமென்று நினைத்தவளல்ல. ஒரு வர்த்தகன், சாவகாரி அல்லது கிருஷிகன் தனவானுனுல் அவர்கள் அதிர்ஷ்டத்தைப் பார்த்துச் சந்தோஷமடைவாளேயொழிய பலாத்காரமாய் அல்லது மோசத்தினுல் அதை அபகரிக்கவேண்டுமென்று ஒருநாளும் எண்ணமாட்டாள். இதற்கு ஒரு திருஷ்டாந்தம். 1791-வருஷத்தில் ஒரு தனிகனுன வணிகன் ஸார்கம்தாஸ் என்பவன் பிள்ளையின்றி இறந்தான். அங்கிருக்கும் வரிதண்டுவோன் அவன் மனைவியைப் பயமுறுத்தி, "எனக்கு மூன்று லட்சம் ரூபாய் இனும் கொடாமற்போனுல் உன் சொத்தெல்லாம் சர்க்காரில் ஜப்திசெய்விப்பேன்" என்ருன். அவளுடைய இஷ்டர்கள் சுவீகாரம் செய்து கொள்ளும்படி சொன்னுர்கள். செய்துகொண்டால் சர்க்காருக்கு இவள் சொத்தை ஜப்தி செய்ய அதிகாரமில்லை. ஆனுல் இந்த வரிதண்டுவோன் அதையும் தடுத்தான். அந்தக் கைம்பெண்ணே ஒரு பிள்ளையை சுவீகாரம் செய்யத் தீர்மானித்து, அந்தப் பிள்ளையை அழைத்துக் கொண்டு அகல்யையண்டை மைசூருக்குப் போனுள். ராஜாத்தி தன் வரி வாங்கும் உத்தியோகஸ்தன் இழிவாய் நடந்து கொண்ட கதையைக் கேட்டு அவனைத் தகுந்தபடி தண்டித்தாள். அந்தப் பிள்ளையை சுவீகாரம் செய்துகொள்ள அனுமதி கொடுத்து, அதை எடுத்து மடியில் வைத்து முத்தமிட்டு, ஊர்போய்ச்சேர செலவு கொடுத்தாள். இந்த அரசியின் ஆசையற்ற சுபாவத்துக்கு இன்னம் ஒரு திருஷ்டாந்தம் உண்டு. கார் என்னும் கிராமத்தில் தப்பிதாஸ் பார்நாஸ்தாஸ் என்றிரண்டு சகோதரர்கள் ஏறக்குறைய ஒரே காலத்தில் இறந்துபோனுர்கள். இவர்களுக்கு விசேஷ சொத்துக்களிருந்தும் பிள்ளையில்லை. அதன் மேல் தப்பிதாஸ் என்பவன்

மனைவி மைசூருக்கு அரசியினிடம் தன்னுடைய புருஷன், மைத்துனர் இவர்களுடைய சொத்துக்களையெல்லாம் கொடுக்கப்போனாள். அகல்யையோ அதை வாங்காமல் அந்தச் சொத்தை இறந்துபோனவர்கள் பேர் நிற்கும்படி சில நல்ல விஷயங்களில் செலவழியென்று புத்தி சொன்னாள். அந்தப்படியே அவள் கார் என்னும் கிராமத்தில் நதிக்கரையில் ஒரு கோவிலும் படிக்கட்டும் கட்டி வைத்தாள்.

பீல் மலையிலிருந்த திருடர்களையும் இன்னும் மற்றக் காட்டு ஜாதிகளையும் அகல்யை அடக்கினாள். முதலில் அவர்கள் முரட்டுத்தனம்பண்ணியும், அவர்களுக்குள்ளே பேர் போனவர்களைப் பிடித்துத் தூக்கினதும் மற்றவர்கள் உடனே அடங்கிப்போனார்கள். அகல்யைக்குப் பொதுவாய் மரண தண்டனை விதிப்பதில் இஷ்டமில்லை; பெருந்தண்டனைகளால் குற்றம் அடங்கிப்போமென்ற நம்பிக்கையே அவளுக்கு இல்லை. கலகமில்லாதிருக்கும்படி இந்த மலைகளில் அங்கங்கே காவலாளிகளை நியமித்து அங்கே நடந்ததையெல்லாம் தெரிந்து கொண்டாள். இந்த ஏழைத் திருடர்களுக்கு ஏதேனும் ஜீவனம் அமையும்படியாய், அந்தத் தேசத்தில் யார் வியாபாரச் சரக்குக் கொண்டுபோனாலும், ஒரு பைசா வரி கொடுக்கும்படி ஏற்படுத்தினாள். இந்தப் பீல்தேசத்தாருடைய வரிக்கு கௌரி என்று பெயர். இந்த வரிக்கு எதிராய் மார்க்கத்தில் திருட்டுப் போகாமல் பார்த்துக் கொள்வது அவர்கள் கடமை. அவர்கள் எல்லையில் ஏதாவது கொள்ளை நடந்தால் அவர்களே அதற்குப் பாத்தியம்; திருட்டுப்போன சொத்தும் திருப்பிக் கொடுக்க வேண்டும்.

அகல்யைக்கு தூரதேசத்து அரசர்களோடு கடிதப்போக்கு வரவு உண்டு. இது பிராமணர்கள் மூலமாய் நடக்கும்; ஏனென்றால் அவர்களெல்லாம் அவளுடைய சத்கிருத்தியங்களில் உதவி செய்யப் பிரியமுள்ளவர்களாயிருந்தார்கள். முன் சொல்லியபடி அகல்யை தன் ஐசுவரியத்தை அநேகமாய்த் தெய்வ விஷயத்திலாவது ஜனசௌக்கியத்தின் பொருட்டாவது செலவழிப்பாள். முதலில் காயகை என்னும் கோட்டைகட்டி, ஜாம் என்னும் கோட்டைக்கு பின்ஜோ என்னும் மலையின் வழியாய் ஒரு பாதை போட்டாள். அந்தப் பாதை ஏறக்குறைய ஒரே ஒழுங்காயிருந்தபடியால் செலவு அதிகமாய்ப் பிடித்தது. இதுவன்றி வழிப்போக்கர்கள் தங்குவதற்கு ஒரு சத்திரம் கட்டி ஒரு கிணறும் வெட்டினாள். அந்தக் கிணறு இன்னும் நல்ல ஸ்திதியிலிருக்கிறது. இம்மாதிரி அவள் செய்தது தன் தேசத்தில் மாத்திரம் அல்ல; வடக்கே ஹிமபருவதம் முதல் தெற்கே ஸேதுவரையிலும், மேற்கே திராபிரோ முதல் கிழக்கேயிருக்கும் அழகான சம நிலம்வரையிலும், எங்கெங்கே ஹிந்துக்களுக்கு யாத்திரை ஸ்தலமிருக்கிறதோ அங்கங்கெல்லாம் ஒரு கோவில் கட்டினாள். அவள் கட்டுவித்த கோயில்களில் மிகச் சிறந்தது கயையிலிருக்கும் விஷ்ணு ஆலயம். அது வெகு நேர்த்தியாய் மழமழப்பான கற்களால் கட்டப்பட்ட ஆச்சரியமான கட்டடம். உள்ளே நேர்த்தியான அலங்காரங்களுடன் வளைவுகள் கண்ணுக்கு வளைவு என்று தெரியாதவிதமாய் அவ்வளவு நேர்த்தியாக இயற்றப்பட்டிருக்கின்றன. இன்னம் ஒரு கோவில்கூட இருந்தது. அதிலே அகல்யை ராம விக்கிரகமும் சீதா விக்கிரகமும் வைத்துப் பூஜைபண்ணுவது வழக்கம்.

இந்தக் கோவில்கள் கட்டுவதற்குச் செலவழிந்த திரவியம் தவிர அவைகளின் வருஷாந்தரச் செலவுக்காகப் பணம், சாமான் முதலியவெல்லாம் கொடுத்தனுப்புவித்தாள். தென் தேசத்துக் கோயில்களில் திருமஞ்சனத்துக்கு கங்காஜலமே வேண்டுமென்று வெகு வருத்தப்பட்டு அதை வரவழைத்துக் கொடுத்து வந்தாள். அகல்யைக்கு ஹிந்து மதத்தில் அதிக பக்தியானதன் பொருட்டு தேவதைகளுக்கு அவளிட்ட பூஜையில் திர்ப்தி உண்டாகி ஜனங்களுக்கும் தேசத்துக்கும் க்ஷேமம் உண்டாயிற்று. இது தவிர விசேஷ தினங்களில் அநேகம் ஏழைகளுக்குச் சாப்பாடுபோட்டு, கோடை நாளில் வழிப்போக்கர்களுக்கு தாகசாந்தியாய்த் தண்ணீர்ப்பந்தல்கள் வைத்தாள். குளிர் நாளில் நோயாளிகள், குருடர், தரித்திரர், முதலிய

வர்களுக்கு அன்னவஸ்திரமும் கொடுத்துவந்தாள். மனுஷியர்களுக்குமாத் திரமல்ல, மிருகங்களுக்கும் பட்சிகளுக்கும் அப்படியே செய்தாள். அவை களுக்குக் கிரமமாய்த் தீனிபோடும்படி விசாரிக்க உத்தியோகஸ்தர்களை நிய மித்து, கோடைக் காலத்தில் எருதுகளை நுகத்தடியில் கட்டி உழுகையில் அப் போதப்போது அவிழ்த்துவிட்டுத் தண்ணீர் காட்டுவிப்பாள். குடியானவர் கள் தேறின பயிரைக் குருவிகள் மேயாமல் வெருட்டிவிடுவார்கள் ; அதனால் அவைகள் சுற்றிச்சுற்றிப் பறந்துவந்து போகுமிடம் தெரியாமல் சங்கடப்ப டும். அதற்காக அகல்யை சில பயிரை விலைக்கு வாங்கி அங்கே குருவிக கள் தம் இஷ்டப்படி மேயும்படி ஏற்பாடு செய்தாள்.

இவ்வாறு பட்சிகளுக்கும் மிருகங்களுக்கும் பிராமணர்களுக்கும் அகல் யை செய்த உபகாரத்தையும் அவள் கட்டுவித்த கோவில்களையும் கண்டு அவள் மதம் தப்பென்று ஒருவேளை சிலர் நகைக்கலாம். ஆனால் அப்படி செலவழித்ததனால் அவள் தேசம் வளம்பெற்று ஜனங்களும் சுகமடைந்தார் கள். அவளுக்கும் கீர்த்தி உண்டாகி, சிப்பாய், குண்டு, மருந்து இவைகளி னால் எவ்வளவு நன்மை உண்டாகுமோ அதைவிட அதிகமான நன்மை உண் டாயிற்று. தன் மதத்தில் அவளுக்குப் பூர்ண விசுவாசமிருந்ததென்பதற் குத் தெளிவான ருசுவுண்டு. கேவலம் லௌகீகத்தையேபற்றி இருந்திருப் பாளானால் அவள் ராஜ்யம் அவ்வளவு சிறப்புப்பெற்றிராது. எல்லாவிடத்தி லும் அவளுக்கு மேன்மை உண்டாயிற்று ; தென்தேசத்து நபாபுகள், திப்பு சுல்தான், டில்லி சக்கிரவர்த்தி இவர்களுக்கிருந்த கௌரவம் அவ ளுக்கு மிருந்தது.

அகல்யை ஜீவித்திருந்தகாலத்தில் அநேககாரணத்தால் அவளுக்குத் துக் கம் சம்பவித்தது. தன் பிள்ளை இறக்கு முன்னம் தன் பெண் முக்தாவை ஜோஸ்பந்து என்னும் ராஜகுமாரனுக்குக் கொடுத்திருந்தாள். வெகு சமர்த் துள்ள ஒரு பிள்ளை இருந்ததென்றாலும் அது சிறுவயதிலேயே இறந்துபோய் விட்டது. அது இறந்து ஒரு வருஷத்துக்கெல்லாம், ஜோஸ்பந்துவும் இறந்துபோனான். முக்தா தன் கணவனோடு உடன்கட்டையேறி உயிர்விட வேண்டுமென்றாள். அகல்யைக்கு அது இஷ்டமில்லை ; அதைக் கேட்டு முக்தா, " ஸ்திரீகளுக்குப் புத்திரசுகமே சுகம் " அது எனக்கு இனி மேல் இல்லை. என்னிளங் கணவன் போனபிறகு எனக்கு இந்தப் பூமியில் என்ன சுகம், நீ என் தாய்தான், ஆயினும் காலஞ் சென்றவள், இங்கே செய்யும் தூயவினையை விட்டுப்போக உனக்கும் காலமாயிற்று. நீயும் போனபிறகு என் துக்கத்தையும் பிராணனையும் எப்படி சகிப் பேன் ; எனக்கு இறப்பில் துயரமில்லை. இறந்துபோனால் பிறகு துக்கமு மில்லை. ஆகையால் அதற்கு இப்பொழுதுதான் காலம், கணவனோடு போகி றேன். அது சாஸ்திர சம்மதமே, நீ தடுக்கக்கூடாது " என்று சொன்னாள். அகல்யை தன் புத்திரியின் பிடிவாதத்தையும் துக்கத்தையும் பார்த்து அவள் உடன்கட்டையேறச் சம்மதித்து, நர்மதாதீரத்துக்கு நடந்துபோய், சிதை யண்டை நிமிர்ந்து நின்றாள். முக்தா கட்டையேறி நெருப்புப்போட்ட தும் அகல்யை மெய்மறந்து ஒன்றும் தெரியாமல் தன் கையைக் கடித் துக் கொண்டாள். மகள் உடன்கட்டை ஏறி இறந்ததும், அவள் ஆற்றங் கரையிலிருந்து அரண்மனைக்கு வந்து துக்கவசமாய் மூன்றுநாள் சாப் பிடவுமில்லை, ஒருவரோடு பேசவுமில்லை. பிறகு கொஞ்சம் துக்கந் தணிந் ததும் தன் புத்திரியின் பேரால் ஒரு கோயில் கட்டுவித்தாள். அந்தக் கோவிலின் வேலைப்பாடுபோல் அவ்வளவு திறமானது எங்கும் இல்லை. இன்னும் அது மைசூரிலிருக்கிறது. 1795-ம் வருஷத்தில் 60-வயதில் அகல்யை காலஞ் சென்றாள். அவள் விரதத்தினாலும், தபசுகளினாலும், கவலைகளினா லும் சடுதியாய் இறந்தாளென்று சொல்லுகிறார்கள். அது எப்படியிருந்தா லும்தேசமுழுவதும் துக்கத்தில் முழுகி, அவள் சிநேகிதர், சிநேகிதரல்லா தவர், அந்நிய தேசத்தார் சகலருக்கும் அத்தியந்தம் துயரத்துக்குக் காரண மாயிற்று அவள் மரணம்.

அகல்யை அதிக நெட்டையுமில்லாமல் குட்டையுமில்லாமல் நடுத்தர மாய்க் கொஞ்சம் ஒல்லியாயிருப்பாள். அவ்வளவு அழகில்லையானாலும் அவள் முகத்தில் களையும் பிரகாசமும் இருந்தது. சிந்துபூபதியின் மனைவி யாகிய பேர்பெற்ற ரூபவதி அநந்தோ என்ற மகாராணி அகல்யையின்

கீர்த்தியைக் கேட்டு அவள் எப்படிப்பட்டவளென்று பார்த்தறியும்படி தூதர்களை அனுப்புவித்தாள். அவர்கள் திரும்பிப்போய் அகல்யை அழகியல்ல, ஆனால் அவள் முகம்மட்டும் கந்தர்வ ஸ்திரீபோலும் நட்சத்திரம்போலும் பிரகாசிக்கின்றது என்று தங்கள் எஜமானியினிடத்தில் சொன்னார்கள். "அகத்தினழகு முகத்தில் தெரியும்" என்கிறபடி, அவள் முகத்தில் அவள் இருதயத்தின் அழகு பிரதிபிம்பித்திருந்தது ; இறந்தபொழுதுகூட அம்முகக்களை மாறவில்லை. எப்பொழுதும் மலர்ந்த முகமும் குளிர்ந்த குணமும் உள்ளவளாயிருந்தாள். ஆனால் அவளுக்கு வாஸ்தவமாய்க் கோபமுண்டாகும்படியாய் ஏதேனும் சம்பவித்தால் அவளுடைய கிட்டின சிநேகிதன் பணிவிடைக்காரன் இவர்கள்கூடக் கிட்ட வரத்துணியார்கள்.

ஹிந்து சீமாட்டிகளுக்குள்ள சிறந்த குணங்களெல்லாம் அவளிடத்தில் விசேஷமாயிருந்தன. அநாதியான தெய்வபுராணங்களுங்கூட அவளுக்கு வாசிக்கத் தெரியும்; அதில் அவளுக்கு வெகு பிரியம். கற்றோரிடத்தில் மரியாதைவைத்து சம்மானங்களினாலே பண்டிதர், பிராமணர் இவர்களுக்குக் கல்விகற்பதில் அதிக ஆசை உண்டாகச் செய்தாள். ராஜ்ய விஷயங்களில் அவள் அதிக சாமர்த்தியமுள்ளவள் ; எப்படிப்பட்ட வருத்தமானவிஷயமானாலும் தெரிந்து கொள்வாள். அவளுடைய நியாயத் தீர்ப்பு தெளிவாயும் பட்சபாதமின்றியுமிருக்கும். கணவன் காலஞ்சென்ற பிறகு அவள் வெள்ளை உடுப்பே உடுத்துவாள், கழுத்தில் ஒரு தங்கச்சரடுதவிர வேறு நகை இட்டதில்லை ; அதிக உடுப்பும் தரித்ததில்லை ; மையிடுகிறதுமில்லை. இச்சகவார்த்தைகளை வெறுப்பாள். அதற்கு ஒரு திருஷ்டாந்தம் : ஒரு பிராமணர் அவள் முகக்களையை ஸ்துதி செய்து ஒரு புஸ்தகம் எழுதி அதை அவளண்டை வாசிக்க வந்தார். அவள் அந்தத் தகாத ஸ்துதியைக் கேட்டு அந்தப் புஸ்தகத்தை கிரகித்து ஆற்றில் போடச் சொன்னாள் ; பிறகு அந்தப் புஸ்தகத்தைப்பற்றி ஒருவருக்கும் ஒன்றும் தெரியாது.

அந்தச் சரித்திரம் வெகுவாய் விசாரித்து எழுதினது ; வீண்ஸ்துதி என்று சொல்லக்கூடாது. பொதுவாய் ஸ்திரீகளுக்கு கர்வமுண்டு ; அகல்யைக்கு அது சிறிதும் கிடையாது. வெகுபேர் தங்கள் அபிப்பிராயத்திலும் மனநிதானத்திலும் நிலைவுற்றுப் பிறருடைய அபிப்பிராயம் மன நிதானம் இவைகளை வெறுத்தலுண்டு. அகல்யை அப்படிச் செய்யாமல் அவைகளில் விசேஷ கவனம் வைப்பாள்.

சுவதந்திரராணியாயிருந்தும் தன் ஜனசௌக்கியார்த்தமாய் தன் சொந்த விருப்பங்களை மறுத்தாளென்றால் அதைவிட அவளுக்குப் பெருமை மற்றென்ன வேண்டும் ? அவளுடைய குணாதிசயங்களை இன்னும் புகழ்ந்து அவளைத் தெய்வம் என்றும் நினைக்கிறார்கள். அவள் காலத்திலிருந்த மற்ற அதிகாரிகளோடு ஒப்பிட்டால் அவள் குணம் அதிகமாய் ஒளிவிட்டுப் பிரகாசிக்கும். இதுவன்றிப் பிற்காலத்தில் மகேசன் அவரவர்கள் கருமத்தின்படி சிக்ஷை விதிக்கும்பொழுது, மனப்பூர்வமாய் நன்மையை விருத்திபண்ணித் தீமையை அடக்கின ஜனங்களுக்குள் அகல்யையே முதன்மையாக மதிக்கப்படுவாள் என்பதற்குச் சந்தேகமில்லை.

செய்யுட் குறிப்புரை.

தேவாரம்.

தே - தெய்வம். வாரம் - தெய்வப் பாடல்கள்.

தேவாரம் - தெய்வத்தின்மேலே பாடிய திவ்வியமான பாடல்கள். இங்குக் குறித்த தெய்வம் சிவபெருமான். சைவ சமய ஆசாரியர் ஆகிய திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரும், திருநாவுக்கரசு நாயனாரும், சுந்தரமூர்த்தி நாயனாரும் சிவபெருமான்மேல் தோத்திரமாகப் பாடிய பாடல்களே தேவாரம் ஆகும். இப்பாடல்கள் மிகவும் இனிமையும் உருக்கமும் உடையவை. இவற்றை இசையோடு படிப்பவர் எம்மதத்தினராயினும் அவர் தம் கடவுள்மேற் பெரிதும் பக்தி கொள்ளாது இரார். இங்குள்ள பாடல்கள் இரண்டும் சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரத்தில் உள்ளவை.

சுந்தரமூர்த்தி நாயனார்.

இவர் பிராமணர். ஆயினும் இவரை வளர்த்தவன் ஓர் அரசன். சேர அரசராகிய சோமான்பெருமாள் நாயனார் இந்நாயனாரது தோழர். இவர்கள் ஏறக்குறைய ஆயிரத்து நூறு வருஷங்களுக்கு முன் இருந்தவர்கள்.

பாடல்கள்.

1. பொன் ஆர் - பொன் நிறம் பொருந்திய. அரைக்கு அசைத்து - அரையிற் கட்டி - 'அரை' 'கால்' என்று உடம்பின் பாகங்களுக்குப் பெயர் வந்தது ஏன்? மின் - மின்னுதல். மிளிர் - (பொன்போல்) விளங்குகின்ற. கொன்றை - கொன்றை மரத்தின் பூவாற் கட்டிய மாலை. மன் - பெருமை; மன்னே - பெரியோனே. மணியே - பவள நிறமுடையவனே. மழபாடி என்றது தஞ்சாவூர் ஜில்லாவில் திருமழபாடி என்னும் ஊரிலுள்ள கோயிலை. அன்னே - அன்னை போன்றவனே. நினைக்கேன் - நினைப்பேன்.

2. வெய்ய - வெம்மையுடைய; உஷ்ணமுடைய. சுடரோன் - சூரியன். கணங்கள் - கூட்டங்கள். செய்ய - செம்மையான; குற்றமற்ற. செம்மை - செம்மல்; தலைமை. மை - இருள். பொழில்-சோலைகள். இருள் பொருந்திய பொழில் என்றது ஏன்?

நாரைவிடு தூது.

ஓர் ஆளையாவது, தன் நெஞ்சையாவது, கிளி, நாரை, அன்னம், வண்டு, மேகம் முதலியவற்றையாவது முன்னிலைப்படுத்தி, இன்னாரிடம் நீ சென்று இன்ன செய்தியைச் சொல்லு என்று பாடுவது தூது ஆகும். இங்கே நாரையைத் தூதாக விட்டவர் சத்திமுத்தப் புலவர்.

சத்திமுத்தப் புலவர்.

இவர் கும்பகோணத்திற்கு அருகிலுள்ள திருச்சத்திமுத்தம் என்னும் ஊரில் இருந்தவர். மிகவும் ஏழையாகிய இவர் பாண்டியனிடம் பரிசில் பெற விரும்பி மதுரைக்குச் சென்றார். ஆயினும் அன்று பொழுதானபடியால், அரசனை அடுத்தநாட் காலையிற் காண்பது நலம் என்று நினைத்து, அந்நகரத்தின் நடுவே வெளியூரார் வந்து தங்கும் மரத்தடியிற் படுத்துப் பலவாறு எண்ணமிட்டுக்கொண்டிருந்தார். அப்போது ஆணும் பெண்ணுமாகிய இரண்டு நாரைகள் தெற்கிலிருந்து வடக்குமுகமாகப் பறந்துபோவதை அவர் கண்டு இப்பாடலைக் கூறினார்.

பாடல்.

1. நாராய் - நாரையே.
2. படு - உண்டாகின்ற. பிளந்தன்ன - பிளந்தது அன்ன; பிளந்தது போன்ற.
5. குமரி - ஒரு ஆறு; இதைக் கடல் பொங்கி அழித்தது என்பர். (கன்னியா குமரிக்குப் பக்கத்திலுள்ள கடலுக்குக் குமரி என்னும் பெயர் இருந்தது என்பது பாண்டியனுக்கு வழங்கிய 'குமரிச்சேர்ப்பன்' என்னும் பெயரால் விளங்கும். சேர்ப்பு - கடற்கரை).

7. வாவி - குளம்.

8. கனைகுரல் - உரத்தகுரல்.

8–9. பல்லிப்பாடு - கௌளி சொல்லுதலை.

10. கோமான் - அரசன். வழுதி - பாண்டியன். கூடல் - மதுரை ; நான்கு ஊர்கள் கூடி உண்டானதால் இப்பெயர் பெற்றது என்பர் சிலர் ; சிலர் வேறு காரணங்களுங் காட்டுவர். மன்றம் - ஊருக்கு நடுவே வெளியூரார் வந்து தங்கியிருக்கும் மரத்தடி.

11. வாடை - வடக்கிலிருந்து வீசும் குளிர் காற்று.

12. கையதுகொண்டு - கைகளால். மெய்யது - உடம்பை. பொத்தி - புதைத்து ; மறைத்து.

13. காலது கொண்டு - கால்களால். மேலது - உடம்பின்மேல்பாகத்தை. தழீஇ - தழுவி ; மறைத்து.

14. பேழை - பெட்டி. பாம்பு என - நாகத்தைப்போல. உயிர்க்கும் - 'உஸ்ஸ்ஸ் உஸ்ஸ்ஸ் ! என்னும்.

நள வெண்பா.

நளனைப்பற்றிய 'வெண்பா' என்னும் ஒருவகைப் பாட்டால் ஆகிய நூல். 'நைடதம்' என்னும் நூலும் அவனைப்பற்றியதே. ஆயினும் அது 'விருத்தம்' என்னும் வேறொருவகைப் பாட்டால் ஆனது.

நளன் பெரிய சக்கரவர்த்திகளில் ஒருவன். அவன் கதையைக் கேட்ட வரை இக்கலியுகத்துக்குத் தெய்வமாகிய கலிபிடியாது என்னும் ஒரு கொள்கை உண்டு.

தருமர் சூதாட்டத்தில் தோற்று வனவாசம் செய்கையில் ஒரு முனிவர் அவரிடம் சென்றிருந்தார். அப்போது தருமர், 'என்னைப்போலச் சூதாடித் தோற்று வருந்தியவர் உண்டோ !' என்று சொல்ல, சூதாடித் தோற்று வருந்திய நளன் வரலாற்றை அம்முனிவர் அவருக்குக் கூறினார். ஆகையால் இக்கதை மகாபாரதத்தில் உள்ளது. இதை எடுத்து வெண்பாவில் மிக அழகாகப் பாடினவர் புகழேந்திப் புலவர்.

புகழேந்திப் புலவர்.

எல்லாப் புலவர்க்கும் வெண்பாப் புலி என்பர். ஆயினும் பிற்காலத்திலுள்ள புலவர்களில் இவரே வெண்பாப் பாடுவதில் வல்லவர். 'வெண்பாவிற் புகழேந்தி' என்றும், 'பாட்டால் உயர்ந்த புகழேந்தி' என்றும் இவரைச்சிறப்பித்துக் கூறுவர்.

சந்திரன் சுவர்க்கி என்னும் ஒரு சிற்றரசன் இவரை ஆதரித்து வந்தான். அதனால் இவர் தமது நளவெண்பாவில் அவனைப் பலவிடங்களிற் புகழ்ந்துள்ளார்.

ஏறக்குறைய அறுநூற்று ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னே இலங்கையில் அரசாண்ட ஆரிய சேகரனையும் இவர் சென்றுகண்டு பரிசில் பெற்றனர் என்று சில தனிப்பாடல்கள் கூறுகின்றன.

புகழேந்திப் புலவர் பாடியனவாகப் பல புதிய நூல்கள் இக்காலத்தில் வழங்குகின்றன.

பாடல்கள்.

1. பொடி ஆட - புழுதி படிய. கொடியானுக்கு - சூதில் தன்னை வென்ற புட்கரனுக்கு. பார் - பூமியை ; நாட்டை.

2. யாங்கு - எங்கே.

3. வடி - கூர்மை. இலைவேல் - இலைபோன்றவேல். ஆதரவு - ஆசை.

4. மென்றல் - வாசனை. கோதை - மாலை அணிந்த தமயந்தி. குதலை - இனிய சொற்கள் குதலை வாயாள் - தமயந்தி.

5. வண்டு - தேனீ. தார் - மாலை. தண்டா - ஓயாமல். முனிந்து - கோபங்கொண்டு அரசு அறியா வேந்தன் - புட்கரன்.

6. நைய்யும் - வருந்தும். முறுவலியா - புன்சிரிப்புக்கொண்டு. மன் - அரசர் ; பகையரசர்.

7. சந்தம் - அழகு. கழல் - வீரகண்டை அணியத்தக்க. தாமரை - செந்தாமரை போன்ற பாதங்கள்; நளனுடைய இளம் குமாரன் பாதங்கள். பைந்தளிர் - பசுமையான அதாவது புதிய தளிர் போன்ற பாதங்கள்; நளனுடைய இளம் குமாரத்தியின் பாதங்கள். எந்தாய் - எங்கள் தந்தையே. வடம் - கழுத்துக் கயிறு. களிறு - போர்யானை. கலுழ்ந்து - அழுது.

8. காதல் - அன்பு. சுரம் - பாலைவனம். ஏதம் - துன்பம். மாதராய் - பெண்ணே. வீமன் - தமயந்தியின் தந்தை. விண்ணவர் - தேவர்கள். தாமம் - சுயம்வரமாலை. புனைவானை - (தனக்குச்) சூட்டின தமயந்தியை.

9. நோக்கால் - தன் கண்களால்.

10. அடிசில் - சோறு.

11. கலை - கல்வி. துறை - வகைகள். தோய்தல் - நன்றாய்ப் பயிலல்.

12. ஆற்றல் - வலி; வல்லமை. எழில் - அழகு. கமலம் - செந்தாமரையாகிய, செம்பதிக்கே - செம்மையாகிய இடத்திலே. தேன் - இனிய அதாவது அழகிய லக்ஷ்மி (போன்ற தமயந்தி).

13. மடவாய் - இளம்பெண்ணே. மாற்றம் - சொல்.

14. அமுதம் - உணவு. தேக்கி - நிறைய உண்டு. பேடை - பெட்டை; பெண்.

15. விதர்ப்பன் - விதர்ப்ப நாட்டரசன்; தமயந்தியின் தந்தை. ஏதிலர் - பகைவர்.

16. பயந்தாள் - பெற்றவள். இந்து - பூரணச் சந்திரன்.

17. மறை - வேதம்.

18. சேல் - சேல் மீன்கள். வாவி - குளங்கள். காலில் - காலால். ஞாலம் - பூமி; தரை. கள்ளி - கள்ளிச் செடிகளும். வேகத்து அரவு - கடுமையை உடைய நாகங்கள். பொடி - சாம்பல்.

19. கல் நிறத்த - கல்லின் தன்மையுள்ள. புள் - பறவை.

20. தேன் - வண்டுகள். துழாய் - துளசிமாலை அணிந்த. செங்கண் கருமுகில் - செங்கண்களை உடைய கருமையாகிய மேகம் (போன்ற இராமனை). மான் - மாரீசனுகிய மாயமானை. மயில் - மயில்போன்ற சீதையை. கிள்ளை - கிளி.

21. எய்க்கும் - இளைக்கும்; இளைப்படையும். அன்றே - அப்போதே. மன் - அரசன்.

22. கொற்றம் - வெற்றி. கயற்கண் - கெண்டைமீன்போன்ற கண்களை உடைய. கொடி - பூங்கொடி போன்றவளே. இருவோரும் - நாம் இருவரும். துகில் - வஸ்திரம். பரிந்து - விரும்பி.

23. கூந்தல் - கொண்டை. குயில் - குயில்போன்ற இனிய குரல் உடைய தமயந்தி.

24. காவி - நீல மலர். கண்ணியந்தோள் - மாலையணிந்த தோள்களை உடைய. கள் - தேன். வேட்டு - விரும்பி. கனகம் - பொன். ஆதரித்த - விரும்பி ஆடிய.

25. பானு - சூரியன். படு - ஒலிக்கும். கடல் - மேல்கடல். கானம் - கடற்கரை. அடம்பு - அடப்பங்கொடிகள். கவடு - பிளவு. எய்க்கும் - ஒக்கும்.

26. வேலை - சமயம். குடைநிழற்கீழ் - அரசாட்சியின் நன்மையினுல். வாழ்மண் - வாழும் மண்ணுலகத்தாருடைய. தபம் - தவம்.

27. மூரி இரவு - முன் இரவு.

28. வையம் - உலகம். மகரயாழ் - ஒருவகை யாழ் அல்லது வீணை. கொதுகு - கொசுகு, கொசு. தோட்ட - தோடு அதாவது பூ இதழ்களாற் கட்டப்பட்ட. வார் - நீண்ட.

29. புன்கண் - துன்பம். கூர் - மிகும்.

30. காரிகை - அழகிய பெண். நீத்து - விட்டுவிட்டு. குறித்து - நினைத்து.

31. முதல் - வேர்.

32. ஒருகால் - ஒருதரம். ஆயர் - இடையர். தோயல் - தயிர். காலன் - யமன்.

33. கோக்காதலி - ராஜ குமாரத்தி. குறிக்கொண்மின் - கவனித்துக்கொள்ளுங்கள்; பார்த்துக்கொள்ளுங்கள்.

34. தாரு - தரு; கற்பக விருக்ஷம். வரை - மலை. விரவார் - சேராதவர்; பகைவர்.

35. அமளி - படுக்கை. கையரிக்கொண்டு - தேடிக்கொண்டு. ஐயகோ - ஐயோ. மேதி - எருமைகள். மென்கரும்பு - கரும்பில் ஒருவகை. திரு - லக்ஷ்மிபோன்ற தமயந்தி.

36. தரியாது - சகியாமல். அலைத்து - அடித்துக்கொண்டு. இருள்வாய் - இருளில். வெய்யோன் - சூரியன். வாவி - தாவிச்செல்லும். பரி - குதிரைகள்.

37. மடந்தை - பெண். கைவாங்க - நீங்க. கரம் - கிரணம்.

38. எய்து - அடைந்த. துயரக்கரை - துன்பக்கடலின் கரை.

39. வெறித்த - அச்சம்கொண்ட; மருண்ட. ஊழி - நெடுங்காலம்.

40. கரி - யானை. அரவு - பாம்பு; மலைப்பாம்பு. ஓராது - கவனியாமல். அறல் - நெற்றிபுடைய கருமணல் போன்ற. புலர்ந்து வாடி.

41. வாள் - கொடிய. தாள் - பாதம். தமியேனை - ஏழையாகிய என்னை; ஆருமற்ற என்னை.

42. பொரு - போர் செய்யும்.

43. மல் - மல்ல யுத்தம். தோள் - தோளை உடைய அரசன். குழல் - கொண்டை. கார் கருமேகம்.

44. ஆடு அரவு - அடுதலை அதாவது கொல்லுதலைச் செய்கின்ற அரவு. துவர் - பவழம்.

45. ஒற்றி - உற்றுக் கேட்டுக்கொண்டு. வெண் தோடன் - வெண்மையாகிய தோடுகளைக் காதில் அணிந்தவன். பங்கி - தலைமயிர்.

46. சங்கநிதி - சங்கு வடிவானதும், கேட்ட செல்வத்தைத் தருவதும், இந்திர லோகத்தில் உள்ளதுமான ஒரு தெய்வப் பொருள் என்பர். கடிந்த - ஓட்டிய. காம்பின்வாய் - மூங்கி லாற் செய்யப்பட்ட.

47. கைம்மாறு - பிரதி உபகாரம்.

நல்வழி.

உயர்நிலை பெறவேண்டிய மானிடர் கைக்கொள்ளவேண்டிய நல்வழி களைக் காட்டும் நூலாதலால் இந்நூல் இப்பெயர் பெற்றது. இதைப் பாடிய வர் அவ்வையார் என்னும் ஓர் அம்மையார் என்பர்.

அவ்வையார்.

'வெம்மை' என்பது 'வெவ்வர்' என்றும், 'செம்மை' என்பது 'செவ்வை' என்றும் வருவது போல 'அம்மையார்' என்பது 'அவ்வை யார்' என்று வந்தது. ஆகையால், அவ்வை என்பதற்குத் தாய் என்பது பொருள். நோன்பு அநுஷ்டித்துவரும் பெண்ணையும் அவ்வை என்பர். இதனால் அவ்வையார் பலர் இருந்திருக்கலாம் என்பது விளங்குகின்றது.

ஏறக்குறைய ஆயிரத்து எண்ணூறு வருஷங்களுக்குமுன் மிகவும் சிறந்த தமிழ்ப் பாடல்கள் பலவற்றைப் பாடியுள்ள அம்மையார் ஒருவரே முதல் அவ்வையார் ஆவர். ஆயினும், நல்வழியைப் பாடிய அவ்வையார் அவர் அல்லர்.

வான்கோழி அமெரிக்காக் கண்டத்திலுள்ள பறவை என்றும், அதை இந்து தேசத்திற்கு ஐரோப்பியர் கொண்டுவந்தார் என்றும், இந்த அவ்வை யார் பாடல் ஒன்றில் அக்கோழி சொல்லப்பட்டிருப்பதால், ஐரோப்பியர் இங்கு வந்தபின்தான் அப்பாடல் பாடப்பட்டிருக்கவேண்டும் என்றும் ஒரு ஐரோப்பியப் புலவர் எழுதியிருக்கின்றார். ஆயினும், பல நூற்றாண்டு களுக்கு முன்னிருந்த சில தமிழ் உரையாசிரியர்கள் தங்கள் உரைகளில் இந்த அவ்வையார் நூல்களிலிருந்து சில அடிகளை எடுத்துக் காட்டியிருப்ப தால், இந்நூல்கள் அவ்வளவு புதிய நூல்களும் அல்ல.

இந்த அவ்வையார் செய்த வேறு நூல்கள் ஆத்திசூடி, கொன்றை வேந்தன், வாக்குண்டாம் என்னும் மூதுரை முதலியன என்பர்.

'அவ்வை' என்பதை 'ஔவை' என்றும் எழுதுவர்.

பாடல்கள்.

1. ஆன முதலில் - தனக்கு உண்டான வரும்படியில். செலவு ஆனான் - செலவு செய்தவன். பொல்லான் ஆம் - பொல்லாதவன் ஆவான். நாடு - (இதன் காரணத்தை) ஆராய்ந்து அறிந்துகொள். அக்காரணம் எவை ?

2. வெட்டனவை - கொடிய சொற்களும் செயல்களும். மெத்தனவை - இனிய சொற்களையும் செயல்களையும். வேழம் - (போர்) யானை. கோல் - அம்பு. பஞ்சு - உள்ளே அதிக மாகப் பஞ்சிட்டுத்தைத்துப் போர் வீரர் அணியும் சட்டை. இருப்புப்பாரை - இரும்பாற் செய்த பாரை. நெக்குவிடா - பிளவாத. வெட்டனவை மெத்தனவை வெல்லா என் பதற்கு ஒரு உதாரணம் தருக.

3. மக்கள் - மனிதர். தூவா - தூவி. விரைத்தல் - விதைத்தல். பூவாதே காய்க்கும் மரம் சில கூறுக.

நன்னெறி.

'நல்வழி' போல இந்நூலும் நல் நெறிகளைக் காட்டுவதால் இப்பெயர் பெற்றது. இதன் ஆசிரியர் சிவப்பிரகாச சுவாமிகள்.

சிவப்பிரகாச சுவாமிகள்.

இவர் முந்நூறு வருஷங்களுக்கு முன்னிருந்த ஒரு பெரும் தமிழ்ப் புலவர். இவரது நூல்கள் எல்லாம் சிறந்த கருத்துக்களேயும் மிக அழகிய வருணனைகளையும் உடையன. ஒரு நாள் இவர் தமது தம்பிமாரோடு கடற் கரைக்குச் சென்று உட்காந்திருந்த காலத்தில் பொழுதுபோக்காக இவர் பாடிய பாடல்களே நன்னெறிப் பாடல்களாகும் என்பர்.

பிரபுலிங்கலீலை என்னும் பெயர்பெற்ற நூலும் இவர் பாடியதே.

பாடல்கள்.

1. கவர்ந்து - தன்வசமாக்கி. தடங்கரை - தடகரை ; பெரியகரை.
2. நோய் - துன்பத்தை.புல்லியர்பால் - அற்பரிடத்தில் ; அறிவில்லாதவரிடத்தில். அன்றியே - அல்லாமல். துப்பின் - தனது பலத்தினுல். சுழற்றுங்கொல் - சுழற்றுமோ. சூறுவளி - சுழல்காற்று. துரும்பு - துரும்பை.
3. எரி - தீ. இழுது - நெய். இழாய் - ஆபரணங்களை யுடையவளே. மண்டு - மிக்க. கலுழும் - அழும் ; கண்ணீர்விடும்.
4. புகல்வது - சொல்வது. சேக்கை - படுக்கை. பொழில்வாய் - சோலையில்.
5. தம்பால் - தம்மிடம். செறிபழி - உண்டாகும் குற்றங்களை. பிறைநுதலாய் - எட்டாம்நாட் பிறைச் சந்திரனைப்போன்ற நெற்றியுடையவளே. வண்ணம் - அழகு. வாள்விழி - ஒளி பொருந்திய கண்கள்.

கபிலர் அகவல்.

'அகவல்' என்பது தமிழில் உள்ள ஒருவகைப் பாட்டு. அது மூன்று அடிகளுக்குக் குறையாமலும் ஆயிரம் அடிகளுக்கு மிகாமலும் வரும். 'கபிலர் அகவல்' 142 அடிகள் கொண்ட ஒரே அகவல் உடைய ஒரு சிறு நூல்.

திருவள்ளுவர் பாடிய திருக்குறளிலுள்ள முதலாவது பாட்டில் 'ஆதி பகவன்' என்னும் பதங்கள் வருகின்றன. அவற்றை எடுத்து எவரோ ஒருவர் பின்வரும் கதையைக் கட்டியிருக்கின்றுர்.

ஆதி என்னும் புலைச்சிக்கும் பகவன் என்னும் பிராமணனுக்கும் கபிலர், உப்பை, உறுவை, அவ்வை, வள்ளி, வள்ளுவர் அதிகமான் என்னும் ஏழு குழந்தைகள் பிறந்தன. அவற்றை அவர்கள் அங்கங்கே விட்டுப் போய்விட்டனர். அக்குழந்தைகள் திக்கற்றுக் கிடந்ததைக் கண்ட சிலர் அவற்றை எடுத்து வளர்த்துவந்தனர். கபிலரை எடுத்து வளர்த்தவர் ஒரு பிராமணர். அவர் தமது வளர்ப்புப் பிள்ளைக்குத் தக்க காலத்தில் பூணுநூற் சடங்கு செய்ய நினைத்துத் தம் இனத்தாரை அழைத்தபோது, அவ்வினத்தார் ஒன்றுகூடிவந்து, 'இன்னஜாதி, இன்ன குலம் என்பது ஒன்றும் தெரியாத பிள்ளைக்கா உபநயனம் செய்வது !' என்று சொல்லித் தடுத்தனர். அப்போது வயதிற் சிறுவராயினும் அறிவிற் பெரியவரான கபிலர் அந்த பிராமணர்களை நோக்கி, பிறப்பைப் பார்க்கிலும் அறிவும் ஒழுக்கமுமே சிறந்தன என்று உபதேசித்தார்.

இக்கட்டுக் கதையையே உடையது இந்நூல், என்றுலும் பல அழகான அடிகள் இதில் உண்டு.

அடிகள்.

2. நா - நாக்கு. கடிப்பு - தமுக்கு அடிக்கும் சிறு கொம்பு. பறை - தமுக்கு.
3. சாற்ற - சொல்ல. கேண்மின் - கேளுங்கள்.
5. துயில் - தூக்கம்.
7. ஆக்கை - உடம்பு.
10. அதா அன்று - அது அன்றி ; பாட்டில் 'அன்றி' என்பது 'அன்று' எனவரும்.
15. ஒன்றே - வீடு அதாவது முத்தி பெறும் வழியையே. 'ஒன்றெனப்துவே வீடுபேருகும்': 'ஏகமே வீடுபேறு'.
18. இன்னே - இப்போதே.
20. நமன் - யமன்.
22. கூற்றுவன் - யமன்.
26. நல்குரவு - தரித்திரம்.

27. உன்னுன் - நினைக்கமாட்டான்.

28. தரியான் - காத்திருக்கமாட்டான். கணம் - க்ஷணநேரம். தறுகண் - அஞ்சாமை ; கொடுமை.

29. கொடு - கொண்டு.

33. காண்கிலிர் - காணமாட்டீர்.

36. ஆர்த்து - கட்டி.

37. கூறை - வஸ்திரம். கொளீஇ - கொள்ளும்படிசெய்து ; கட்டி.

38. ஈமம் - சுடுகாடு.

39. பொடி - சாம்பல். புனல் - நீர்.

40. தமர் - தம் சுற்றத்தார். புந்தி - புத்தி ; மனம். நைந்து - வருந்தி.

41. சலம் - பொய். சதுர் - மெய்யின் திறம் ; மெய்.

42. மாரி - மழை. வரைந்து - அகற்றி ; விட்டு.

46. மேல் நான்கு சாதி - பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர்.

47. கீழ் நான்கு சாதி - மேல் நான்கு சாதிகளின் கலப்பால் உண்டான அநுலோமர், பிரதிலோமர், அந்தராளர், விராத்தியர். அநுலோமர் - உயர்குலத் தகப்பனுக்கும் இழிகுலத் தாய்க்கும் பிறந்தவர். பிரதிலோமர் - இழிகுலத் தகப்பனுக்கும் உயர்குலத் தாய்க்கும் பிறந்தவர். அந்தராளர் - அநுலோமத் தகப்பனுக்கும் பிரதிலோமத் தாய்க்கும் பிறந்தவர். விராத்தியர் - பிரதிலோமத் தகப்பனுக்கும் அநுலோமத் தாய்க்கும் பிறந்தவர்.

48. திரு - செல்வம்.

49. தரணி - உலகம்.

52. வழிபடும் - வணங்கும்.

55. புலை - துர்க்குணம்.

56. நிற்பதை - நிற்பதால் உண்டாகும் மேன்மையை.

57. அல்லதை - அல்லாத கடவுளை.

59. சிறப்பு - கல்வி. சீலம் - நல் ஒழுக்கம்.

60. பேதையீரே - அறிவில்லாதவரே.

AGENTS FOR THE SALE OF MADRAS GOVERNMENT PUBLICATIONS

IN INDIA

The Superintendent, Nazair Kanun Hind Press, Allahabad.

M. C. Kothari, Bookseller, Publisher and Newspaper Agent, Raopur Road, Baroda.

R. Sunder Pandurang, Kalbadevi Road, Bombay.

D. B. Taraporevala Sons & Co., Bombay.

Thacker & Co. (Ltd.), Bombay.

N. S. Wagle, Circulating Agent and Bookseller, No. 6, Tribhuvan Road, Girgaon, Bombay.

The Burma Book Club (Ltd.), 240-a, Merchant Street, Rangoon, Burma.

The Book Company, Calcutta.

Butterworth & Co. (Ltd.), 6, Hastings Street, Calcutta.

R. Cambray & Co., Calcutta.

Thacker, Spink & Co., 3, Esplanade East, Calcutta.

Shri Shankar Karnataka Pustaka Bhandara, Malamaddi, Dharwar.

The Dominion Book Concern, Booksellers, Publishers, Main Road, Hyderabad.

Ramakrishna & Sons, Lahore.

The Upper India Publishing House (Ltd.), Lucknow.

The Christian Literature Society for India, Post Box No. 501, P.T., Madras.

Higginbothams (Ltd.), Mount Road, Madras.

The Law Book Depot (Ltd.), 15 & 16, Francis Joseph Street, Madras.

S. Murthy & Co., Madras.

G. A. Natesan & Co., Madras.

P. R. Rama Iyer & Co., Madras.

P. Varadachari & Co., Booksellers, 8, Linga Chetti Street, Madras.

The Universal Publishing Co., Bezwada (Madras).

E. M. Gopalakrishna Kone, Pudumantapam, Madura (Madras).

The Modern Stores, Salem (Madras).

The Srivilliputtur Co-operative Trading Union (Ltd.), Srivilliputtur (Madras).

D. Sree Krishnamurthi, Editor, "Grama Paripalana," Morrispet, Tenali, Guntur (Madras).

S. Krishnaswami & Co., Teppakulam Post, Trichinopoly Fort (Madras).

City Book Co., Post Box No. 283, Madras.

Nivasarkar, Manager, "Hitawada," Nagpur.

The International Book Service, Booksellers, etc., Poona 4.

The Booklovers' Resort, Booksellers and News Agents, Taikad, Trivandrum.

IN STRAITS SETTLEMENTS

The Federal Rubber Stamp Co., Penang.

NOTICE

Official publications may be obtained in the United Kingdom either direct from the office of the High Commissioner for India, India House, Aldwych, London, W.C. 2, or through any bookseller.